# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 003 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 13, சனிக்கிழமை 29.11.2014


29 NOV 2014

காலநிலை

மழையுடன் கூடிய காலநிலை காணப்படும். காற்று மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் வீசும்.

## தடைப்படுமா ஜனாதிபதி தேர்தல்?



"பொது சன வாக்கெடுப்பு நடத்தாது 18ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளார் மஹிந்த. அரசமைப்பை அவர் மீறியுள்ளார். அதனால் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் தகுதியை இழந்துள்ளார். அவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்க வேண்டும்"– என்று மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேசிய சிங்கள பௌத்த மக்கள் கட்சியின் தலைவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். 18 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் தற்போது திடீரென இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பக்.20

# நீதிமன்றில் மஹிந்தவை நிறுத்தவே மாட்டேன்

## அடித்துக் கூறினார் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால கோத்தபாய மற்றும் படையினரைக்கூடப் பாதுகாப்பாராம்



யாழ்ப்பாணம், நவம்பர் 29

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்றாலும் அவரை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்த விடமாட்டேன் என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன.

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையோ அவரது குடும்பத்தினரையோ அல்லது போரை வென்றெடுத்த படையினரையோ, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல நான் அனுமதிக்கமாட்டேன்" என்று நேற்றுக் காலை கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் மைத்திரிபால. அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தால், அவரைச் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்போவதாக விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய புலம்பெயர் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது. நான் ஜனாதிபதியான பின்னரும், சர்வதேச ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தச் சவாலுக்கு எதிராகவும், குரல் கொடுப்பேன். பக்.21

## தலைவிதியை மாற்ற உருவெடுத்த மைத்திரி!

நாட்டில் மீண்டும் ஜனநாயக வாதத்தை நிலைநிறுத்தவல்ல, சகல எதிரணித் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பொது வேட்பாளர்.....

பக்கம் 06

### அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா....



கொழும்பு டிஎஸ்.சேனநாயக்காக கல்லூரியின் ஸ்தாபகர் ரி.அலஸ்ஸின் சிலை பாடசாலை வளாகத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். விருந்தினராக ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்துகொண்டார். நிகழ்வில் இருவரும் அன்னியோன்னியமாக அளவளாவிக் கொண்டனர். (ற–5)

## சுன்னாகம் நிலத்தடி நீர் பிரச்சினையை தீர்க்க வடமாகாண சபை நடவடிக்கை

### முதலமைச்சர் நேற்று நேரில் சென்று ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 29

சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்து குடிதண்ணீர் மாசடைந்தமை தொடர்பில் மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் நேற்று நேரில் சென்று ஆராய்ந்தார்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பெறப்படவேண்டிய நிபுணத்துவ ஆய்வுகளைப் பெற்று தேவையான முழு நடவடிக்கைகளையும் வடக்கு மாகாண சபை மேற்கொள்ளும் என்று முதலமைச்சர் அப்போது தெரிவித்தார்.

குடிதண்ணீர் மாசடைந்ததால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்குத் தற்காலிகத் தீர்வாக, குடிதண்ணீர் விநியோகத்தை ஒழுங்காக மேற்கொள்வதற்குரிய நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். பக்.17

## நெல்சிப் நிதி மோசடி குறித்து விசாரணை இன்னமும் இல்லை

யாழ்ப்பாணம், நவ.29

நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் இன்னமும் விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை.

விசாரணை நடத்துவதற்கான அதிகாரி நியமிக்கப்படாமையே அதற்காக காரணம் என்று கூறப்படுகின்றது. பக்.09

## 35,541 பேர் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.29

வடக்கில் கடந்த மூன்று நாள்களாகப் பெய்துவரும் கடும் மழையால் 9 ஆயிரத்து 210 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 541 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

63 வீடுகள் மழையால் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளதுடன், 887 வீடுகள் பகுதி அளவில் பாதிப்படைந்துள்ளன. பக்.20

## தமிழ்க் கூட்டமைப்பிடம் ஆதரவு கோர மாட்டோம்: அரசு



கொழும்பு, நவ.29

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் எண்ணம் தமக்கு இல்லை என அரசு அறிவித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அநுர பிரியதர்ஷன யாப்பா, "தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் பேச்சு நடத்தும் எண்ணம் இல்லை. எமக்கு வடக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மூலமாக நாம் அங்குள்ள மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்வோம்" என்று கூறினார். (ற)

## சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

உள்ளே படியுங்கள்....

## அஸ்வர் விலக அலி நியமனம்



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்று தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். அவரது இடத்துக்கு எம்.எஸ்.எஸ். அமீர் அலி நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை மக்கள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான இவர் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆவார். பக்.10

## தூக்கு பெற்ற 3 மீனவர்களின் குடும்பங்களும் அலைக்கழிப்பு

யாழ்ப்பாணம், நவ.29

போதைப் பொருள் கடத்தினர் என்ற குற்றத்துக்காகச் சாவுத் தண்டனை வழங்கப்பட்டுள்ள 3 மீனவர்களையும் ஜனாதிபதியுடன் பேசி விடுவிப்பேன் என்று கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்த மீனவர்களின் குடும்பங்களையும், ஏனைய மீனவர்களையும் தீர்வேதும் வழங்காது அலைக்கழித்து வருகின்றார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. பக்.18

# செய்திகள்

# பாடசாலை காலை கூட்டத்தில் எயிட்ஸ் பற்றி விழிப்புணர்வு

## திங்கட்கிழமை நடத்துங்கள் என்று சுகாதாரப் பணிமனை கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாண மாவட்டத்தில் எயிட்ஸ் தாக்கத்தின் பரம்பலை கருத்தில் கொண்டு, நாளை மறுதினம் திங்கட்கிழமை அனைத்துப் பாடசாலைகளின் காலைக் கூட்டத்தின்போது எயிட்ஸ் பற்றிய தகவல்களைப் பகிருங்கள் என்று கோரியுள்ளது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை.

டிசெம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. எம்து மாவட்டத்தில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில் அந்த நோய் குறித்து மாணவர்கள் அறிந்திருத்தல் அவசியம் என்றும் சுகாதாரப் பணிமனை தெரிவிக்கின்றது.

இதுவரை எயிட்ஸ் தொற்றுக்குள்ளாகியவர்கள் வெளிநாடுகளில் இருந்தே அவற்றைப் பெற்றுக் கொண்டவர்களாக இருந்தனர். ஆயினும் தற்போது உள்நாட்டிலேயே எயிட்ஸ் தொற்றுக்குள்ளாகியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-4)

### எயிட்ஸ் - சில தகவல்கள்

எயிட்ஸ் என்பது பெற்ற நீர்ப்பீடனக் குறைபாட்டுச் சிக்கல் எனப் பொருள்படும்.
எயிட்ஸ் என்பது எச்.ஐ.வி. எனப்படும் ஒருவகை வைரஸ் கிருமியினால் ஏற்படும் நோயாகும்.
எச்.ஐ.வி கிருமித் தொற்றுக்கு உள்ளான ஒருவர் பலவருடங்கள் வரை நோய் அறிகுறிகளை வெளிக்காட்டாமல் பலருக்கு நோய்க்கிருமியை பரப்பிக் கொண்டிருப்பார்.
எச்.ஐ.வி கிருமி தொற்றி எயிட்ஸ் நோய்க்கான அறிகுறிகள் தோன்ற பல வருடங்கள் எடுக்கும். இது வளர்ந்தவர்களில் 8 தொடக்கம் 12 வருடங்களாகவும், சிறியவர்களில் 2 தொடக்கம் 5 வருடங்களாகவும் இருக்கும்.
எச்.ஐ.வி கிருமியானது மனிதனது நோயெதிர்ப்புச் செயற்பாட்டிற்கு பொறுப்பாகவுள்ள நிணநீர்த்தொகுதியினைத் தாக்கி நோயெதிர்ப்புச் சக்தியினை அழித்து ஏனைய தொற்று நோய்களை உண்டாக்குகின்றது. உடலால் அவற்றை எதிர்க்க முடியாதிருக்கும்.

### எச்.ஐ.வி. தொற்றக்கூடிய சந்தர்ப்பங்கள்

பாதுகாப்பற்ற ஒழுக்கம் மீறிய பாலியல் தொடர்பு மூலமாக
எச்.ஐ.வி. தொற்றுள்ள தாயிலிருந்து அவரின் வயிற்றில் வளரும் குழந்தைக்கு.
வேறொருவருக்குப் பாவித்த அல்லது தொற்று நீக்கம் செய்யாத சிலவகை உபகரணங்களைப் பாவிப்பதால்.
உதாரணம்: மருந்தேற்றும் ஊசி, சவர அலகு போன்றன.
தொற்றுள்ளதா எனப் பரிசோதனை செய்யப்படாத இரத்தத்தை ஏற்றுவதனால் அல்லது உறுப்புக்களை மாற்றுவதனால்
போதைப்பொருள் பாவனையாளர்களிடையே.

### எச்.ஐ.வி. தொற்றாத சந்தர்ப்பங்கள்

கை குலுக்குவதனால் அல்லது தொடுவதனால்.
சாதாரணமாகக் கட்டியணைப்பதனால்.
ஒன்றாகச் சேர்ந்து வாழ்வதனால்.
ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவதனால்.
ஒரே பாவனைப் பொருள்களைப் பயன்படுத்துவதனால்.
உடைகள், துவாய்கள் என்பவற்றைப் பரிமாறிக் கொள்வதனால்.
ஒரே மலசலகூட இருக்கையைப் பாவிப்பதனால்.
தும்மல் இருமல் மூலமாக. நுளம்பு, மூட்டைப் பூச்சி மூலமாக.
ஒன்றாக நீந்துதல் அல்லது நீராடுதல்.

## இராணுவச் சீருடையை ஒத்த காற்சட்டை; ஒருவர் கைது



யாழ்ப்பாணம், நவ.29

பொலிஸ்காவலில் உள்ள திருட்டு மணல் ஏற்றிய ஒருவரைப் பார்ப்பதற்காகச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இராணுவச் சீருடைக்கு ஒத்த காற்சட்டையை (ஜம்பர்) அணிந்து சென்றதாலேயே கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியபோது, வழக்கைத் தள்ளுபடி செய்தது நீதிமன்றம்.

ஊர்வாற்றுறைப் பகுதியில் மணல் ஏற்றிய ஒருவரே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரைப் பார்க்கச் சென்றவரே கைது செய்யப்பட்டார். தான் அந்த காற்சட்டையைக் கடையில் வாங்கியதாகக் கூறினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார். குற்றஞ்சாட்டப்பவர் குறித்த காற்சட்டையைக் கடையில் வாங்கியதாகக் கூறினார். அதையடுத்து வழக்கைத் தள்ளுபடி செய்தது நீதிமன்றம். (ற-4)

## உணவகங்களில் உள்ள நீர் சோதனை

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பகுதியில் உள்ள உணவகங்களின் குடிதண்ணீர் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனேகமான உணவகங்களில் குடிதண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் (பில்ரர்) மூலம் குடிதண்ணீர் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தும் பணிகளிலும் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

குடிதண்ணீரால் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தும் முகமாகவே உணவகங்களில் நுகர்வோருக்கு விநியோகிக்கும் குடிதண்ணீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது என்று சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-17)



யாழ்.மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து மதவடி. கண்ணகி முகாம், சபாபதிப்பிள்ளை முகாம் ஆகியவற்றில் தங்கி வாழும் மக்களின் விடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் ஆயிரத்து 80 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் மற்றும் வடமாகாண சபை உறுப்பினருமாகிய அங்கஜன் இராமநாதனால் மதிய உணவு மற்றும் இரவு உணவுகள் வழங்கப்பட்டன. (ற)

## கடலுக்குச் சென்ற மீனவர்கள் கரைக்குத் திரும்பவில்லை



வடமராட்சி, நவ.29

நேற்று அதிகாலை கடலுக்குச் சென்ற சக்கோட்டை மீனவர்கள் மூவர் கரை திரும்பவில்லை என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை 3.30 மணிக்கு கடலுக்குச் சென்ற மீனவர்கள் வழமையாக முற்பகல் 11 மணியளவில் கரை திரும்பிவிடுவர் என்றும், குறித்த மூன்று மீனவர்கள் இரவுவரை கரைதிரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து சக்கோட்டையில் வசிக்கும் பொன்ராசா நித்தியசீலன் (வயது-31), செபமாலை றொபேட் கெனடி (வயது-35), லூசியன் ஜெயவளன் (வயது-28) ஆகிய மூவருமே கரை திரும்பவில்லை.

அதேவேளை, மழை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவும் என்றும், கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் வளிமண்டலத்திணைக்களம் அறிவித்திருந்தது. அதனால் பெரும்பாலான மீனவர்கள் நேற்றுக் கடலுக்குச் செல்லவில்லை. (ற-173)

## சீரழிவுகளில் ஈடுபடுவோரை எச்சரிக்கவே புலி நோட்டீஸ்

### ரி.ஐ.டியால் கைதானவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்.குடாநாட்டில் சமூகச் சீரழிவுகள் தொடர்வதால் அதில் ஈடுபடுபவர்களை எச்சரிக்கை செய்வதற்காகவே விடுதலைப் புலிகள் மீண்டும் வருவார்கள் என்று துண்டுப் பிரசுரம் அச்சடித்து வெளியிட முற்பட்டதாக, பயங்கரவாதப் பிரிவினரால் மீசாலையில் கைதான இளைஞர் தெரிவித்துள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார். யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறுவன் ஒருவன் கையில் பென்றைவ் கொண்டு செல்வது அவதானிக்கப்பட்டது. அவனிடம் சென்று விசாரித்து அதில் உள்ள விடயங்களைப் பார்த்தபோது அதில் புலிகள் சார்பான துண்டுப் பிரசுரம் காணப்பட்டுள்ளது. அதனை அச்சடித்து வருமாறு கூறித் தந்ததாக அந்தச் சிறுவன் கூறியுள்ளான். யார் தந்தார்கள் என்று கேட்டபோது, குறித்த இளைஞனே தந்தார் என்று சிறுவன் கூறினான். அதன்பின்னர் அந்த இளைஞன் கைது செய்யப்பட்டார் என்று அத்தியட்சகர் தெரிவித்தார்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த வீரசிங்கம் சுலக்சன், (வயது-23) தனது வீட்டில் மடிக் கணினி பார்த்துக்கொண்டிருந்தபோது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் சில நாள்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார். அவர் தற்போது கொழும்பு 6 ஆம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். புலிகள் சார்பானதென்று கூறப்படும் துண்டுப் பிரசுரங்களை வைத்திருந்தார் என்று குற்றம் சுமத்தி அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# ஜனரஞ்சகம்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். தேவையற்ற மனச் சஞ்சலத்தை உண் டாக்கலாம். அதனால் எந்த ஒரு வேலைபற்றியும் அதிகம் யோசிப்பதைத் தவிர்ப்பது நல்லது. திடீர் பணத் தேவை உண்டாகலாம்.

**இடபம்**: வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதி காரிகள் மூலம் அனுகூலம் ஏற்பட்டாலும், சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும்.

**கடகம்**: கடன் விவகாரங்களில் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. பெண்கள் எதிலும் எச்சரிக் கையுடன் ஈடுபடுவது நல்லது. கடிதப் போக்குவரத்து மூலம் நல்ல தகவல் வரும். வீண் மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும்.

**சிங்கம்**: எதிர்ப்புகள் அகலும், மனதில் தைரியம் உண்டாகும். எதிர் பாராத திருப்பம் உண்டாகலாம். புதிய நண்பர்கள் சேர்க்கை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும்.

**கன்னி**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். நிலுவையில் உள்ள தொகை வந்து சேரும். சிலருக்கு வேலை மாற்றம் உண்டாகும். குடும்பத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும்.

**துலாம்**: உறவினர்கள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக் கும். பெண்கள் திறமையாகச் சமாளித்து எந்தப் பிரச்சினை யிலும் சாதகமான முடிவை பெறுவீர்கள். இழுபறியாக இருந்த காரியங்களில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும்.

**விருச்சிகம்**: எல்லாக் காரியங்களிலும் நன்மை உண் டாகும் செய் தொழில் சிறக்கும். நண்பர்கள் மூலம் தக்க தருணத் தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களால் வீண் அலைச்சலும் செலவும் ஏற்படலாம்.

**தனுசு**: மேலதிகாரிகளின் ஆதரவை உத்தி யோகத்தர்கள் பெறுவார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். எதிர்பார்த்த பலன் தாமதப்படும். குடும்பத்தில் சுப காரியம் நடக்க லாம்.

**மகரம்**: பிள்ளைகளால் நன்மை ஏற்படும். அவர்களது திறமைகண்டு மனமகிழ்ச்சி கொள்வீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும், செலவும் ஏற் பட்டாலும் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உரு வாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**கும்பம்**: மனதில் தன்னம்பிக்கை உண்டாகும். எல்லாக் கஷ்டங்களும் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வீண் அலைச்சல் உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். புதிய காரி யங்களில் ஈடுபடும் போது சிந்தித்துச் செய்வது நல்லது.

**மீனம்**: நண்பர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடு பட்டு இருப்பவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

## இந்த பாசமிகு தந்தைக்கு ஒரு சல்யூட் போடுங்க...!





சிறிய தவறுகளைத் திருத்திக் கொள்ளாவிட்டால்
பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது

சீன தத்துவ மேதை கான்ஃபூசியஸ்

## ரிலாக்ஸா வாசியுங்க...



ஒரு நாள் காலையில், கணவர் அலுவலகத் துக்கு அவசரமாகச் செல்வதற்கு தயாராகிக் கொண்டி ருக்கின்றார். அப்போது மனைவி கேட்கின்றார், 'டார்லிங்..., இன்று என்ன நாள் என்று ஞாபகம் இருக்கா? (ஒரு செக்கன் டக்னு யோசிக்கின் றான். இது மார்ச் மாதம். ஓ திருமணநாள். சரி சமாளிப்போம் என்று எண்ணிக் கொண்டு)

'என்ன டார்லிங்... நான் மறப்பேனா ? மாலை 5 மணிக்கு தயாராக இரு. வெளியில் எங்கை யாவது போகலாம், என்று சொல்லி விட்டு கணவர் அலுவலகம் சென்று விடுகின்றார்.

முற்பகல் 11 மணி, வீட்டின் அழைப்பு மணி ஒலிக்கின்றது, மனைவி கதவைத் திறக்கின்றார். அங்கே ஒருவன், கையில் பூக் கொத்துடன் நிற் கின்றார். 'அம்மா, இதை உங்கள் கணவர் கொடுக் கச் சொல்லி அனுப்பினார்' என்று சொல்லிவிட்டு வந்தவன் சென்று விட்டான். அவளுக்கு அதைப் பார்த்ததும் சந்தோஷம்.

சிறிது நேரத்தில் மீண்டும் அழைப்பு மணி ஒலிக்கின்றது. கதவைத் திறக்கின்றார். அங்கு ஒருவர் பரிசுப் பொதியுடன் நிற்கின்றார்.

இதை உங்கள் கணவர் கொடுக்கச் சொன்னவர் என்று சொல்லிக் கொடுத்து விட்டுச் செல்கின் றார். அதை அவள் ஆவலுடன் திறந்து பார்கின் றாள். அதில் அவளுக்கு மிகப் பிடித்த சொக்லேட் இருக் கின்றது. அவள் இன்னமும் சந்தோஷப் படுகின்றாள்.

பின்னேரம் 3 மணிக்கு மீளவும் அழைப்பு மணி ஒலிக்கின்றது. கதவைத் திறக்கின்றாள். வெளி யில் ஒருவர் பரிசுப் பொதி யுடன் நிற்கின்றார். கண வர் தந்ததாகச் சொல்லி அவரும் கொடுக் கின்றார். அதைத் திறந்து பார்க்கின் றாள். அதில் வைர நெக்கி லஸ் இருக்கின்றது. அதைப் பார்த்த அவளுக்கு சந் தோஷம் தாங்க முடிய வில்லை. கணவர் எப்போது வருவார் என்று எதிர் பார்த்து இருக்கின்றாள். பின்னே ரம் 5 மணிக்கு கணவர் வருகின்றார். ஓடிச் சென்று கட்டிப் பிடிக்கின்றாள். அப்போது கணவர், என்ன டார்லிங் நான் அனுப்பின பரிசு எல்லாம் பிடிச்சி ருக்கா ?', 'ஓ எல்லாம் பிடிச்சிருக்கு' என்றாள்.

காலையில் நான் என் னமோ மறந்தது என்று சொன்னியே. இப்போது எப்படி எனது ஆச்சரிய மான பரிசுகள் என்று கண வர் கொஞ்சம் வீறாப்பாய் கேட்கின்றார்.

அதற்கு மனைவி சொல் கின்றார், 'சூப்பர் மகளிர் தினத்துக்கே இப்படி கலக் கிட்டீங்க. அடுத்த வாரம் எங்களுடைய திருமண நாள் வருகின் றது. அதற்கு எப்படி அசத்தப் போகின் றீர்களோ என்றதுதான் தாமதம் கணவர் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார்.

## சின்னத்திரை நடிகர் சங்கத்தில் சிவா

முன்னணியில் இருக்கும் நடிகர்கள், நடிகர் சங்கத்தில் இருப்பதையே கௌரவக் குறை வாக நினைப்பார்கள். வேறு வழியில்லாமல் உறுப்பினராகச் சேர்ந் தாலும், சங்க நிகழ்வு களில் பங்கெடுக்க மாட் டார்கள். ரஜினி, கமல், விஜய், அஜித் என்று முன்னணி நடிகர்கள் எல்லோரும், நடிகர் சங் கத் தேர்தலுக்கு வாக் களிக்க மட்டும்தான் வரு வார்கள். அத்து டன் அவர்கள் கடமை சரி.

ஆனாலும் வளர்ந்துவரும் நடிகரான சிவகார்த்தி கேயன் சின்னத்திரை நடிகர் சங்கத்தில் ஆயுட் கால உறுப்புரிமையைப் பெற்றுள்ளார்.

'என் தாய்வீடு சின்னத் திரைதான். சின்னத் திரை தான் என்திறமையை அங் கீகரித்தது. அத்து டன் சினிமாவுக்கும் கொண்டு சென்றது. சின்னத்திரை நடிகர் சங்கத்தில் உறுப்பி னராக இருப்பதிலும், அதற்காக உழைப்பதி லும் நான் பெருமைப் படுகின்றேன்' என்று சிவ கார்த்திகேயன் உணர்ச்சி ததும்பத் தெரிவித்துள்ளார்.




## உரிமம் ஜெயாவுக்கு

ரஜினியின் லிங்கா படத்தை இந்திய மதிப்பில் 32 கோடிக்கு வாங்கி அசர வைத்துள்ளது ஜெயா தொலைக்காட்சி.

இந்திய சினிமா வரலாற்றில் எந்தப் படத்தின் தொலைக்காட்சி உரிமைக்கும் இவ்வளவு பெரிய தொகை விலையாகக் கொடுக்கப்பட்டதில்லை. இந்தப் படத்தை வாங்க சன் தொலைக்காட்சி பெரும் முயற்சி மேற்கொண்டது. 28 கோடி வரை வழங்க முன்வந்தது.

ஆனாலும் படத்தைத் கொடுக்காமல் இருந்தனர். இந்த நிலையில் 32 கோடி கொடுத்து லிங்காவின் தொலைக்காட்சி உரிமையைப் பெற்றுவிட்டது ஜெயா தொலைக்காட்சி. இந்திய சினிமாவில் இவ்வளவு பெரிய தொகை இதுவரை எந்தப் படத்துக்கும் வழங்கப்பட்டதில்லை. அந்த வகையில் இதுவும் லிங்கா படத்தின் புதிய சாதனையாகும்.

# செய்திகள்

# விகாரைக்கு எதிராக மன்னாரில் வழக்கு

மன்னார், நவ.29

முருங்கன் நகரில் அமைக்கப்பட்டிருக்கும் பௌத்தவிகாரை தமது கோயிலுக்குரிய காணியில் உள்ளதாகவும் அதனை மீளப்பெற்று தருமாறும் கோரி முருங்கன் இரட்டைக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் அந்த விகாரையின் விகாராதிபதிக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

புதன்கிழமை இவ்வழக்கு மன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது வழக்காளிகள் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி வினோதன், குறித்த விகாரை அமைந்திருக்கும் காணியில் வழக்காளிகளின் முன்னோர்கள் 1942 ஆம் ஆண்டிலிருந்து ஆலயம் ஒன்றை அமைத்து பூசை, வழிபாடுகளைச் செய்து வந்ததாகவும், 1956ஆம் ஆண்டு இந்தக்காணி நில அளவை செய்யப்பட்டு அப்போதிருந்த ஆளுநர் நாயகமான சேர்.ஒலிவர் குணதிலக்காவினால் ஆலயத்துக்கென வழங்கப்பட்டது. ஆலயம்புனரமைக்கப்பட்டு1984ஆம் ஆண்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

1990ஆம் ஆண்டு போர் காரணமாக மக்கள் அனைவரும் அவ்விடத்தை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். 2009ஆம் ஆண்டு மீளக்குடியேறிய போது அவ் விடத்தில் பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. பொலிஸாரிடம் மீளவும் அந்தக்காணியை ஒப்படைக்குமாறு கோரி மனு வழங்கப்பட்டது.

எனினும் 2010 ஆம் ஆண்டு பொலிஸார் குறித்த காணியிலிருந்து வெளியேறியதும் எதிராளியான விகாராதிபதி காணியை அடாத்தாகக் கைப்பற்றி சுற்றிவர முள்வேலி அடைத்ததுடன் சிறிய விகாரை ஒன்றை அமைத்து புராதனவிகாரை எனப்பெயரிடப்பட்டது. படிப்படியாக அதனை விரிவாக்கி வருவதுடன் அந்தக் காணியிலிருந்து வெளியேற மறுப்பதாகவும் தெரிவித்து வழக்குக்குத் தேவையான ஆவணங்களையும் மன்றில் சமர்ப்பித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி குறித்த விகாராதிபதியை மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளது. (வ–103)

## 150 பேருக்கு இன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட ஜே/108 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் என 150 பேருக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது.

நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் இன்றுபிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமியும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும், கௌரவ விருந்தினராகவைத்திய கலாநிதி திரு.திருமதி ரா.கணேசமூர்த்தியும் கலந்துகொள்வர். (த–4)

## கடும் குளிரான காலநிலை

யாழ்ப்பாணம், நவ. 29

குடாநாட்டில் மழை தொடர்ந்து பெய்வதையடுத்து நேற்றும் நேற்று முன்தினமும் இரவு பகல் வேளைகளில் கடும் குளிரான காலநிலை காணப்பட்டது. (த)

# பல கிராமங்களுக்குள் உட்புகுந்தது கடல் நீர்

## மன்னாரில் 1428 குடும்பங்கள் இடம் பெயர்வு



மன்னார், நவ. 29

மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை மற்றும் கடல் நீர் கிராமங்களுக்குள் உட்புகுந்தமையால் இதுவரை ஆயிரத்து 428 குடும்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 658 பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.ஏ.சி.முஹமட் றியாஸ் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 758 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 903 பேரும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 658 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 714 பேரும் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கடல் நீர் பல கிராமங்களுக்குள் உட்புகுந்தமையால் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

உப்புக்குளம் தெற்கு, கோந்தைப்பிட்டி கிராமத்தினுள் கடல் நீர் புகுந்தமையால் அங்குள்ள 45 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்தக் கிராமம் முற்றாகக் கடல் நீரில் மூழ்கியுள்ளது. இடம் பெயர்ந்த மக்கள் உப்புக்குளம் கோந்தைப்பிட்டி பள்ளிவாசலில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, பள்ளிமுனை 41 வீட்டுத்திட்டம், பள்ளிமுனை 49 வீட்டுத்திட்டம், பள்ளிமுனை 50 வீட்டுத்திட்டம் ஆகிய கிராமங்களுக்குள்ளும் கடல் நீர் உட்புகுந்ததால் 140 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இந்த மக்கள் பள்ளிமுனையில் உள்ள பொது மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சௌத்பார் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் கடல் நீர் உட்புகுந்தமையால் 105 குடும்பங்களைச் சேர்ந்த 515 பேர் இடம் பெயர்ந்து சௌத்பார் பொது மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்திலும் 120 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் இடம் பெயர்ந்துள்ளன.

பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை மன்னார் பிரதேச செயலகம் வழங்கி வருகின்றது.

அதேவேளை, ஜீவபுரம், கிருஷ்ணபுரம், சாந்திபுரம் ஆகிய கிராம மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர். தலைமன்னார் பியர், எருக்கலம் பிட்டி மேற்கு கிராம மக்களின் இயல்புநிலையும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. (த–56–14)

## படகுகளும் மூழ்கின



மன்னார், நவ. 29

மன்னார் நகர் பகுதியில் கடல் பெருக்கெடுத்தமையால் மீனவர்களின் படகுகளும் நீரில் மூழ்கியுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

மன்னார் பெரிய பாலத்தடி மற்றும் மன்னார் மீன் சந்தை ஆகிய பகுதிகளில் உள்ள கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல படகுகள்கடல்நீரில்மூழ்கியுள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் கடல் நீர் வேகமாக கிராமங்களுக்குள் உட்புகுந்தது. கடற்கரையோரத்தில் அமைந்துள்ள மீனவர்களின் வாடிகளும் நீரில் மூழ்கியுள்ளன. (த–56)

# டெங்கு தாக்கம் திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் திடீரென அதிகரித்துள்ளது.

இதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் பி.யசிதரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த ஆண்டில் இதுவரை யாழ். மாநகரப் பகுதியில் 283 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மாதத்தில் அதிக எண்ணிக்கையான மக்கள் இந்த டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளனர். குறைந்தது 70 பேருக்கு வரை டெங்கின் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

திடீரென அதிகரித்திருக்கும் டெங்கின் தாக்கத்தை விரைந்து கட்டுப்படுத்துவதற்குரிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது மழை தொடர்ச்சியாகப் பெய்த வண்ணம் உள்ளதால் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாவாந்துறை, வண்ணார் பண்ணை, நல்லூர் போன்ற பிரதேசங்களிலேயே அதிகளவில் டெங்குத் தாக்கம் காணப்படுவதோடு, அந்தப் பகுதியில் நுளம்பை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (த–17)

# வைத்தியசாலை ஆண்கள் விடுதி வெள்ளத்தில்



அச்சுவேலி, நவ.29

அச்சவேலி பிரதேச வைத்தியசாலையின் ஆண்கள் விடுதி பயன்படுத்த முடியாத நிலையில் கைவிடப்பட்டது. நோயாளர்கள், வைத்தியசாலையின் நிர்வாகஅலகின்வெற்றுஅறைகள் மற்றும் வைத்தியக் கூறுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஆண் நோயாளர் விடுதியின் கூரை சேதமுற்றுள்ளதால் கூரையால் தொடர்ந்து ஒழுகும் மழை நீரால் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் ஆண் நோயாளர் விடுதி வைத்திசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டத்தில் செயற்பட்டு வந்தது. ஏறத்தாழ 70 வருடங்கள் பழைமை வாய்ந்த அந்த கட்டடத் தொகுதியின் கூரை ஓடுகள் சேதமாகி தொடர்ந்து ஒழுகுவதோடு கூரையின் ஒரு பகுதி முறிந்து விழும் நிலையில் உள்ளது.

பெய்து வரும் தொடர் மழையால் கூரையில் இருந்து ஒழுகும் மழைநீர் ஆண்கள் சிகிச்சை பெறும் விடுதியில் தேங்கி நிற்கிறது. நோயாளர்கள் அங்கு தங்கி இருக்க முடியாது என ஆட்சேபித்தமையினால் அவர்கள் வைத்தியசாலை நிர்வாக அலகினால் மேல் மாடியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆண்கள் விடுதியைப் பயன்படுத்த முடியாது எனவும், அந்த இடத்தில் பொருத்தமான முறையில் புதிய விடுதி நிர்மாணிக்கவேண்டும் எனவும் நோயாளர் நலன்புரிச் சங்கம் மற்றும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துவந்த போதிலும் அது புனரமைக்கப்படவில்லை.

இந்த வருடம் வைத்தியசாலைக்குப்பயணம்மேற்கொண்டிருந்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும் வைத்தியசாலைக்குப்புதிய ஆண்கள்விடுதி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதி வழங்கி இருந்தார்.

ஆண்நோயாளர் விடுதிபொருத்தமான முறையில் இல்லாததால் ஆண்கள் தங்கி இருந்து சிகிச்சை பெறுவதற்குத் தயக்கம் காட்டி வருகின்றனர். (த-11)

# சுற்றுச்சூழலை காக்க குடாநாட்டில் அமையம்

## சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதற்கு

வலி.வடக்கு, நவ.29

வடபிராந்தியத்தில்சுற்றாடல்மாசடைதல் காரணமாக பல் வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுவருகின்ற நிலையில் அதனைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாகச் சுற்றாடல் மாசடைதல் அதிகரித்து வருகின்ற நிலையில் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறைகள் உரிய வினைத்திறனுடன்செயற்படுத்தப்படவில்லையென்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ள நிலையிலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் மாசடைந்து வருவது, அதிலும் குறிப்பாக வலி.தெற்கு,வலி.வடக்குப் பகுதிகளில் உள்ள கிணறுகளில் தொடர்ச்சியாக எண்ணெய்ப் படலம் அவதானிக்கப்பட்டுவருதல், கழிவகற்றல் முகாமைத்துவத்தில் சீரான பொறிமுறை இல்லாத காரணத்தால் கல்லுண்டாய் வெளி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சூழலை மாசடையச் செய்யும் வகையில் வகைதொகையின்றிக் கழிவுகள் கொட்டப்படுதல், வன்னிப் பிரதேசக் காடுகள் மற்றும் யாழ்ப்பாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் உள்ள கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுதல், மணல் மற்றும் சுண்ணக்கல் பாறைகள் அகழப்படுதல், அதீத விவசாய உரப் பாவனைகளால் புற்றுநோய் அதிகரித்து வருதல் போன்ற பல்வேறுபட்ட சுற்றுச் சூழல் பிரச்சினைகளில் கரிசனை செலுத்துகின்ற வகையிலேயே இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணி செல்வி. சாந்தா அபிமன்னசிங்கத்தைத் தலைவராகக் கொண்டு சமுதாய மருத்துவ நிபுணர்கள், சட்ட வல்லுநர்கள், ஊடகவியலாளர்கள், பொதுச் சுகாதாரம், விவசாயம், பூகோளம், இரசாயனவியல் உள்ளிட்ட பல் துறை சார்ந்தவர்கள் உள்ளடங்கிய ரீதியில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சுன்னாகம் பகுதியில் ஆரம்பித்து தெல்லிப்பழை வரையுள்ள கிணறுகளில் வியாபித்துப் பரந்துகொண்டிருக்கும் எண்ணெய்க்கழிவுகள் மற்றும் உடல் நலத்துக்கு அச்சுறுத்தலான பார உலோகங்கள் தொடர்பிலான விடயத்தில் இந்த அமைப்பு முதற்கட்டமாக உடனடி நடவடிக்கையை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-86)

# வித்தியின் 'என் எழுத்தாயுதம்' நூல் அறிமுக விழா ஞாயிறன்று

யாழ்ப்பாணம், நவ. 29

மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் எழுதிய 'என் எழுத்தாயுதம்' (ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுப் பகிர்வு) நூலின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் 'திசைகாட்டி' குழுமத்தின்அனுசரணையில்இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு உதயன் நாளிதழின்பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தலைமை தாங்குவார்.

வாழ்த்துரைகளை கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி.பாஸ்கரா, யாழ். மாவட்ட நாடளு மன்றஉறுப்பினர்மு.சந்திர குமார், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் வடக்கு மாகாண உறுப்பினருமான த.சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்மாவை. சேனாதிராசா ஆகியோர் வழங்குவர்.

நூல் மதிப்புரையை கவிஞர் சோ.பத்மநாதனும், ஆய்வுரைகளை அரசியல் பத்தி எழுத்தாளர் ஆ.யதீந்திரா, மூத்த ஊடகவியலாளர் அ.நிக்ஸன் ஆகியோரும் நிகழ்த்துவர். (த)

# பிறருக்குக் கை வைத்த 69 பேர் பொலிஸாரிடம்

யாழ்ப்பாணம், நவ 29

யாழ்.குடாநாட்டில் பிறரை அடித்துக் காயப்படுத்தும் சம்பவங்களும் அதனால் பலர் கைது செய்யப்படும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன.

இதன்படி கடந்த சில வாரங்களில் இக் குற்றச் சாட்டுக்களில் பேரில் 69 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்பிவிமலசேனதெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 31 பேரும், விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 9 பேரும், கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 7 பேரும், திருடிய குற்றச்சாட்டில் 13 பேரும், சந்தேகத்தில் 67 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 6 பேரும், மது போதையில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 11 பேரும், சூழல் மாசடையும் வகையில் செயற்பட்ட 12 பேரும், பிறரைத் துன்புறுத்திய ஒருவரும், மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 5 பேரும், கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களது குற்றச்சாட்டுகளுக்கு ஏற்ப அவர்கள் நீதி மன்றினால் தண்டம் அறவிடப்பட்டும், விளக்கமறியலில் வைக்கப்பட்டும் உள்ளனர்–என்றார். (த-4)

# அச்சுவேலி தொழிற் பேட்டையில் அடிப்படை வசதிகளின்றிச் சிரமம்

## பணியாளர்கள் கடும் விசனம்

அச்சுவேலி, நவ.29

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் செயற்படும் தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்சாலைகளில்பணிபுரிபவர்களுக்கான அடிப்படை வசதிகள் உரிய முறையில் செய்யப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சாலைகளில் பணி புரிபவர்களுக்கான குடிதண்ணீர் வசதிமற்றும்உணவுகளைவாங்கி உண்பதற்கான கன்ரீன் வசதி, பொருத்தமான போக்குவரத்து வசதி என்பன மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு தொழில் அதிபர்களுக்கு 30 வருட காலக் குத்தகைக்கு நிலம் வழங்கப்படுகின்றது. அதற்கான மாதாந்த நிலவாடகையையும் தொழில் அதிபர்கள் செலுத்த வேண்டும்.

ஆனால் தொழிற்சாலைகளின் செயற்பாட்டுக்கான நீர் வசதி மற்றும் குடி தண்ணீர் விநியோகம் உள்ளிட்ட உள்ளக வசதிகளை கைத்தொழிற்பேட்டைக்கு பொறுப்பான இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை வழங்கவேண்டும். இது தொடர்பாக நிபந்தனை ஒப்பந்தங்கள் தொழில் அதிபர்களினால் செய்யப்பட்டுள்ளபோதிலும் குறித்த வசதிகள் வழங்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அச்சுவேலிகைத்தொழிற்பேட்டையில் தற்பொழுது கட்டட நிர்மாணத்துக்கான உலோக உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை செயற்படுகின்றது. அங்கு உலோகப் பிணைச்சல், பூட்டு, கம்பி, ஆணி வகை, திரட்டு ஆணி வகை உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் நான்கு தொழிற்சாலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன.

தொழிற்சாலையில் பொருத்தமான குடிதண்ணீர் வசதியோ, கைத்தொழிற்பேட்டை வளாகத்தில் கன்ரீன் வசதியோ, கைத்தொழிற் பேட்டைக்குச் செல்வதற்கான பொதுப் போக்குவரத்து வசதியோ இல்லை எனத் தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-11)

# நடமாடும் பொலிஸ் தென்மராட்சியில்

தென்மராட்சி, நவ.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் இரண்டு நடமாடும் பொலிஸ் நிலையங்கள் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பொலிஸார் கைதடி மானிப்பாய் வீதியிலும், கொடிகாமம் பொலிஸார் உசன் கந்த சுவாமி ஆலய மண்டபத்திலும் நடமாடும் பொலிஸ் நிலையங்களைத் திறந்துள்ளனர்.

தலா 10 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது முறைப்பாடுகளை பதிவு செய்யலாமெனவும் இந்நிலையங்கள் 24 மணி நேரமும் திறந்திருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தவும் பொது மக்கள் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்வதைக் குறைப்பதற்குமென இவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பேயா? பிசாசா?

கடைசியில் சாக்குக்குள்ளிருந்து பூனை பாய்ந்தே விட்டது.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு இடமளிக்க மாட் டேன் என்றும், மஹிந்த ராஜபக்ஷவை போர்க்குற்ற விசாரணைக்காக கைது செய்வதை அனுமதிக்க மாட்டேன் என்றும், ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று அறிவித்துவிட்டார். அதற்குப் பதிலாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி உள்ளக விசாரணை ஒன்றே நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆக, மைத்திரிபால சிறிசேன தமிழர் பிரச்சினையை, இனப் பிரச்சினையை எதிர்காலத்தில் எவ்வாறு கையாளப் போகிறார் என்பது ஓரளவுக்குத் தெளிவாகிவிட்டது. அது, சிங்கள பௌத்த மக்களைத் திருப்திப்படுத்தும் வகையிலானதே தவிர, தமிழ் மக்களையோ ஏனைய சிறுபான்மை மக்களையோ திருப்திப்படுத்தும் வகையிலானது அல்ல என்பதை அடித்துக் கூறலாம்.

மைத்திரிபாலவை இந்த நிலைமைக்கு அழைத்து வந்த - சமாதானத் தூதுவராகத் தோற்றமளித்த - சந்திரிகா அம்மையாரைப் போலவன்றி, தனிச் சிங்கள பௌத்த வாக்குகளுக்கு வெளியே சிந்திக்க முடியாத, செயற்பட முடியாத ஒருவராகவே மைத்திரிபால இருக்கப் போகிறார் என்பது திண்ணம்.

சிங்கள பௌத்த மக்களை ஏமாற்றாத வகையில், அவர்களை வெறுப்பூட்டாத வகையில், மைத்திரிபாலவின் சிங்கள பௌத்த விசுவாசத்தை சாதாரண மக்கள் சந்தேகிக்காத வகையில் நடந்துகொள்ளாவிட்டால், மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பது கடினம் என்பதனாலேயே மைத்திரிபால இப்படிப் பேச வேண்டியிருக்கிறது என்று ஒருவர் வாதிடமுடியும். தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருக்கிறார் என்றோ அல்லது தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் செயற்படுவார் என்றோ காட்டிக்கொண்டால் மைத்திரியின் தோல்வி உறுதியாகிவிடும் என்றுகூட ஒருவர் மைத்திரிபாலவின் செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்க முடியும்.

அது உண்மைதான். அந்த யதார்த்தத்தை யாரும் மறுப்பதற்கில்லைத்தான். அதற்காக மைத்திரியினதும் பொது எதிரணியினதும் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளும் பச்சை இனவாதத்துக்கு அப்பாற்பட்டவை என்றும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. தேர்தலுக்கு முன்பாக, தமிழர்களுக்கு நீதி கிடைப்பதை ஏற்பதற்கு ஏற்ற வகையில் சிங்கள மக்களை வளைத்தெடுக்க முடியாத ஒரு தலைவர், அதே சிங்கள மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் எப்படி அவர்களை மீறிச் செயற்பட முடியும்?

எனவே இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் முன்னுள்ள தெரிவு என்பது பேயா? பிசாசா? என்பதைப் போன்றதுதான். "தெரியாத தேவதையைவிட தெரிந்த பேயே மேலானது" என்றும் ஒரு பழமொழி இருக்கின்றது. எனவே முற்றுமுழுதாக இனவாதத்துக்குள் அமிழ்ந்து போய் கருத்துக்களைத் தெரிவிப்பதைத் தவிர்ப்பதும் தமிழர்களையும் ஏனைய சிறுபான்மை இனங்களையும் எப்போதுமே மனதிலிருத்தி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதும் தமிழர்களின் ஆதரவைப் பெறுவதற்கு மைத்திரிபால செய்யவேண்டிய முக்கிய பணிகள். அதனை அவர் கவனத்தில் கொள்வது நல்லது.

# நாட்டில் தலைவிதியை மாற்ற உடுவெடுத்துள்ளார் மைத்திரி

## ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டெரன்ஸ் புரசிங்கவின் கருத்து

சிங்களமூலம்-லங்காதீப
தமிழில்-வீஎஸ்ரி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி சார்பான பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிடவுள்ளார். தற்போதைய அரசில் அண்மைய நாள்கள் வரை சிரேஷ்ட அமைச்சரொருவராகச் செயற்பட்ட அவர், அரச தரப்பு வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட விருப்பது விசேட அம்சமாகும்.

தற்போது பதவியிலுள்ள அரசு பாஸிசப் போக்குடைய அரசாக மாறியுள்ளது. அரசின் கடந்த கால செயற்பாடுகள் ஒடுக்குமுறை கொண்டதாக அமைந்தபோதிலும் அது வெளிப்படையாக வெளியில் தென்படவில்லை. அதற்குக் காரணம் அரசு முன்னெடுத்துவந்த மாயாஜால அபிவிருத்திச் செயற்பாடுகள். அதன் மூலம் நாட்டின் நிதிவளம் குறிப்பிட்டதொரு தரப்பினராலேயே கையாளப்பட நேர்ந்தது. அதேபோன்று, அரசியல் ஆதிபத்தியம் மற்றும் அதிகாரம் என்பவையும் வேகமாக தனிநபரொருவரின் கைகளைச் சென்றடைந்தன.

அண்மைய வரவு – செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலும் குறிப்பிட்ட சில அமைச்சுக்களுக்கே முழு ஒதுக்கீட்டின் 50 வீதத்துக்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவை, ஜனாதிபதி மற்றும் அவரது சகோதரர்களின் பொறுப்பிலுள்ள அமைச்சுக்களாகும். இதனால் ஏனைய அமைச்சுக்களும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனக்குழப்பமும் அதிருப்தியும் அடைந்திருந்தனர். மைத்திரிபால சிறிசேனவின் அரசுக்கெதிரான தற்போதைய எழுச்சி, மேற்குறித்த நிதி ஒதுக்கீட்டுப் பாரபட்ச செயற்பாட்டின் விளைவேயாகும். அரசின் சிரேஷ்ட அமைச்சர் மட்டுமன்றி, சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளராகவும் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேன, எதிரணியின் பொது வேட்பாளராகக் களமிறங்க நேர்ந்ததன் தாற்பரியம் இதுவே. இது ஒரு விதத்தில் அரசுக்கு ஏற்பட்டதொரு தோல்வியாகவும் கொள்ளத்தக்கதே.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதான அரசியல் பின்னணி நிலையை, இன்றைய நிலையுடன் ஒப்புநோக்க இயலாது. அரசின் போர் வெற்றியின் பிரபல்யமும், உணர்ச்சித் தூண்டுதலும் இன்று சிங்கள மக்கள் மத்தியில் பின்னடைவு கண்டுள்ளன. நாட்டின் சாதாரண பொதுமக்களது வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரித்துள்ளது. தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்ல இயலாத நாட்டு மக்களது அரசின் மீதான அபிமானம் நலிவு கண்டுள்ளது. அது மட்டுமன்றி நாட்டில் லஞ்சம், ஊழல் என்பன முன்னெப்போதும் இல்லாத விதத்தில் அதிகரித்துள்ளன. கொலை, கொள்ளைச் சம்பவங்கள் பெருகி சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சி கண்டுள்ளது. நீதித்துறையின் தனித்துவம் நலிவு கண்டுள்ளது. இவை காரணமாக அரசின் போர் வெற்றிப் பிரலாபம் சிங்கள வாக்காளர்கள் மத்தியில் வலுக்குன்றி அரசுக்கெதிரான உணர்வு தலைதூக்கியுள்ளது.

மறுபுறத்தில் நோக்கும்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான எதிர்க்கட்சிகளின் இணைவு, கடந்த தேர்தலைவிட இம்முறை ஒற்றுமையும் பலமும் பெற்று வலுவானதொரு கூட்டாக உருவாகியுள்ளது. அதிலும் இம்முறை பொது வேட்பாளரின் கொள்கை ரீதியிலான நிலைப்பாட்டிலும் சமூக அரசியல் சக்திகளின் பலத்திலும் தெளிவான வேறுபாடு காணப்படுகிறது.

இம்முறை எதிரணிப் பொது வேட்பாளரின் கொள்கைகளில் ஜனாதிபதி நிர்வாக நடைமுறையை ஒழித்தல்,அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தை நீக்கி 17 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தல், நாடாளுமன்ற அதிகார நடைமுறையை மீண்டும் உருவாக்குதல் ஆகியவை தெளிவாகவும் உறுதியாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையின் அதிகாரங்கள், ஜனநாயக வாதத்தை நலிவுபடுத்தி அதனால் தமது சுதந்திரம், உரிமைகள் என்பனவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தற்போது கருதுகின்றனர். எனவே மேற்குறித்தவற்றை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமானால் எதிரணியின் சகல கட்சிகளும் தம்மிடையே ஒன்றிணைந்து பொது உடன்பாடொன்றை எட்ட வேண்டியது அவசியமாகும். அவை தற்போது அந்த நோக்கத்தை நோக்கிச் செயற்பட ஆரம்பித்துள்ளன.

அதேவேளை எதிரணிப் பொது வேட்பாளர் தேர்தலில் வெற்றியீட்டி,தொடர்ந்து தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மட்டும் இந்த நாட்டின் சகல பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விடுமெனக் கூறிவிட இயலாது. முதலாளித்துவ பொருளாதார முறையின் அடிப்படையில் இயங்கும் இந்த நாட்டில் சமூக பொருளாதார பிரச்சினைகளை அரசமைப்பு புனரமைப்பு மூலம் தீர்க்க இயலுமென நம்ப இயலாது. அதற்காக சமூக அடிப்படையிலான மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டும். அந்த வகையில் ஜனநாயக முறைமைக்கு சமமாக சமூக மட்டத்திலான புனரமைப்பு அவசியமாகிறது.

அந்த வகையில் அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தையும் இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த விடயத்தில் பொது வேட்பாளர் சிரம நிலைக்கு முகம் கொடுக்க நேர்கிறது. ஜனநாயக வாதத்தை நிலை நிறுத்தவுள்ளதாக உறுதியளித்துள்ள போதிலும் நாட்டின் இனங்களுக்கிடையேயான பிரச்சினைக்கான தீர்வு குறித்து இதுவரை அவர் எந்தவித கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. தமக்கு ஆதரவளிக்கும் சில சிங்கள தீவிர தரப்புக்களின் அழுத்தம் காரணமாக அவர் அதனைத் தவிர்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இந்த நாட்டில் மீண்டும் ஜனநாயக நடைமுறை உறுதி செய்யப்படவேண்டுமேயானால் நிச்சயமாக இனங்களுக்கிடையே அரசியல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டியது அவசியமாகும். அது குறித்து பொது வேட்பாளரின் கொள்கை வெளிப்பாட்டில் இதுவரை எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதற்குக் காரணம் சிங்கள பௌத்தர்களின் தமக்கான ஆதரவு மாற்றமடைந்துவிடக் கூடுமென்ற அச்சமாகவும் இருக்கக் கூடும். ஜனாதிபதிப் பதவி நடைமுறையை ஒழித்து, நாடாளுமன்றத்திடம் அதிகாரம் கையளிக்கப்பட வேண்டும். அதற்கான புதியதொரு அரசமைப்பை உருவாக்கி நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை உறுதி செய்வதன் மூலம் அனைத்து அடிப்படை உரிமைகளையும் உறுதிசெய்யும் மறுசீரமைப்பு நாட்டுக்கு மிக முக்கியமான ஒன்றாகும். அதனை நிறைவேற்றவேண்டுமானால் தற்போதைய அரசு தோற்கடிக்கப்பட வேண்டும். இந்தத் தேர்தலில் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டியது எதிரணித் தரப்பினரின் முக்கிய தேவையாகிறது. அந்த வகையில் தமிழர் தரப்புக் கட்சிகளின் கோரிக்கைகள் குறித்து அக்கறை செலுத்திச் செயற்படவேண்டியது பொது எதிரணியினரின் பொறுப்பாகும்.

நாட்டில் மீண்டும் ஜனநாயகவாதத்தை நிலைநிறுத்தவல்ல, சகல எதிரணித் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க பொது வேட்பாளரொருவர் இந்தத் தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளார். தற்போதைய அதிகாரத் தரப்பை தோற்கடித்து உருவாக்கப்படும் புதிய அதிகாரத்தரப்பு நாட்டில் மீண்டும் ஜனநாயக வாதத்தை நிலைநிறுத்தும் வகையில் செயற்படுமென்ற எதிர்பார்ப்பை நாட்டு மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டியது பொது எதிரணியின் பெரியதொரு பொறுப்பாகிறது.

# காலம் கனியும் வரை காத்திருக்க வேண்டும்

சேரலாதன்

இந்தியாவில் அகதிகளாகத் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் தாயகம் திரும்புவதற்கு விருப்பமில்லாதவர்களாக உள்ளமை அவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பின் மூலமாகத் தெரிய வந்துள்ளது. இவர்களில் சுமார் 65 வீதமானவர்கள் சொந்த நாட்டுக்குத் திரும்புவதற்கு மறுப்புத்தெரிவித்துள்ள அதேவேளை மிகக் குறைந்த வீதமானவர்கள் அதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்த வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்களைத் தாயகம் திரும்புமாறு விடுத்த வேண்டுகோளுக்கு ஏற்பவே இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இலங்கைத் தமிழர்களில் கணிசமானவர்கள் இந்தியா உட்பட வேறுபல நாடுகளில் தஞ்சமடைந்துள்ளார்கள். பலர் நிரந்தர வதிவிட அனுமதியையும் பெற்றுள்ளார்கள். இவர்கள் தற்போது வசிக்கும் நாடுகளையே தமது சொந்த நாடுகளாகக் கருத ஆரம்பித்து விட்டனர்.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த போர் காரணமாக லட்சக்கணக்கான தமிழர்கள் வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் செல்ல வேண்டியதொரு நிலை உருவாகியது. இவர்களில் பலர் தாம் அடைக்கலம் புகுந்த நாடுகளிலேயே நிரந்தரமாக வசிப்பதற்கு விரும்புவதாகத் தெரிய வருகின்றது. வெளிநாடுகள் என்ற போதிலும் நீண்டகாலம் வாழ்ந்து விட்டதால் இந்த நிலை உருவாகிவிட்டது.

இந்தியாவிலிருந்து நாடுதிரும்ப மறுக்கும் மக்கள் கூறும் காரணங்களும் நியாயமானவையாகத்தான் தெரிகின்றன. இவர்கள் இந்தியாவில் உள்ளவர்களுடன் தாம் திருமண பந்தத்தில் இணைந்துள்ளதை முக்கிய காரணங்களில் ஒன்றாகக் கூறுகின்றனர். மேலும் நாடு திரும்பினால் இந்தியாவில் கல்வி கற்கும் தமது பிள்ளைகளின் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்படுமென்றும், தமது தங்குமிடம், தொழில் வாய்ப்பு, பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இலங்கையில் உத்தரவாதம் கிடைக்காதென்றும் இவர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவில் அமைந்துள்ள அகதி முகாம்களில் உள்ள மக்கள் ராஜபோக வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள் எனக் கூறிவிட முடியாது. பல்வேறு இடையூறுகள், பற்றாக்குறைகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு மத்தியில் தான் அவர்கள் தங்கியுள்ளனர். ஆனாலும் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதிலும் பார்க்க இந்தியாவில் தங்கியிருப்பது இன்றுள்ள சூழ்நிலையில் தமக்குப் பாதுகாப்பானதென இவர்கள் கருதுகின்றனர். மேலும் நாம் பிறரிடம் கையேந்தி நிற்பதற்காக இந்தியா வரவில்லை. எமது பாதுகாப்புக் கருதியே இங்கு வந்துள்ளோம் எனவும் அந்த மக்கள் கூறுகின்றனர்.

இவர்களுடன் ஒப்பிடும்போது மேற்கத்திய நாடுகளில் தஞ்சமடைந்திருக்கும் இலங்கைத் தமிழர்களின் நிலை சற்று வித்தியாசமானது. இவர்கள் உழைத்து தாய்நாட்டில் வசிக்கும் உறவினர்களுக்கு அனுப்பும் பணம் இலங்கை ரூபாவில் பல்கிப் பெருகிப் பெரும் பயனை வழங்கி வருகின்றது. நீண்டு நீடித்த போரின்போது இங்குள்ள பலர் பட்டினிச் சாவிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கும் இந்தப் பணமே உதவியுள்ளது. இங்குள்ள பலர் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் வெளிநாடுகளுக்குச் செல்வதாக குற்றச்சாட்டுக்கள் எழாமலில்லை. தற்போது ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்படுவோர்கள் தொடர்பாக அந்த நாடு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் கிடைத்த வேலையைச் செய்யும் மனநிலையே காணப்படுகின்றது. இதற்குப் பொருத்தமான வேலைகள் இலகுவில் கிடைக்காமை, எவ்வாறாயினும் பணத்தைச் சம்பாதிக்க முடியாதுவிட்டால் அங்கு வாழ முடியாத நிலை என்பன முக்கிய காரணங்களாகும். இவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கின்ற பணம் பன்மடங்கு பெருகிறதேயொழிய அவர்கள் வாழுகின்ற நாடுகளின் வாழ்க்கைச் செலவினத்தை இவர்களின் வருமானத்தைக் கொண்டு சமாளிப்பது பெரும் கஷ்டமாகவே காணப்படுகின்றது. கணவனும் மனைவியும் வேலைக்குச் சென்றால்தான் தமது குடும்பத்தின் உணவுத் தேவைகள், பிள்ளைகளின் கல்வி, வீட்டு வசதி மற்றும் தேவைகளைச் சமாளிக்க முடியும். அதிலும் உலகை பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்தநிலை காரணமாக மாதத்தில் சில நாள்களே வேலை கிடைக்கக் கூடிய நிலை அங்கு காணப்படுகின்றது. ஆனாலும் அந்த நாடுகளில் வாழ்பவர்கள் தமது சொந்த நாட்டுக்குத் திரும்புவார்கள் என எவரும் எதிர்பார்க்க முடியாது.

அங்கு பிறந்த பிள்ளைகள் தமது பெற்றோர் பிறந்த இந்த நாட்டில் சில நாள்கள் கூட தங்குவதற்கு விரும்புவதாகத் தெரியவில்லை. அவர்கள் பிறந்து வளர்ந்த சூழல், இங்கு ஒத்துப் போகாததால் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகவே அவர்களின் வாழ்க்கை இனிமேல் அந்த நாடுகளில் தான் தொடரப் போகின்றது.

மேலும் இங்கு வசிக்கும் உறவினர்களும் வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் இங்கு வருவதை விரும்புவதில்லை. மாதாமாதம் வெளிநாட்டுப் பணத்தைக் கண்ட இவர்கள் இது இல்லாமற் போவதை ஒரு போதுமே விரும்பமாட்டார்கள். வெளிநாட்டுப் பணத்தில் கைகளைத் தோய்த்தவர்கள் கைகள் காய்வதை எவ்வாறு விரும்ப முடியும்?

போகின்ற போக்கைப் பார்த்தால் இலங்கையின் குடிசனத் தொகையில் இரண்டாவது இடத்தை வகிக்கும் இலங்கைத் தமிழர்கள் அதிலிருந்து பின்னுக்குத் தள்ளப் படும் நிலையும் காணப்படுகின்றது. இதற்குத் தமிழர்களின் இடப்பெயர்வும் ஒரு முக்கிய காரணமாகும். தமிழர்களின் குடிசனப் பரம்பலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் உட்பட கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றையும் கருத்தில் கொள்ளாது விட்டுவிட முடியாது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டது என்று கூறிக் கொண்டாலும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு அமைதி நிலவி வருகின்றது என்று கூறிவிட முடியாது. மன்னாரிலுள்ள வெள்ளாங்குளத்தில் புலிகளின் காவல் துறையில் பணியாற்றிய இளவயதுக் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்ட சம்பவம் பெரியளவில் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தி விட்டது. தனது காணாமற்போன பிள்ளையின் விடுதலைக்காகப் பாடுபட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த தாயொருவர் பூஸா முகாமில் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார். – இவ்வாறு ஏராளமானவர்கள் நீண்ட நாள்களாக விசாரணை எதுவுமின்றிச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். காணாமற்போனவர்களை அவர்களின் உறவுகள் தேடித் தேடிக் களைத்துப் போன நிலையில் காணப்படுகின்றனர்.

இதைவிடப் போர் ஓய்ந்து ஆறு வருடங்களைத் தொட்டுவிடப் போகும் நிலையிலும் தமது சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற மக்களில் பலர் இன்னமும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவில்லை. அது மட்டுமல்லாது இவர்களுக்குச் சொந்தமான காணிகள் பாதுகாப்புத் தரப்பினரின் தேவைக்கென கூறி கபளீகரம் செய் யப்படுகின்றன. மேலும் மக்களின் வாழ்க்கையில் இராணுவ நெருக்கீடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதைவிட களவு, கொலை, வாள்வெட்டு, பெண்கள் மீதான துஷ்பிரயோகம், போதைப் பொருள் பாவனை என்பன சாதாரண விடயங்களாகவே மாறிவிட்டன. அத்துடன் தொழில் வாய்ப்புக்களும் இல்லை. வர்த்தக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் புலம் பெயர்ந்து வேறு நாடுகளில் வசிக்கின்ற மக்கள் அறிந்து கொள்ளாமல் இல்லை. ஆகவே அவர்கள் தமது தாயகத்துக்குத் திரும்பி வருவதற்கு விருப்பம் தெரிவிப்பார்களென எதிர்பார்க்க முடியாது.

வடக்கு முதலமைச்சரின் கோரிக்கை நியாயமான ஒன்று என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை– இதில் சம்பந்தப்பட்டுள்ள மக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பு வழங்கப்படல் வேண்டும்.

இந்த நாட்டில் சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளுக்கு உரியதீர்வுகாணப்பட்டு, நெருக்குவாரங்களும் குறையும் போது புலம் பெயர்ந்து வாழுகின்ற மக்கள் தாமாகவே இங்கு வந்து வாழக் கூடியதொரு நிலை உருவாகத்தான் போகின்றது. அந்தக் காலம் கனியும் வரை நாம் பொறுத்திருக்கத் தான் வேண்டும்.

இது மரநடுகை மாதம்



## தங்க மரம்

சி.நற்குணலிங்கம்,
நெல்லியடி.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் யூகலிப்டஸ் மர இலைகளில் தங்கம் இருப்பதாக கண்டறிந்துள்ளனர்.

யூகலிப்டஸ் மரத்தின் இலையின் நரம்புகளில் தங்கம் காணப்படுகிறது. இந்த மரத்தின் வேர்கள் பூமியில் பல மீற்றர் ஆழம் வரை சென்று நீரை உறிஞ் சிக்கொள்ளும் சக்திபடைத்தவை.

சுமார் 10 மீற்றர் உயரம் வரை வளரும் யூகலிப்டஸ் மரத்தின் வேர்கள் 40 மீற்றர் வரை பூமிக்கு அடியில் சென்று நீரைத் தேடும். இம்மரத்தின் வேர்கள் தங்கம் போன்ற உலோகங்கள் புதைந்து கிடக்கும் இடத்தையும் தாண்டி தண்ணீர் தேடிச் செல்லும் தன்மை கொண்டவையாகும்.

அவ்வாறு தேடும் வேர்கள் பூமிக்கு அடியில் இருக்கும் நீரை உறிஞ்சும்போது அதனுடன் சேர்ந்து அந்த இடங்களில் இருக்கும் தங்கத்தையும் சேர்த்து உறிஞ்சிக்கொள்ளுமாம்.

மேலும் எந்த இடங்களில் பெருமளவில் தங்கம் புதைந்திருக்கும் என்ற தகவலையும் இந்த கண்டுபிடிப்பு தெரிவித்துள்ளது.

தங்கம் தாவரங்களின் செல்களுக்குள் இருக்கும் தன்மையில்லாததால் நீருடன் உறிஞ்சப்படும் தங்கமானது மரத்தின் உச்சியான இலைகளுக்கு அனுப்பப்படுகிறது என்றும் யூகலிப்டஸ் மர இலையில் மிக மிக சிறிய அளவில்தான் தங்கம் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வாசகர் திருமுகம்

## விழா ஏற்பாட்டாளர்களின் கவனத்துக்கு

பொது நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக அழைக்கப் படும் பிரமுகர், குறிப்பிட்ட நேரத்துக்கு வருகை தரத் தவறுவதால் குறித்த நேரத் தில் நிகழ்வை ஆரம்பிக்க முடியாத நிலையேற்படுவது டன் நிகழ்வை ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்களும் நிகழ் வுக்கு வருகை தந்து காத்தி ருக்கும், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந் தினர் மற்றும் நிகழ்வைப் பார்வையிட வருகை தந்து காத்திருக்கும் பொதுமக்கள் ஆகியோர் களின் நேரமும் வீணாகின் றது. இதை இந்தப் பிரமுகர்கள் உணரத் தவறுகிறார்கள்.

எனினும் நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட பிரதம விருந்தினர் குறிப்பிட்ட நிகழ்வின் முக்கி யத்தையோ அல்லது தனது மதிப்பின் நிலையை மறந்து இந்த நிகழ்வில் கலந்து கொள்ளாமல் விடுவாரா யின் குறிப்பிட்ட நிகழ்வுக்கு வருகை தந்துள்ள சிறப்பு விருந்தினரை அழைத்து நிகழ் வைத் தொடக்கி வைத்தால் விழாவுக்கு வருகை தந்து காத்திருப்பவர்களுக்கு எது வித சிரமமும் ஏற்பட வாய்ப்பில்லாது போய்விடும். இத்தகைய செயற்பாடு ஒன்று அண்மையில் குருநகர் . தொடர் மாடி முன்பள்ளியில் இடம் பெற்றது.

குருநகர் தொடர்மாடி முன்பள்ளியில் நடைபெற்ற குருநகர் தொடர் மாடி முன்பள்ளி ஆசிரியர், பெற்றோர் இணைந்து உருவாக்கிய ஆக்கங்களைக் காட்சிப்படுத்தும் கண்காட்சி விழாவுக்கு அழைக்கப்பட்ட பிரதம விருந்தினர் உரிய நேரத்துக்கு வருகை தரத்தவறிய தால் விழாவுக்கு வருகை தந்து காத்திருந்த முன்பள் ளிச் சிறார்கள், விருந்தினர் கள் பெற்றோர்கள் ஏனைய பொது மக்களின் நேரத்தைக் கருத்திற் கொண்டு, விழா ஏற் பாட்டாளராக வருகை தந்தி ருந்த சிறப்பு விருந்தினரை அழைத்துக் குறிப்பிட்ட நிகழ்வை ஆரம் பித்து வைத்தமை முன் னேற்றமான செயற்பாடாகஅமைந்தது.

இந்தச் செயற் பாட்டைப் பாடசாலைகள், முன் பள்ளிகள் மற்றும் ஏனைய பொது அமைப்புக்களும் தாம் நடத்தும் எதிர் கால சகல நிகழ்வுகளிலும் கடைப்பிடித்தால் பொது மக்களின் நேரம் மிச்சமாகும். குறிப்பிட்ட நேரத் துக்கு வருகை தரத் தவறும் பிரதம விருந் தினரும் தமது போக்கை மாற்றிக்கொள் ளும் நிலையும் ஏற்படலாம். இதனை விழா ஏற்பாட்டாளர் கள் கருத்தில் எடுப்பார்களா?

*திலிப், குருநகர்.*

## ஆலய நிர்வாகம் துணை போகின்றதா?

தென்னங்காணிகளில் அடாத் தாக உட்புகுந்து இளநீர்க் குலைகள் பல வெட்டப்பட்டு 2 ஹன்டர் வாகனங்களில்கொண்டு சென்ற சம்பவம் கடந்த கந்த ஷஷ்டி விரதத் தின்போது வரணிப் பிர தேசத்தில் இடம் பெற்றது.

இதன்போது இளநீர்க் குலை களும், தேங்காய்கள் குலை களும் வெட்டப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாகத் தென்னம் தோட்ட உரிமையாளர்கள் தகவல் தந்தனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து வருகைதந்த இளை ஞர் குழு ஒன்றினாலேயே தென் னம் காணிகளில் மரங்கள் துவம்சம் செய்யப்பட்டு அவை எடுத்துச் செல்லப்பட்டன. தட் டிக்கேட்ட உரிமையாள ரைச் சிலர் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தியதாகவும் கூறப் பட் டது.


வடமராட்சிப் பகுதியிலுள்ள முருகன் ஆலயத்தின் கந்த ஷஷ்டி பூசையின் தேவைக்காகவும் கந்தஷஷ்டி விரதங்களுக்கு அடியார்களின் தேவைக்காகவும் இளநீர்க் குலைகள் இவ்வாறு வெட்டிக்கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

வருடா வருடம் இவ்வாறு குறித்த இளைஞர் குழு இந்தப் பகுதிக்கு வந்து அடாத்தாக வும் களவாகவும் வெட்டிக் கொண்டு போவது வழக்கம் எனப் பிரதேசவாசிகள் தகவல் தெரி விக்கின்றனர். குறித்த ஆலய நிர்வாகம் இதுபோன்ற அடா வடித்தனமான, களவான இந்த நடவடிக்கைகளுக்குத் துணை போகின்றதா எனக் கேள்வி எழுப்புகின்றனர் இந்தப் பிரதேச தென்னம் காணி உரிமை யாளர்கள்.

*வரணியூரான்*

கேலிச் சித்திரம்

நன்றி: லங்காதீப



# எல்லோரும் எங்களைக் கைவிட்டு விட்டனர்

ஜனாதிபதித் தேர்தல் பரபரப்பு இன்னமும் சூடுபிடிக்கவில்லை. கட்சித் தாவல்களே அரசியல் அரங்கை ஆக்கிரமித்திருக்கின்றன. ஆனாலும் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள் வதற்கு இரு பிரதான அரசியல்வாதிகளும் தயாராக இல்லை. அவர்களும், அவர்களைச் சூழவுள்ளவர்கள் கூறு ரைக்கும் வார்த்தைகளும் இதனைத் தெளிவாக படம் போட்டுக் காட்டுகின்றன.

ஆளும் கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே களமிறங்குகின்றார். வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தனக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். அதைக் கிளிநொச்சியில் கடந்த ஒக்ரோபர் மாதம் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் அவரே ஒப்புக் கொண்டு தெரிவித்திருந்தார். அதனால் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது கிடைத்த வரப்பிரசாதம் கூட தமிழ் மக்களுக்கு இந்தமுறை கிடையாது.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் மக்களின் வாக்குகளே சிங்கள தேசத்தின் ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றது என்பது பரப்புரையாக இருந்தது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் அன்று போட்டியிட்ட, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், சரத் பொன்சேகாவும் வாக்குறுதிகளை வீசினர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முகாம்களுக்குள் அடைக்கப்பட்டிருந்த வன்னி மக்களை, முகாமின் முள்ளுவேலியைத் தாண்ட அனுமதித்தார். வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் மக்களைச் செல்ல அனுமதித்தார். கொஞ்ச நன்மைகளைச் செய்ய விளைந்தார். மறுபுறம் பொன்சேகா, எந்தப் பதவியும் இல்லாமையினால், பதவிக்கு வந்ததும் தமிழ் மக்களுக்கு தேனாறும் – பாலாறும் ஓடச் செய்வேன் என்று சொன்னார்.

ஆனால் இறுதியில் தமிழ்த் தேசம் பொன்சேகாவுக்கு வெற்றி வாகை சூடிக் கொடுக்க, சிங்கள தேசம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றி வாகையைச் சூடியது. சிங்கள தேசம் யாரை ஜனாதிபதி என்று தீர்மானித்ததோ அவரே ஜனாதிபதியாக வந்தார்.

இந்தப் பட்டறிவுப் பாடத்தினால் சிங்கள தேசத்தின் வாக்குகளைக் கவர்வதற்கே பிரதான இரண்டு வேட்பாளர்களும் முண்டியடிக்கின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொதுவில் சிங்கள தேசத்தினால் தமக்கு சமாதானத்தை மீட்டுத் தந்த மன்னராகப் பார்க்கின்றனர். அத்துடன், கடும் போக்குடைய சிங்கள – பௌத்த அமைப்புக்களான பொதுபல சேனா, ராவணபலய போன்றன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கின்றன.

இதற்கு மேலாக தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கப் போவதில்லை என்று, ஜனாதிபதி மஹிந்தவும் அவரது பரிவாரங்களும் ஊளையிட்டுக் கொண்டிருக்கின்றன. ஒருபடி மேலே சென்று, வெளிநாட்டுப் புலிகள் இங்கு வரக் கூடும் என்று புலிப்பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்களின் அன்றாட – அடிப்படைப் பிரச்சினையாகிவிட்ட இராணுவப் பிரசன்னத்தை தொடர்ந்து நிலைநிறுத்துகின்ற முடிவில் மஹிந்த என்றும் மாற்றத்தைக் காண்பிக்கவில்லை.

இதற்கு மேலாக, முள்ளிவாய்க்கால் கொடுந்துயருக்கு ஜனாதிபதி மஹிந்தவும் அவரது சகோதரர் கோத்தபாயாவுமே காரணம் என்று தமிழ் மக்களின் மனதில், கல்லில் எழுதிய எழுத்தாகப் பதிந்து விட்டது. இவை எல்லாமுமே, மஹிந்தவை சிங்கள தேசத்தில் ராஜாவாக்கி இருக்கின்றது. அதனை அவர் கனகச்சிதமாகப் பயன்படுத்துகின்றார்.

மறுபுறம் போட்டியிடும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, தமிழ் மக்கள் மஹிந்தவுக்கு வாக்களிக்க மாட்டார்கள். மற்றைய தெரிவு தானே என்பதால், தமிழ் மக்களின் வாக்கு தனக்கு நிச்சயம் கிடைக்கும் என்பதில் உறுதியாக இருக்கின்றார். எனவே தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக எதையாவது செய்ய விளைய வேண்டிய தேவை இல்லை என்று எண்ணுகின்றார். அத்துடன் அவ்வாறு ஏதாவது செய்யப் போய் சிங்கள வாக்குகளை இழக்க விரும்பவில்லை.

இதனால் தான் இதுவரையில் தமிழ் மக்களின் தீராப் பிரச்சினையாக இனப்பிரச்சினை தொடர்பிலோ, இராணுவப் பிரசன்னம், நில அபகரிப்பு தொடர்பிலோ எதுவும் அவர் பேசவில்லை. மாறாக அவரும், அவரது கூட்டணியினரும் மஹிந்த எடுத்திருக்கும் பிரசார அம்பான புலிக் கதையையே எடுத்திருக்கின்றனர்.

வெளிநாடுகளில் எஞ்சியிருக்கும் புலிகளையும் நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் தீர்த்துக் கட்டுவோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸாவும், அதற்கு சற்றும் சளைக்காமல் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, மஹிந்தவை போர்க் குற்றங்களுக்காக நீதிமன்றில் ஏற விடமாட்டோம் என்றும் கூறியுரைத்துள்ளனர்.

எனவே இருதரப்பும் சிங்கள வாக்குகளைக் குறிவைத்து – தமிழ் மக்களையும் – புலிகளையும் – பகடைக் காயாக்கி தேர்தல் வேட்டை நடத்துகின்றது. ஆக மொத்தத்தில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதிக்குப் பிறகு எங்களுக்காக எதுவுமில்லை.

பத்தி எழுத்து

## நாவாந்துறை தாக்குதல் 8 பேர் கைதாகிப் பிணை

### சமாதானத்துக்குச் சம்மதம்

யாழ்ப்பாணம், நவ. 29
யாழ்.நாவாந்துறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் அதனைத் தொடர்ந்தும் குழு மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்தகிராமத்தைச் சேர்ந்த இருதரப்பினரும் சமாதானமாகச் செல்வதாகக் கூறியுள்ளனர் என்றும் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற கால்பந்தாட்டப் போட்டியின் பின்னர் நாவாந்துறை அணியினர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது அதே இடத்தைச் சேர்ந்த மற்றுமொரு தரப்பினரால் அவர்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவியது.

சில தினங்களின் பின்னர் அதனைச் சீர்ப்படுத்துவதற்காக யாழ். பிரதேச செயலாளர் சென்றிருந்த போதும் கல்வீச்சு நடத்தப்பட்டது. அதன்பின்னரே 8 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் குறித்த இரு தரப்பினரும் சமாதானமாகச் செல்வதாகக் கூறியுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(வ–4)

# ‘நெல்சிப்’ நிதி மோசடி; விசாரணை இல்லை

### அதிகாரிகளை நியமிப்பதில் ஏற்படும் தாமதமே காரணமாம்

யாழ்ப்பாணம், நவ. 29
வடக்கு – கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களை மேம்படுத்தும் 'நெல்சிப்' திட்டத்தில் இடம்பெற்றதாகக் காணப்படும் ஊழல் மோசடிகள் குறித்த விசாரணை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. விசாரணையை நடத்துவதற்கான அதிகாரி இன்னமும் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படாததே அதற்கான காரணம் என்று முதலமைச்சரின் கீழ் வரும் அமைச்சுக்களின் செயலாளர் எஸ்.திருவாகரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டம் 2010ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் மாவட்டப்பொறியியலாளராக நியமிக்கப்பட்டவர் பெருமளவில் மோசடி செய்துள்ளார் என்று பெருமெடுப்பில் தொடர்ச்சியான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தது.

பக். 1 விரிவு

ஆரம்பக்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த பொறியியலாளர் வரையறைகளை மீறிச் செயற்பட்டார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அதனால் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தார். முழுமையான விசாரணை நடத்த அதிகாரிகள் மட்டக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக ஆளுநர் அறிவித்தார்.

எனினும் மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற ரீதியில் முதலமைச்சரின் மேற்பார்வையில் முதலமைச்சரின் செயலாளர் தலைமையில் அந்த விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்று பின்னர் தீர்மானிக்கப்பட்டது. விசாரணை அறிக்கையை மூன்று வார காலத்தினுள் தனக்குச் சமர்ப்பிக்கும்படியும் ஆளுநர் உத்தரவிட்டிருந்தார். எனினும் விசாரணை எதுவும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

"இந்தத் திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக முன்னெடுக்கப்பட்ட விடயம். எனவே விசாரணை அதிகாரியை நியமிக்குமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சைக் கோரியுள்ளோம். அவர்கள் விசாரணை அதிகாரியை இனங்கண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இன்னமும் உத்தியோகபூர்வமாக அறியத் தரவில்லை. அதன் பின்னரே விசாரணையை முன்னெடுக்க முடியும்" என்று தெரிவித்தார் செயலாளர் எஸ். திருவாகரன்.

இந்த மோசடி குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ–5)

## சிறுவர்






### வர்ணம் தீட்டி மகிழுங்கள்....

### துணுக்குகள்....

- ♥ 1941–ம் ஆண்டு இங்கிலாந்தில் முதல் முதலாக ஜெட் விமானம் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டது.
- ♥ ஈபிள் கோபுரத்தின் உயரம் 300 அடி.
- ♥ ஆமைக்கு பற்கள் கிடையா.
- ♥ டியூப் லைட் சுமார் 6 ஆயிரம் மணி நேரம் வரை எரியும் திறன் கொண்டது.
- ♥ வாத்தை தேசியப் பறவையாகக் கொண்ட இரு நாடுகள் கனடா, ஜாவா.
- ♥ கோள்களின் இயக்கத்தைக் கண்டுபிடித்தவர் கெப்ளர்.
- ♥ நோபல் பரிசுத் திட்டத்தை ஏற்படுத்தியவர் அல்பிரட் நோபல்.



கு.ராதா
இணுவில்



ஜெ.றொ.அன்சன், தரம்–5
உசன் இராமநாதன் ம.வி.

# பெரியவர்களின் பேச்சை மீறினால்...?



செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக் கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான். புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது. வேலிக்குள் முகத்தை நுழைத்துக் கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஒரு ஆட்டுக்குட்டி, 'உனக்கு என்னவேண்டும்?' என்று கேட்டது. ஓநாய், 'நண்பா... இங்கே இளசான புல் கிடைக்கும் போலிருக்கிறது. இளம்புல் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது. எனக்கு அது கிடைக்க வில்லை...' என்று வருத்தத்துடன் கூறியது. 'அப்படியா? நீ புல்லையா சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத் தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே...?' என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி. 'சேச்சே... அதெலாம் சுத்தப் பொய். நான் சுத்த சைவம்' என்றது ஓநாய். 'அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, இந்த வேலியைக் கடந்து இந்தப் புல்வெளிக் குள்ளே வருவதற்கான வழியைக் காட்டுகிறேன்' என்றபடி அருகிலிருந்த வேலி இடைவெளியின் வழியாக வெளியே வந்தது. உடனே ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது. குழந்தைகளாக இருப்பவர்கள் பெரியவர்கள் சொல்வதை நினைவில் கொண்டு, அதன்படி என்றும் நடக்க வேண்டும், இல்லையேல் ஆபத்தில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

## செய்திகள்

## வணிகம்

ப.1 விரிவு

# அஸ்வர் விலக அலி நியமனம்

### சு.கவின் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியில் திடீர் மாற்றம்



கொழும்பு, நவ.29
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் தனது பதவியில் இருந்து நேற்று விலகியுள்ளார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க திஸ்ஸ நாயக்கவிடம் கொடுத்துள்ளார்.
அஸ்வரின் இடத்துக்கு எம்.எஸ்.எஸ்.அமீர் அலி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இடர் நிவாரண சேவைகள் முன்னாள் அமைச்சரும், தற்போது கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் ஆவர்.
கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இரு ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அப்போது முதலமைச்சர் பதவிக்கு இலங்கை மக்கள் காங்கிரஸும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் மோதிக் கொண்டன. ஆனால் அரசு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து முதலமைச்சரைத் தெரிவு செய்தது.
மாகாண சபைக்கான அமைச்சர் தெரிவுகள் நடந்தபோது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அமீர் அலிக்கு கிழக்கு மாகாண சபை அமைச்சர் பதவி வேண்டாம் என்றும், மத்திய அரசில் நாடாளுமன்றில் அமைச்சர் பதவி வழங்கவேண்டும் என்றும் கோரியிருந்தது. அப்போது அதற்கு அரசு சம்மதம் தெரிவித்திருந்தது.
தற்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான அமீர் அலியும், எம்.எஸ்.சுபையிர், சிப்லி பாறுக் ஆகியோர் தனித்து இயங்கவுள்ளதாக அறிவித்தனர். கடந்த திங்கட்கிழமை இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உயர்பீடக் கூட்டத்தில் இதனை அறிவித்திருந்தனர். இவ்வாறான பின்னணியிலே அரசு தான் 2 ஆண்டுகளுக்குக் முன்னர் வழங்கிய வாக்குறுதியைத் தற்போது நிறைவேற்றியுள்ளது. (ந–10)

## ராஜபக்ஷ – பண்டாரநாயக்க குடும்பங்களின் போட்டி

### ஜனாதிபதித் தேர்தல் பற்றி பிள்ளையான்

மட்டக்களப்பு, நவ. 29
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்துக்கும் பண்டாரநாயக்கா குடும்பத்துக்கும் இடையிலேயே போட்டி என்று தெரிவித்திருக்கிறார் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) இந்தப் போட்டியை ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு சாதகமாக பயன்படுத்த முனைகின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட வெட்டுக்காட்டில் அமைக்கப்பட்ட பல நோக்கு மண்டபத்தை திறந்துவைத்து உரையாற்றினார் பிள்ளையான். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளராக இத்தனை காலமும் பதவி வகித்த மைத்திரிபால சிறிசேன தமிழர்களின் பிரச்சினைகள் பற்றி எப்போதாவது நாடாளுமன்றத்தில் கதைத்திருக்கின்றாரா? அல்லது விடுதலைப்புலிகளுடன் நடைபெற்ற ஒஸ்லோ பேச்சில் பங்குபற்றினாரா? தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி எதுவுமே தெரியாத ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார்.
அப்படிப்பட்டவர் ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது சாத்தியமா? இருக்கின்ற நிலைமைகளை குழப்பி நாட்டின் வளர்ச்சியையும் அபிவிருத்திகளையும் குழப்பப்போகின்றார்கள் – என்றார் சந்திரகாந்தன். (உ–10)

## அஸ்வர் பதவி விலகுவது குடும்பத்துக்கே தெரியாது

### ஊடகங்கள் மூலமே அறிந்து வருத்தம்

கொழும்பு, நவ.29
நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் தனது பதவியில் இருந்து விலகியுள்ள நிலையில், அதுகுறித்து தமக்கு எதுவுமே தெரியாது என்று கூறியுள்ளனர் அவரது குடும்பத்தினர். ஊடகங்கள் வாயிலாகவே நாங்கள் அதை அறிந்து கொண்டோம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராவார் ஏ.எச்.எம்.அஸ்வர். அவர் நேற்றுத் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். அதுகுறித்துக் கூறும்போதே அவரது குடும்பத்தினர் இவ்வாறு கூறினர்.
"சற்று நேரத்துக்கு முன்தான் பதவி விலகிவிட்டார் என்று ஊடகங்களின் செய்திகள் மூலம் அறிந்தோம். ஏன் பதவி விலகினார்? எதற்காக? அரசின் அழுத்தமா? என்று தொலைபேசி மூலம் பலர் எங்களிடம் கேட்டனர். பதவி விலகப் போவதாக அவர் எம்மிடம் கூறவே இல்லை. தற்போது தான் எங்களுக்குத் தெரியும். அதை அறிந்ததும் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். ஆனால் முடியவில்லை"– என்று கூறினர் அவரது குடும்பத்தினர். (ந–10)

## ரிஷாத்தை திருப்திப்படுத்த அரசு எடுத்த முயற்சி இது

### போட்டுடைக்கின்றார் எம்.எஸ்.எம்.பைரூஸ்

கொழும்பு, நவ.29
அஸ்வர் பதவி விலகியுள்ளமை அரசின் நிகழ்ச்சி நிரல். ரிஷாத் பதியுதீனைத் திருப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கையே இது– இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினரான எம்.எஸ்.எம். பைரூஸ்.
சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் ரிஷாத் தலைமையில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் மத்தியக் குழுக் கூட்டம் நடந்தது. அதில், அரசைத் திருப்பிப் பார்க்க வைக்கவும், அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும் அந்தக் கட்சியைச் சேர்ந்த, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மூவர் தனித்து இயங்கப் போவதாகக் கூறினர். அதை தமக்காக எடுத்த முடிவு என்று முஸ்லிம் மக்கள் தப்புக் கணக்குப் போட்டுவிட்டனர் என்றும்– அவர் கூறினார்.
அமைச்சர் ரிஷாத், தனது கட்சி உறுப்பினரான அமீர் அலிக்கு அமைச்சுப் பதவி வேண்டும். இல்லாவிட்டால் அரசை விட்டு வெளியேறிவிடுவதாக அழுத்தம் கொடுத்துள்ளார். அதையடுத்து ரிஷாத்தைத் திருப்திப்படுத்த அரசு அமீர் அலிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கொடுத்துள்ளது.
சுயநலத்தை முன்னிறுத்திச் செயற்படும் ரிஷாத் மற்றும் அவரது கூட்டணியின் உண்மை முகம் வெளிப்பட்டு விட்டது என்றும் அவர் கூறினார்.
தமது இருப்பைப் பாதுகாக்க, மக்கள் இருப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ள அமைச்சர் ரிஷாத் கூட்டணியின் இருப்பை முஸ்லிம் சமூகம் எதிர்காலத்தில் கேள்விக்குறியாக்கும் என்பது இன்று உறுதியாகியுள்ளது என்றும் – அவர் குறிப்பிட்டார். (ந–10)



இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையின் மரம் நடுகைத் திட்டம் கடந்த 20ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மரக் கன்று ஒன்றை நடுகின்றார். (த–9)

## 2014 இன் வெற்றியாளர் ஸ்ரீலங்கா ரெலிகொம்

நாட்டின் முன்னணி தகவல்தொடர்புதொழில்நுட்ப தீர்வுகள் வழங்குனரான ஸ்ரீலங்கா ரெலிகொம், அண்மையில் நடைபெற்ற 31 ஆவது வர்த்தக விளையாட்டுப்போட்டி – 2014 இல் இலங்கையின் சரித்திரத்திலேயே அதிகளவிலான பதக்கங்களைப் பெற்றதன் மூலம், ஒட்டுமொத்த வெற்றியாளராகத் தாம் வந்திருப்பதாகப் பெருமையுடன் அறிவிக்கிறது. ஸ்ரீலங்கா ரெலிகொம் குழுவானது 44 தங்கப் பதக்கங்கள், 41 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 36 செப்புப் பதக்கங்களைப் பெற்று மொத்தமாக 495 புள்ளிகளைப் பெற்றதுடன்– 245 புள்ளிகளைப் பெற்ற இரண்டாவது வெற்றியாளருக்கிடையிலான அதிகப்படியான புள்ளிகள் வித்தியாசத்திலும் வெற்றியடைந்து சாதனையீட்டியுள்ளது.
இந்தவருடம் 40 நிறுவனங்களிலிருந்து 1800 விளையாட்டுவீரர் கள் பங்குபற்றியதுடன் இந்திய வர்த்தக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியாளர்களான 60 இந்திய வீரர்களும் இதில் பங்கேற்றனர். ஸ்ரீலங்கா ரெலிகொம் சார்பாக விளையாடியவர்கள் நாடுமுழுவதுமுள்ள ஸ்ரீலங்கா ரெலிகொம் அலுவலக ஊழியர்களாவார்.
ஸ்ரீலங்கா ரெலிகொம் 220 விளையாட்டு வீர, வீராங்கனைகள் இந்த வருடத்தில் மாகாணங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்டவர்களாவார். இந்த மாகாணங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டிகளில் நாடு முழுவதிலுமிருந்து 800 ஸ்ரீலங்கா ரெலிகொம் ஊழியர்கள் பங்குபற்றினார்கள். முன்னேற்பாடு மற்றும் பங்குபற்றல் உட்பட பல அம்சங்களில் ஸ்ரீலங்கா ரெலிகொம் ஊழியர்கள் உயர் செயற்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர். ஸ்ரீலங்கா ரெலிகொம் பெற்ற பிரதான தங்கப்பதக்கங்களாவன:– ஒட்டுமொத்தமான அதிசிறந்த வீரர், ஒட்டுமொத்தமான அதிசிறந்த வீராங்கனை, ஒட்டுமொத்த சிறந்த வீரர், ஒட்டுமொத்த சிறந்த வீராங்கனை மற்றும் 31ஆவது றிட்ஸ்பரி வருடாந்த வர்த்தக விளையாட்டுப்போட்டியின் வீரர்கள் போன்றனவாகும்.
இந்த ஒட்டுமொத்த வெற்றி பற்றி ஸ்ரீலங்கா ரெலிகொம் லலித் டி சில்வா கருத்துரைக்கையில்; கடந்த சில வருடங்களாக எமது செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது. இந்த வருடம் எமது பொதுத்திட்ட அளவானது உயர்த்தப்பட்டு எமது குழுவும் அதற்கேற்ப விளையாட்டில் உச்சதிறமையைக்காட்டி வெற்றிபெற்றுள்ளது. இது எமது நிறுவனத்தின் மிகப்பெரிய சாதனையாகி எமக்குப் பெருமை தேடித்தந்துள்ளது. இது எமது குழுவின் திறமையைக் காட்டுவதுடன். முறையான பயிற்சி மற்றும் சரியான நடத்தையுடனான செயற்பாடுகளின் விளைவு வெற்றியே என்பதை வெளிப்படுத்துகிறது. வணிகமும், விளையாட்டும் ஸ்ரீலங்கா ரெலிகொமின் இரு சக்கரங்களைப் போன்றது. விளையாட்டில் பெற்ற வெற்றியானது வணிக கலாசாரத்துக்கு மாற்றப்படாது தொலைத் தொடர்பாடல் துறையில் எமது போட்டிமுனைகளைப் பாதுகாப்பதற்கு உதவும் என்பது அறிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.
எமது நிறுவனத்துக்கும் நாட்டுக்கும் மாற்றத்தைக் கொண்டுவரும் நன்மைகளை வழங்கக்கூடிய முன்னெடுப்பாளர்களா ஆரோக்கியமான மனம் உடல் கொண்ட ஒரு சுறுசுறுப்பான வேலைப் படை எம்மிடம் உள்ளது. –என்றார். (த)



skype™

# ஸ்கைப் பற்றி சில தகவல்கள்

இன்று இன்டர்நெட் வழியே எமது நண்பர்கள் மற்றும் உறவினர்களைப் பார்த்துக் கொண்டே பேசி மகிழ எமக்கு அதிகம் உதவுவது ஸ்கைப் புரோகிராம். இதனைப் பயன்படுத்த, இந்த புரோகிராமில் எமக்கென ஒரு யூசர் எக்கவுண்ட் ஏற்படுத்தி, அதற்கான பாஸ்வேர்டையும் அமைக்கவேண்டும். இனிமேல், இது போன்ற தனி எக்கவுண்ட் தேவையில்லை. பேஸ்புக் மற்றும் மைக்ரோசொப்ட் எக்கவுண்ட் மூலம், ஸ்கைப் புரோகிராமில் நுழைந்து செயற்படலாம். அண்மையில், விண்டோஸ் 8 வெளியிடப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர், ஸ்கைப் இதனை அறிவித்தது. இதே போல மேக் கணினியில் பயன்படுத்தும் வசதியையும் அளித்துள்ளது. இதனை ஸ்கைப் பதிப்பு 6 எனப்பெயரிட்டுள்ளது. ஸ்மார்ட் போன் கலரிக்கு இத்துடன், ஸ்கைப் பயன்படுத்துபவர்கள், விண்டோஸ் லைவ் மெசஞ்சர், ஹொட்மெயில் மற்றும் அவுட்லுக் டாட் காம் ஆகிய தளங்களுடன் இன்ஸ்டன்ட் மெசேஜ் அனுப்பவும் இயலும். விண்டோஸ் 8 ஆப்பரேட்டிங் சிஸ்டம் கொண்டுள்ள இயக்கமுறைகளின் படியே, ஸ்கைப் தொகுப்பும் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. விண்டோஸ் 8 போல, மேலும் ஆறு மொழிகளில் கூடுதலான இயக்கத்தையும்; ஸ்கைப் தற்போது கொண்டுள்ளது. மேக் சிஸ்ரத்தினைப் பொறுத்த வரை, ஸ்கைப் தற் போது ஒன்றுக்கு மேற்பட்ட விண்டோஸ்களில்கற்செய்திடும் வசதியைத் தந்துள்ளது. மேலும் அப்பிள்ரெற்றிணாடிஸ்பிளேயையும் ஸ்கைப் சப்போர்ட் செய்கிறது.

# கீறல் விழுந்த சி.டிக்களையும் சரி செய்யலாம்?

இன்று கணினி வைத்திருப்பவர்கள் என்று இல்லாமல் அனைவருக்கும் இருக்கும் ஒரு பெரிய சிக்கல் உள்ளது. சி.டியில் நாம் எமது போட்டோக்களிலிருந்து, பிறந்தநாள் நிகழ்ச்சிகள், திருமண நிகழ்ச்சிகள், நமது தனிப்பட்ட நிகழ்வுகள் என்பவற்றை சி.டி.யில் பதிவு பண்ணி பாதுகாத்து வருகிறோம். ஆனால், இதிலும் ஒரு பெரிய சிக்கல் வந்து விடுகிறது. சி.டிக்களில் உராய்வு, தூசு படிதல் போன்ற பல காரணங்களால் சி.டியில் இருக்கும் தகவல்களை நாம் பெற முடியாத சூழல் ஏற்படும்போது தான் நாம் அதிகமாக பாதிக்கப்படுகின்றோம். நாம் ஆசை ஆசையாக சேமித்து வைத்த வீடியோக்கள். அனைத்தும் வீணாகி போகும் போது அதனால் நாம் அடையும் பாதிப்பு மிக மிக அதிகம். எனவே, முதலில் மெல்லிய துணியைக் கொண்டு சி.டி.களை உள்ளே இருந்து வெளிப்புறமாக துடைக்க வேண்டும். சோப்பு கலந்த நீரில் போட்டு கழுவவும் செய்யலாம்..




## வேலையாள்கள் தேவை

பேக்கறி வேலையில் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 021 561 5051 (41565) (4.6.3)

## காணிவிற்பனைக்கு

இராசபாதை கரந்தன் சந்தியில் இருந்து மேற்குப்பக்கமாகப்போகும் றோட்டில் இரண்டாவது முடக்கில் கோயிலுக்கு வடக்கே 8பரப்பு 12.96 குழி காணி விற்பனைக்கு உண்டு.

(41414) (45.6.3) தொடர்பு: 077 978 3206

## வாடகைக்கு

அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில்

**Hotel Villa City**

422, Galle Road, Colombo-06

தொடர்பு: 072 255 2222 (சி/15102) (4.6.3)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

JEYRO SUPER CUP-90

NEW MODEL N.P.-WP.....

Self Start Model

7000 km Used

தொடர்பு : 0777 198 245 (சி/15014) (5.3)

## வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

FWC

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதனால் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் தங்கள் பிரேரணைகளை

செயலாளர்,
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்,
வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 15.12.2014 இற்கு முன்னர்அனுப்பி வைக்கவும்.

செயலாளர்,
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்.

(41575)(5.3)

## செல்லா சினிமா யாழ்ப்பாணம்



விஜய், சமந்தா நடிப்பில்

**கத்தி**

(தினசரி 4 காட்சிகள்)

10.30, 2.30, 6.30, 9.30

எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்

077 326 6949

## வைத்தியம்

Diabities, High BP, Cholestrol, Thyroid, Rheumatic, Arthutis, Spondilosis, முள்ளந்தண்டு விலகல், விறைப்பு, வலி, வேதனை, குத்து, உளைவு, குழந்தை இன்மைக்கான சிறப்பு சிகிச்சைகள், தலைமுடி கொட்டுதல், உடல் பருமன், உடல் மெலிவு, சுகம் தரும் வைத்தியம்.


சனி, ஞாயிறு தினங்களில்.

சித்த வைத்தியர்

Dr.R.Sivagurunathan (சி/16103) (4.6.3)

077 730 1669, நல்லூர் அல்லது வெள்ளவத்தை.


# உங்கள் செல்போன் ஒரிஜினலா?



நீங்கள் அதிக விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்தும் செல்போன்கள் அனைத்தும் ஒரிஜினல்தானா என்பதைச் சோதித்துப் பார்ப்பது தற்போது கட்டாயமாகும். சில ஆயிரம் ரூபாய் முதல் பல ஆயிரம் ரூபாய்வரை கொடுத்து ஒரு புதிய மொடல் செல்போனை வாங்கும் போது, அதனுடைய உண்மைத் தன்மையை அறிய வேண்டும் அல்லவா? உண்மையான நிறுவனத்தைப் போன்றே தற்போது போலியானதயாரிப்புக்கள் விற்பனைக்கு வந்து அசல் எது? போலி எது என்று கண்டு பிடிக்க முடியாதவாறு எந்த வித்தியாச மும் இல்லாமற் காணப்படும். எனவே முதலில் உங்கள் செல்போன் ஒரிஜினல் தானா என்பதைச் சோதித்துப் பாருங்கள்.


## CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## ஒரே மருந்தில் எல்லா நோயும் தீருமா ?(ஆம் என்பவர் பலர்)

KU Education

உங்கள் நிலைக்கேற்ற, படிமுறையில் அமைந்த ஆங்கிலப் பயிற்சி நெறிகளை அதி நவீன மற்றும் நட்பான கல்விச் சூழலில் நிபுணர்களிடம் கற்றுத்தேர்ந்திடுங்கள். சர்வதேச ஆங்கிலம்

**General English**
**Spoken English**
**Business English**
**IELTS/A1-B1-ESOL**

UK-Visa English APPROVED CENTRE

UEC Quality Education 16 Years

http://edu.kugroup.info

மெதுவாக கற்கும் திறனுடையவர்களுக்காகவே விசேடமாக உருவாக்கப்பட்ட பயிற்சிநெறிகள்

**Knowledge Universe**
The British College of Studies
No 626,1/1,K.K.S Road,Jaffna
021-3208342/0777302882

Only centre with UK-MBA qualifed lecturers in Jaffna

## டோகாவில்
## சுத்திகரிப்பு சேவை வழங்கும் கம்பனியில் உடனடி வேலைவாய்ப்பு

| தொழில் | எண் | சம்பளம் |
|---|---|---|
| சுத்திகரிப்பாளர் | 186 | 800 QR (28,800/=) |

வெளிநாட்டு அதிபர்களால் நவம்பர் 30, டிசம்பர் முதலாம் திகதிகளில குருநாகலில் உள்ள புரடென்ஷல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுகிறது.

**நிபந்தனைகள்**

- 2 வருடகால ஒப்பந்தம்.
- இலவச வைத்தியம் மற்றும் தங்குமிட வசதி.
- ஒரு நாளில் 8 மணித்தியாலப்படி வாரத்தில் 6 நாள்கள் வேலை.
- 2 வருடங்கள் முடிந்ததும் டோகாவிலிருந்து கொழும்பு வருவதற்கான இலவச விமான பயணச்சீட்டு.
- மற்றையவை அனைத்தும் டோகா-கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திட்டத்திற்கு அமைவாக.

(அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுமட்டும்)

(ADD APP NO: AL/2769/ADVT 49/14)

**Visit our web : www.prudentailagency.lk**

Prudential Foreign Employment Agency (PVT) Ltd.
No.72/ 1,2nd Floor, Colombo Road, Kurunagala.

Call now: 037 494 5555 / 077 4574 555

# உலகச் செய்திகள்




## 'வைபர்' பாவனையில் இந்தியாவுக்கு முதலிடம்

டில்லி,நவ.29

வைபர் பாவனையில் அமெரிக்காவைப் பின்தள்ளி இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ஸ்கைப்பை அடுத்து அதற்குப் போட்டியாக ஆரம்பிக்கப்பட்ட வைபரானது, தகவல் பரிமாற்றம் மற்றும் உரையாடல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டது. இணையம் மூலம் மற்றொரு வைபர் உறுப்பினருக்கு இலவசமாக வைபர் மூலம் உரையாடவும் தகவல்களை அனுப்பவும் முடியும். இந்தச் சேவை ஆரம்பத்தில் ஐபோனுக்கு மட்டும் வழங்கப்பட்டது. பின்னர், அன்ரோய்ட், விண்டோஸ் போன்றவற்றுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. தற்போது இந்தியாவில் 3.3கோடி பேர் வைபர் பயன்படுத்துகின்றனர். எனவே வைபர் பாவனையில் முதலிடத்தை இந்தியா தனதாக்கிக் கொண்டது. அமெரிக்கா 2 ஆம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. அங்கு 3 கோடி பேர் வைபரைப் பயன்படுத்துகின்றனர்.

உலகம்முழுவதும்உள்ள வைபர் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை 46 கோடியாகும். பயன்பாட்டாளர் எண்ணிக்கையில்மட்டுமின்றி,வருமானம்பெற்றுத்தருவதிலும் முதல் ஐந்து நாடுகளில் இந்தியா உள்ளது. (ரி)

# பாம்பன் கணவாய் ஊடாக சேது சமுத்திரத் திட்டம்

## ஆய்வு செய்கிறது இந்திய மத்திய அரசு

டில்லி, நவ.29

ராமர் பாலத்தைச் சேதப்படுத்தாமல் பாம்பன் கணவாய் வழியாக சேது சமுத்திரத் திட்டத்தை முன்னெடுப்பது குறித்து மத்திய அரசு ஆய்வு செய்து வருவதாக மக்களவையில்அமைச்சர்பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மக்களவை கேள்வி நேரத்தின் போது சேது சமுத்திரத் திட்டம் குறித்து கப்பல் போக்குவரத்து இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் நேற்றுமுன்தினம் கூறியதாவது:

"சேது சமுத்திரத் திட்டத்தை மாற்று வழியில் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ரயில் இந்தியா தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார சேவை அமைப்பு ஆய்வு மேற்கொண்டுஅறிக்கைதாக்கல்செய்துள்ளது. பாம்பன் கணவாய் வழியாகசேதுசமுத்திரக்கால்வாயை அமைப்பது குறித்து இந்தக்குழு



பரிந்துரை செய்துள்ளது. இதற்குச் சுற்று சூழல் துறை மற்றும் தமிழகஅரசின்அனுமதி தேவை. இந்த ஆய்வறிக்கையின் முக்கிய அம்சங்களாவன:

பாம்பன் கால்வாய் பகுதியில் முக்கிய தடையாக இருப்பது புள்ளிவர்சல் மற்றும் குருசடை பவளப்பாறைதீவுகளுக்கு இடையேயுள்ள குறுகலான வழிதான். மன்னார் வளைகுடா மற்றும் பாக்குநீரிணை இடையே நிலவும் நீரோட்டம் காரணமாக இந்த குறுகலான இடத்தில் மணல் சேருகிறது. இந்தக் கால்வாயின் அகலம் 125 மீற்றர். ஆழம் 2.13 மீற்றர். அலை அதிகமாக இருக்கும்நேரத்தில்மட்டும்அந்தப் பகுதி வழியாகச் செல்வது சிக்கல்.

அந்தக் கால்வாயை 12 மீற்றர் ஆழம் தோண்டினால், 30 ஆயிரம் தொன் எடை மற்றும் 21 மீற்றர் உயரம் உள்ள கப்பல்கள், பாம்பன் கணவாயின் குறுக்கேயுள்ள பாம்பன் பாலத்தைக் கடந்து செல்ல முடியும். (வ)

## டுபாய் ஷொப்பிங் திருவிழாவில் உலகின் நீளமான தங்கச் சங்கிலி



டுபாய், நவ.29

டுபாய் ஷொப்பிங் திருவிழாவையொட்டி உலகின் நீளமான தங்க சங்கிலி தயாரிக்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

டுபாயில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பெப்ரவரி முதலாம் திகதி வரை உலகப்புகழ்பெற்ற துபாய் ஷொப்பிங் திருவிழா நடைபெற உள்ளது. இதனையொட்டி டுபாயின் 500 இற்கும் மேற்பட்ட முன்னணி தங்க நகை நிறுவனங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இணைந்து உலகின் நீளமான தங்கச் சங்கிலியை தயாரித்து வருகின்றனர். அதன் நீளம் சுமார் 5கிலோ மீற்றருக்குமேலாகவும் இதற்காக 160 இலிருந்து 200 கிலோ தங்கம் வரை பயன்படுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிகள் முழுமையாக நிறைவு பெற்று ஜனவரி 2 ஆம் திகதி மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்று டுபாய் ஷொப்பிங்திருவிழா அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனவரியில்ஆரம்பித்துஒருமாதம் நடைபெற உள்ள துபாய் ஷொப்பிங் திரு விழாவையொட்டி 100 கிலோ தங்கம் குலுக்கல் முறையில் வாடிக்கையாளர்களுக்கு பரிசளிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சிரித்துப்பேசி நலம் விசாரித்த இந்திய - பாக். பிரதமர்கள்

### சார்க் மாநாட்டில் புதிய திருப்பம்

சார்க் மாநாட்டின் நிறைவு நாளான நேற்றுமுன்தினம் பிரதமர் நரேந்திர மோடியும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் இருமுறை சிரித்துப்பேசி நலம்விசாரித்துக்கொண்டனர்.மாநாட்டின் நிறைவு நாளான நேற்றுமுன்தினம்நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன்பு, மோடியும் ஷெரீப்பும் பரஸ்பரம் கைகுலுக்கியபடி பேசினர். அதேபோன்று, மாநாடு முடிவடைந்ததும் நவாஸ் ஷெரீப்பின் தோளில் தனது கைகளை வைத்து மோடி பேசினார். அதைத் தொடர்ந்து, கைகளை குலுக்கிக் கொண்டு சிறிது நேரம் சிரித்துப் பேசியபடி, செய்தியாளர்களிடம் கலந்துரையாடினர்.



இதேவேளை சார்க் மாநாட்டின் தொடக்க நாளான புதன்கிழமை நிகழ்ச்சியின்போது மோடியும் ஷெரீப்பும் அருகருகே அமர்ந்திருந்தும் ஒருவரைஒருவர் முகம்பார்த்துப் பேசிக்கொள்ள வில்லை. இதனால், தலைவர்கள் இடையே இறுக்கமான நிலை காணப் பட்டது. சார்க்மாநாட்டின்நிறைவுநாளன்று பரஸ்பரம் இருவரும் சிரித்துப் பேசிக் கொண்டதால், இரு நாடுகளிடையேயும் நல்லிணக்கம் ஏற்படவாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ரி)



## இந்திய ராணுவம் தீவிரவாதிகள் மோதல்: 10 பேர் சாவு

ஜம்மு, நவ.29

ஜம்மு–காஷ்மீரில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சண்டையில் 3 வீரர்கள், 4 தீவிரவாதிகள், 3 அப்பாவிகள் என மொத்தம் 10 பேர் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானில் இருந்து இராணுவச் சீருடை அணிந்த பயங்கரவாதிகள், ஜம்முவின் ரஜௌரி மாவட்டத்தில் உள்ள ஆர்னியா பகுதிக்குள் நேற்றுமுன்தினம் காலை ஊடுருவினர். அவர்கள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இந்திய வீரர்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர். இதில் 3 வீரர்களும், பொதுமகன் ஒருவரும் உயிரிழந்தனர். பதில் தாக்குதலில் 3தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவம், எல்லைப் பாதுகாப்புப் படை, மாநில பொலிஸார் ஆகியோர் இணைந்து தீவிரவாதிகளைத் தேடும் பணியில் கூட்டாக ஈடுபட்டுள்ளனர். (ரி)

# விண்வெளிப் பயணத்தில் சேரும் கழிவுகளில் இருந்து எரிபொருள்

## அமெரிக்க பல்கலைப் பேராசிரியர்கள் சாதனை

வொஷிங்டன், நவ.29

விண்வெளிப் பயணத்தில் சேகரமாகும் கழிவில், எரிபொருள் தயாரிக்கும் திட்டத்தை, அமெரிக்காவைச் சேர்ந்த இரு இந்திய வம்சாவளி விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

நிலவில் குடியிருப்பு வசதியை 2019 – 24ஆம் ஆண்டுக்குள் ஏற்படுத்த நாசா முடிவு செய்துள்ளது. தற்போது, நிலவுக்குச் செல்வதற்கும், அங்கிருந்து திரும்புவதற்கும்தேவையான எரிபொருளை விண்கலங்கள் சுமந்து செல்கின்றன. அதைப் பாதியாகக் குறைக்கும் நோக்குடன், விண்வெளி வீரர்களின் மனி தக் கழிவுகள், பயன்படுத்தப்படாத உணவுகள், அவை அடங்கியுள்ள பெட்டிகள் போன்றவற்றில் இருந்து, எரிபொருளை உருவாக்க முடிவு செய்யப்பட்டது.

இதன் மூலம், பூமியில் இருந்து நிலவுக்குச் செல்வதற்கான எரிபொருளை மட்டுமே விண்கலம் சுமந்துசெல்லும்.நிலவில்இருந்து பூமிக்குப்புறப்படமனிதக்கழிவில் உருவாக்கப்படும் எரிபொருள் உதவும்.இத்தகையஎரிபொருளை உருவாக்கும் திட்டம், புளோரிடா பல்கலையில் பணியாற்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பேராசிரியர்பிரதாப்புள்ளமணப்பலின் வசம் ஒப்படைக்கப்பட்டது. அவரும், இலினாய்ஸ் பல்கலையைச் சேர்ந்த இந்திய வம்சாவளி மாணவர் அபிஷேக் டோபு ளும் இணைந்து, மாதிரிக் கழிவில் இருந்து மீத்தேன் மற்றும் கரிய மில வாயு கலந்த, உயிரி எரிவாயு தயாரிப்புத் திட்டத்தை வடிவமைத் துள்ளனர்.

மற்றொரு செயற்பாட்டின்மூலம் ஓராண்டில் இதர பயன்பாட்டுக்கான, 200 கலன் தண்ணீரையும்உருவாக்கமுடியும்.மின்பகுப்பு முறைமூலம், தண்ணீரில் உள்ள ஹைதரசன் பிரிக்கப்பட்டு, ஒட்சிசனை விண்வெளிப் பயணத்தின்போது வீரர்கள் சுவாசிக்க பயன்படுத்திக் கொள்ள முடியும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# உலகச் செய்திகள்

## எபோலா உயிரிழப்பு 5,698 ஆக அதிகரிப்பு

### உலக சுகாதார நிலையம் தகவல்

நியூயோர்க், நவ.29

எபோலாநோய்ப்பாதிப்புக்காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5,698–ஆக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்குஆபிரிக்கநாடானகினியில் டிசெம்பர் 2013 இல் முதலில் ஏற்பட்ட இந்த தொற்றுநோய் பின்னர் லைபீரியா, சியரா லியோன் ஆகிய நாடுகளிலும் பரவியது. லைபீரிய நாட்டில்தான் அதிக அளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அங்கு மட்டும் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 3,016 ஆகும். சியாரா லியோனில் 1,398 பேர் எபோலாவால் உயிரிழந்தனர். கினியாவில் 1,260 பேர் உயிரிழந்தனர்.

அதிகளவு இறப்புகளால், ஆபிரிக்க நாடுகளைத் தொடர்ந்து அச்சுறுத்தி வரும் இந்த நோய்க்கு இதுவரை 5,698 பேர் உயிரிழந்ததாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (வ)



அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் நான்காவது வியாழக்கிழமை நன்றி தெரிவிக்கும் விழா கொண்டாடப்படுகிறது. ஐரோப்பியர்கள் அமெரிக்காவுக்கு வந்து குடியேறியபோது விவசாயப் பயிர்களை அறுவடை செய்ய உதவிய அமெரிக்கப் பூர்வீகக் குடிகளுக்கு நன்றி தெரிவிக்கவே இந்த விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. வியாழக்கிழமை நியூயோர்க்கில் நடைபெற்ற இந்த விழாவில் நடைபெற்ற பேரணிக் காட்சி. (வ)



## எபோலாத் தடுப்பு மருந்து முதல்கட்ட சோதனை வெற்றி

வொஷிங்டன், நவ.29

மனிதர்களைக் கொண்டு நடத்தப்பட்ட சோதனையின் முடிவில் புதிய எபோலா தடுப்பு மருந்து பாதுகாப்பானது என்றும், வைரஸ் தாக்கத்தை எதிர்க்கும் சக்தியை வழங்கக்கூடியது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அமெரிக்காவின் தேசிய சுகாதாரத்துறை நிறுவனத்தின் மருத்துவரொருவர் தெரிவித்துள்ளார். 20 பேருக்கு இந்தப் புதிய மருந்து வழங்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டதாகவும், பக்கவிளைவுகள் ஏற்படாததோடு, தேவையான எதிர்ப்புச் சக்தியையும் மருந்து உருவாக்குவதும் உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மருந்தை மேற்கு ஆபிரிக்காவில் இருக்கும் சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்கி பரிசோதனை மேற்கொள்ள உள்ளதாகவும், அதன் பின்னரே இதை அதிகாரபூர்வமாக நோயாளிகளுக்கு வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

## காபூலில் தாக்குதல் பொதுமக்கள் சாவு

### பிரிட்டன் தூதரகத்துக்கு அருகில் சம்பவம்

காபூல், நவ.29

ஆப்கனிஸ்தான் தலைநகர் காபூலிலுள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றின் மீது மனித வெடிகுண்டுதாரி ஒருவர் தாக்குதல் நடத்தியதில் குறைந்தது 5 ஆப்கானிய பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 30 இற்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இந்தத்தாக்குதலை உறுதிப்படுத்திய பிரிட்டன் தூதரக அதிகாரி தாக்கப்பட்ட வாகனத்துக்கு உள்ளே இருந்த சிலர் காயம் அடைந்த போதும் அதனுள்ளே பிரிட்டன் அரச அலுவலர்கள் எவரும் இருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். காயம் அடைந்தவர்களில் 5 பேர் சிறுவர்கள் எனவும் ஆப்கன் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்குத் தாம் பொறுப்பேற்பதாக விரிவான அறிக்கை ஒன்றில் தலிபான்கள் அறிவித்துள்ளனர். குறித்த மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட காபூலின் பகுதியில் வெளிநாட்டவர்கள் வாழும் பல கட்டடங்களும் சர்வதேச இராணுவத் தளங்களும் அமைந்துள்ளன.

கடந்த சில வாரங்களாக அந்தப் பகுதியில் போராளிக்குழுக்களின் இலக்காக இராணுவ ஊர்திகளும், வெளிநாட்டு சேவை நிறுவனங்களின் கட்டடங்களும் அவர்களின் சர்வ தேச ஊழியர்களும் இருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## பணியாளர் இல்லாமலேயே உணவு மேசைக்கு வரும்

அபுதாபி யாஸ்மாலில் 14000 சதுர அடி பரப்பளவில் விளையாட்டு ராட்டிணமான ரோலர் கோஸ்டர் போன்ற வடிவமைப்பில் உலகின் மிகப்பெரிய உணவகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 378 இருக்கைகளுடன் தானியங்கி தொழில் நுட்பத்தில் உணவு மேசைக்கு வருவதற்கு ரோலர் கோஸ்டர் வடிவிலான 30 பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.



உணவுக்கு பதிவு செய்தால் அது நேரடியாக மேசைக்குவரும்வகையில் இருக்கைகள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு மேசைக்கும் தனித்தனியான குறியீடு கொடுக்கப்பட்டு தனித்தனியாக கணினித் தொடுதிரை அமைக்கப்பட்டுள்ளது. அதில் அமரும் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு வேண்டிய உணவையும், இருக்கை எண் குறித்த தகவலையும் மேசையிலுள்ள கணினியின் தொடுதிரையில் டைப் செய்து கார்ட் மூலம் அதற்கான தொகையையும் செலுத்தி விட்டால் குறிப்பிட்ட நேரத்துக்குள் ரோலர் கோஸ்டர் வடிவிலான பாதை வழியாகச் சுற்றி ,சுற்றி தானியங்கி தொழில்நுட்பத்தில் பதிவு செய்த உணவு முற்றிலும் பாதுகாப்பான பாத்திரத்தில் வாடிக்கையாளரின் மேசைக்கு வந்து விடும்.

இந்த தொழில் நுட்பத்தின் மூலம் ஹோட்டல் பணியாளர் உதவியின்றி வாடிக்கையாளர்கள் உணவைப் பெறமுடியும்.





## அமெ.கறுப்பினப் போராளிகளை மூளைச்சலவை செய்யும் ஐ.எஸ்.

அமெரிக்காவின் கறுப்பின போராளிகளை தங்கள் அமைப்பில் சேர்க்க ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் அழைப்பு விடுத்துள்ளனர். ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ், அந்த இயக்கத்துக்கு ஆள் சேர்க்கும் பணியை சமூக வலைத் தளங்களின் மூலம் மும்முரமாக மேற்கொண்டுவருகிறது.

இந்தநிலையில் அமெரிக்காவில் பெர்குசன் மாகாணத்தில் வெடித்துள்ள கறுப்பினத்தவரின் வன்முறையைத் தங்களுக்குச் சாதகமாகப்பயப்படுத்திக் கொண்டு ஆள் சேர்க்க நினைத்த ஐ.எஸ்.ஐ.எஸ், டுவிட்டரில் கறுப்பின போராளிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இதுகுறித்து அவர்கள் டுவிட்டரில், "எங்கள் இயக்கத்தில் வந்து சேர்ந்து, இஸ்லாமிய மதத்துக்கு மாறி தலைவர் அல் பாக்தாதியிடம் சரணடையுங்கள் என்றும், கறுப்பர்களே. உங்களை நாங்கள் பாதுகாக்கிறோம்" என்றும் தெரிவித்துள்ளனர். (வ)

# பல்சுவை

## விவேகானந்தர் சிந்தனையிலிருந்து....



### உங்களை நல்வழிப்படுத்துவதற்கு நீங்களே ஆசான்

மதிப்பும் மரியாதையும் அன்பும் உடையவராக இருப்பது அவசியம். ஆனால் ஒருவர் சொல்வதையெல்லாம் ஆராயாமலும் பகுத்தறியாமலும் தனித் தனியாகப் பிரித்துப் பார்க்காமலும் அப்படியே விழுங்கிக் கொள்வது என்பது பிழையான விடயம். இந்த உலகத்தில் மாறுபட்ட கருத்துக் குறித்து அனுதாபம், பெருந்தன்மை காட்ட வேண்டும். அது மிகவும் நல்ல விடயம். ஆனால் மற்றவர்கள் சொல்வதையெல்லாம் நாம் எவ்வளவு காலம் நம்பிக் கொண்டிருக்கிறோமோ அதுவரைக்கும் தான் இந்த அனுதாபமும் பெருந்தன்மையும் இருக்கிறது. அவர்களிடமிருந்து மாறுபட்ட உடனே இந்த அனுதாபமும் அன்பும் மறைந்து விடுகின்றன. இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களின் விடயங்களில் எப்போதும் தங்கள் தலையை நீட்டிக் குழப்பம் விளைவித்துக் கொண்டேயிருப்பார்கள். அவர்களின் குழப்பத்தைத் தடுக்கும் வகையில் நாட்டில் ஏதாவது ஒன்று தோன்றினால் அவர்களின் இதயங்கள் எரியும். கணக்கேயில்லாத வெறுப்புக்கள் வெளிப்படும். என்ன செய்வது என்றே அவர்களுக்குத் தெரியாது. அத்தகையோர் இவ்வாறான மனநிலையிலிருந்து முற்றாக விடுபட வேண்டும். நீங்கள் பற்றற்றிருங்கள். மனம் சேவை செய்யட்டும் மூளையின் பகுதிகள் வேலை செய்யட்டும். ஆனால் ஓர் அலை கூட மனத்தை வெல்ல இடம் கொடுக்காதே. ஓர் அன்னியன் போலவும் வழிப்போக்கன் போலவும் வேலை செய், ஆனால் உன்னைத் தளைகளுக்கு உள்ளாக்காதே. அது அஞ்சத்தக்கது. நீங்களே உங்களுக்குள்ளிருப்பதை வெளிவரச் செய்ய வேண்டும். ஒருவராலும் உங்களுக்குக் கற்பிக்க முடியாது. ஆன்மிகமே இதற்கு வழி. வேறு யாராலும் உங்களை ஆன்மிகவாதியாக்க முடியாது. நீங்களே உங்களுக்கு ஆசான். உங்களுக்கு உங்கள் ஆன்மாவைத் தவிர வேறெந்த ஆசிரியரும் கற்பிப்பதற்கு இல்லை.



## ஹோட்டல் உணவை சாப்பிடுகிறீர்களா?

எப்போதும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருப்பதால் பலரும் ஹோட்டல் உணவையே விரும்பிச் சாப்பிடுகின்றனர். அதுமட்டுமின்றி வீட்டு உணவை விட ஹோட்டல் உணவு சுவையாக இருக்கும் என்பதும் ஒரு காரணம், ஆனால் அதன் பின்விளைவுகள் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? பெரும்பாலான ஹோட்டல் உணவுகளில் கலோரிகள் மற்றும் கொழுப்புகள் அதிகம் இருக்கும், அதனைத் தொடர்ந்து சாப்பிட்டு வரும் பட்சத்தில் பல்வேறு உபாதைகள் வரக்கூடும். மேலும் அங்கு பயன்படுத்தப்படும் காய்கறிகள் நன்கு சுத்தம் செய்யப்பட்டதாக இருக்காது, அவற்றை உட்கொள்ளும் போது வயிற்றில் குறிப்பாக குடலில் பல்வேறு பிரச்சினைகள் வரும். இதேபோன்று கடைகளில் பயன்படுத்தப்படும் எண்ணெயையும் குறிப்பிடலாம், பலமுறை ஒரே எண்ணெயைப் பயன்படுத்தினால் அதன் எதிர்மறை விளைவுகள் அதிகம். குறிப்பாக அசைவ உணவுகள் சாப்பிடுவதைத் தவிர்த்தல் நலம், ஏனெனில் இறைச்சிகளை நன்றாகச் சுத்தம் செய்தார்களா என்பது எமக்குத் தெரியாது, இதனால் அதிலுள்ள கிருமிகள் முழுமையாக நீங்காமல் நம்மைப் பாடாய்ப்படுத்திவிடும்.

## நாளை

**கார்த்திகை-14 ஞாயிற்றுக்கிழமை | 30.11.2014**

திதி: நவமி பி.இ.02.04 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ.03.55

சுபநேரம்:09.14-10.44 வரை
இராகுகாலம்: 04.44-06.14 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 7 | | 3 | | | |
| 7 | 2 | 9 | 8 | | | 6 | | |
| 3 | 4 | | | | 9 | 8 | | 1 |
| | 1 | | | | | 7 | 3 | |
| 6 | | | | 8 | | | | 9 |
| | 3 | 7 | | | | | 5 | |
| 2 | | 1 | 9 | | | | 6 | 4 |
| | | 3 | | | 1 | 9 | 8 | 2 |
| | | | 6 | | 4 | | 1 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதி கள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 8 | 2 | 3 | 6 | 9 | 7 | 5 |
| 3 | 2 | 9 | 1 | 5 | 7 | 4 | 6 | 8 |
| 6 | 5 | 7 | 8 | 9 | 4 | 1 | 3 | 2 |
| 8 | 9 | 2 | 5 | 7 | 3 | 6 | 1 | 4 |
| 5 | 7 | 4 | 6 | 8 | 1 | 3 | 2 | 9 |
| 1 | 3 | 6 | 4 | 2 | 9 | 8 | 5 | 7 |
| 7 | 4 | 3 | 9 | 1 | 5 | 2 | 8 | 6 |
| 9 | 8 | 1 | 7 | 6 | 2 | 5 | 4 | 3 |
| 2 | 6 | 5 | 3 | 4 | 8 | 7 | 9 | 1 |

## சத்துக்கள் நிறைந்த முருங்கைக் கீரை



விற்றமின்களும், தாது உப்புகளும் அடங்கிய முருங்கைக் கீரை எண்ணற்ற நோய்களைக் குணப்படுத்தக்கூடியது. கண் நோய்களுக்கு மருந்தாக இருப்பதுடன், இரத்தச் சோகையையும் தடுக்கிறது. இதனைக் கொண்டு செய்யப்படும் முருங்கைக் கீரை கட்லெட் சுவையாக இருப்பதுடன் ஆரோக்கியம் நிறைந்தது. கேரட், பீன்ஸ், முட்டைக் கோஸ், உருளைக் கிழங்கு போன்றவற்றை பொடியாக நறுக்கி, நறுங்கிய காய்கறிகள் மற்றும் முருங்கைக் கீரையை வேக வைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் சோள மாவு, கம்பு மாவு உப்பு போட்டு அதில் வேக வைத்த காய்கறிகளைப் போட்டு சப்பாத்தி மாவு பதத்துக்கு பிசைந்து கொள்ளவும். பிறகு தோசைக் கல்லை அடுப்பில் வைத்து தோசைக் கல் சூடானதும், தேவையான வடிவில் தட்டிப் போட்டு வேக வைத்து எடுத்தால் சுவையான கட்லெட் தயார். இதனைச் சாப்பிடுவதால் அதிக சத்துக்கள் சேரும்.

# ஜோதிடம்

# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 02.11.2014 - 2017



### 27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

## மிதுனம்



***மிதுன ராசி நேயர்களே!***

மிதுன ராசியில் பிறந்தவர்கள் அழகான மீன் போன்ற கண்களும், உயரமான உடல் அமைப்பு இருந்தாலும் ஒல்லியான தேகமே இருக்கும். எப்பொழுதும் சுறுசுறுப்பாக சுற்றி வரும் இவர்களுக்கு பரந்த நெற்றியும், பிறரை வசீகரிக்கத்தக்க தனித்தன்மையும் இருக்கும். இவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பார்கள். ஒருபோதும் சோம்பலாக காலம் கழிக்க மாட்டார்கள். நிதானமான அறிவாற்றல் இருந்தாலும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றால் போல குணத்தை மாற்றிக் கொள்வார்கள். இவருடன் நெருங்கிப் பழகுபவர்களுக்கு மட்டுமே மிதுன ராசிக்காரர்கள் இயல்புகள் புரியும். சற்று குழப்பவாதியாக இருந்தாலும் எந்தவித கடினமான வேலைகளையும் பொறுப்புடன் செய்து முடிக்கும் ஆற்றல் இருக்கும். பிறரை எளிதில் நம்ப மாட்டார்கள். எதையும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் இருக்கும். கோமாளி போலவும் ஏமாளி போலவும் நடந்து கொண்டாலும் அனைவரிடமும் நயமாக நம்பும்படி பேசி தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்வார்கள். மற்றவர்களிடம் எவ்வளவு எளிதில் நட்பு வைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு எளிதில் தொடர்பைத் துண்டிக்கவும் தயங்கமாட்டார்கள். தனக்குப் பிடித்தவர்களுக்கு துன்பம் ஏற்பட்டால் அதனால் அதிக சந்தோசப்படுவார்கள். பிறரைக்கிண்டல், கேலி, பரிகாசம் செய்வதில் கில்லாடிகள். பல்வேறு.மனப்பான்மை கொண்டவர்களின் கூட்டத்தில் கூட தன்னுடைய ரசிக்கும்படியான பேச்சாற்றலால் மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவார்கள். சமூக வாழ்வில் நல்ல ஈடுபாடு இருக்கும். கலை, இசைத் துறைகளிலும் சிறந்து விளங்குவார்கள்.

02.11.2014முதல் சனி பகவான் ரோக, ருண, ப்ராப்த, ஸ்தானம் என்னும் 6ஆவது வீட்டில் சஞ்சரித்துள்ளார். அங்கு 26.01.2017 வரையில் இருந்து பலன்களை வழங்குவார்.

கடந்த இரண்டரை வருட காலமாக பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சனி புத்திர வழியில் உற்சாகத்தையும், பூர்வீக சொத்தினால் மகிழ்ச்சியும் அளித்தன. தற்சமயம் உமது ராசிக்கு 6இல் வருகிறார். 3.6.11 இல் மந்தன் (சனி) வந்தால் மகத்தான யோகம் என சுருதிகள் இயம்புகின்றன. கடன் தீரும். நோய் அகலும், புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும், தந்தை மூலம் தனப்ராப்தி கிட்டும். சனி பகவானின் 3,7,10 ஆகிய பார்வையினால் உமது ராசிக்கு 8, 12, 3 ஆகிய வீடுகளை பார்வை செய்வார்.

சனி பகவான் உமது ராசிக்கு 8ஆவது வீட்டை பார்வை செய்வதால் புதிய முயற்சிகள் எதுவானாலும் அதில் வெற்றி கிட்டும். மனைவியின் சொல்லுக்கு மதிப்பளிப்பீர்கள். சேமிப்பு வளரும். எனினும் யாருக்கும் பிணைக் கையெழுத்துப் போட வேண்டாம். கண் சம்பந்தமான உபாதைக்கு இடமுண்டு. தந்தை வழியில் செலவுக்கு இடமுண்டு. சனி பகவான் உமது ராசிக்கு 12ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் எதிர்பாராத பிரயாணங்களினால் செலவுக்கு இடமுண்டு. உமது ராசிக்கு 8இற்கு உரிய சனி 12 ஆம் வீட்டைப் பார்ப்பது சிறப்பு. இதனால் மனை வாழ்வில் மகிழ்ச்சி பெருகும். உமது படுக்கை அறை சகல வசதிகளுடன் அமையும். கண் சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வு கிட்டும். தந்தை உடல் நலனில் மிகவும் கவனம் தேவை.

சனி பகவான் உமது ராசிக்கு 3ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் இளைய சகோதர வழியில் ஏற்றம் கிட்டும். மகன் அல்லது, மகள் வழியில் நற்செய்தி கிட்டும். சிலரது காதல் கனிந்து வரும். பெயரும், புகழும் சேரும். பூர்வீக சொத்தில் வில்லங்கம் தீரும். பிரயாணம் மூலம் ஜீவனம் புரிவோர் மிக்க அனுகூலம் அடைவர். கருவுற்ற பெண்களுக்கு சுகப்பிரசவம் ஆகும்.

13.07.2015 வரை குருபகவான் உமது ராசிக்கு 2இல் சஞ்சரிப்பதால் சரளமான பணப்புழக்கம் உண்டு. எனினும் யாருக்கும் பிணைக் கையெழுத்து போட வேண்டாம். ஆசிரியர், வங்கியாளர், புரோகிதர், ஜோதிடர் நன்னிலை எய்துவர். 14.01.2015 இல் குரு 3இல் வருவதும் அதே இடத்தை சனியும் பார்வை செய்வதால் செய்தொழிலில் எதிர்பாராத நன்மைகள் கிட்டும். பிராமணர் உதவி புரிவர். சிலர் ஆலய திருப்பணியை மேற்கொள்வர்.

சர்ப்பக் கிரகங்களான ராகு, 4ஆம் இடத்தில் இருப்பதால் அவரால் நன்மை தர இயலாது. குடும்பத்தில் குழப்பங்கள் உண்டாகும். ஆனால் 10ஆம் இடத்தில் கேது இருப்பதால் எதிலும் சற்றுக் கவனமுடன் செயற்படுவது நல்லது.

**உடல் நிலை –**

உடல் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். உங்கள் பலமும் வலிமையும் கூடும். இருந்து வந்த உடல்நலப் பிரச்சினைகள் குறையும். மருத்துவச் செலவுகள் குறைந்து மன மகிழ்ச்சியை ஏற்படுத்தும். அன்றாடச் செயல்களில் சுறுசுறுப்புடன் செயற்படக்கூடிய ஆற்றல் உண்டாகும்.

**உத்தியோகத்தர்கள் –**

வேலை விடயத்தில் எதிர்பார்க்கும் உயர்வுகள் தடையின்றி அமையும். இதுவரை இருந்து வந்த சங்கடங்கள் குறையும். வெகு நாள்களாக எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கப் பெற்று குடும்பத்தோடு மகிழ்வீர்கள். உடன் பணி புரிபவர்களின் ஒத்துழைப்புகளால் வேலைப் பளுவை குறைத்துக் கொள்ள இயலும்.

**மாணவர்கள் –**

மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். அரசு வழியில் எதிர்பாராத உதவிகள் அமையும். விளையாட்டுத்துறைகளிலும் முன்னேற்றம் உண்டாகும். தாய் தந்தையரின் முழு ஆதரவும் ஆசிரியர்களின் பரிபூரண ஒத்துழைப்பும் பெருகும். கூடுதல் மதிப்பெண்கள் கிடைக்கும்.

**அதிர்ஷ்டக் குறிப்புக்கள் –**

எண் – 9,17, 53,71, 89, 107, கிழமை – செவ்வாய், திசை – தெற்கு, நிறம் – ஆள் சிவப்பு, கல் – பவளம். தெய்வம் – முருகன்.

CW K

---

# நான் காணும் பெண்கள்

துளசி-உ



'பெண்ணொன்று பிறந்து விட்டால் பெற்றோருக்கு தொல்லை' என்ற கூற்றுக்கிணங்க ஒரு பெண்ணானவள் பிறக்கும் போதே சர்ச்சைக்குரியவளாக விமர்சிக்கப்படுகிறாள். அவள் தொட்டதெல்லாம் துலங்கும் என்பதை நிலையற்ற வாழ்வை நிலையானதாக கருதும் மானிடர் அறவே மறுத்து பேதை என்ற பட்டம் சூட்டி விடுகின்றனர். பெண்ணின் ஏழு பருவநிலைகளிலும் ஒரு பருவத்திற்கு பேதை என்ற பெயரும் வழங்கப்படுவது அதனாலோ தெரியவில்லை.

பெண் பிள்ளை சமுதாயத்தில் ஓர் அந்தஸ்துப் பெற வேண்டி கல்வி கற்க விரும்பினால் பெண் பிள்ளை ! இவள் வீண்பிள்ளை, படித்து என்ன செய்யப் போகிறாள், அடுப்பை ஊதட்டுமென பிதற்றும் பெற்றோரை இன் றும் நாம் (பின் தங்கிய சமு தாயங்களில் அதிகமாக) காண்கிறோம். பாரதி கண்ட புதுமைப் பெண் எங்கே ? அவள், செல்லம்மாவை பாரதி அடுப்பூதச் சொன்னதும் ஓடி ஒளித்து விட்டாள். விருந்தோம்புதலில் நற்குணம் கொண்டவளாக பதின்னாலில் கம்பன் கண்ட பெண் டத்தொண்டதில் இருந்து விருந்தை ஓம்புவதற் காகவே படைக்கப்பட்டாள் என்ற கோசம் பெருக்கெடுத்து இன்று கிளை நதிகளாக நாடெங்கிலும் ஓடிக்கொண் டிருக்கின்றன.

பாடசாலைக் காலங் களிலே சகபாடிகளோடு கல் வியை தொடரும் காலத் திலே உயர் புள்ளியை பெறும் பெண் ஏனையோரால் வெறுத் தொதுக்கப்பட்டு அவர்களின் பல்வேறு சூழ்ச்சிகளுக்கு ஆட் பட்டுஅபாப் பழிபெற்று பெரும் துன்ப நிலைக்கு ஆளாகிறாள். அது மட்டுமா? இன்றும் வேலைத் தலங்களில் பெண்கள் மேலதிகாரிகளாலும் சக ஊழியர்களாலும் நெருக்குதலுக்கு உட்பட்டு அனுபவிக்கும் துன்பங்களும் அவமானங்களும் சொல்லுக்கடங்கா! சமுதாயத்தின் கண்ணோட்டத்தில் பெண்ணானவள் ஒரு கேளிக்கைப் பொருளாகவும் பொழுதைப் போக்கும் தொலைக்காட்சியாகவும், பாரம் சுமக்கும் கழுதையாகவும் நோக்கப்படுகிறாள்.




# பெண்களின் நிலையை சற்றுச் சிந்திப்போம்

இந்த உலகிலேயே சீரும், சிறப்பும் வாய்ந்தவர்கள் யாரென்று கேட்டால், அனைவருமே நம்மைப் பெற்றெடுத்த தாய்மார் களைத்தான் கூறுவோம். தாய்மை என்பது பெண்களுக்கே உரிய தனிச்சிறப்பு. மனித குலத்தின் ஆரம்பக் காலகட்டத்தில் சமூகத்தை வழி நடத்தியவர்கள் பெண்கள்தான். அந்த பெண்வழி சமூகத்தில்தான் இன்றைய பெண் கடவுள்கள் தோன்றின. கருவறை முதல் கல்லறை வரை ஒவ்வொரு மனி தரின் வெற்றிக்குப் பின் புலத்திலும் பெண்ணின் பங்கு உண்டு என்பது உல கறிந்த உண்மை. சமூகத் திலே பல்வேறு வகையான வளர்ச்சிப் பணிகளில் ஈடு பட்டு ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கு வித்திடுபவர் கள் பெண்கள் என்பதற்கு எவ்வித ஐயமுமில்லை. இவ்வாறு வளர்ச்சிப் பாதையில் சமுதாயத்தை இட்டுச் செல்லும் பெண்கள் பாதுகாப்போடு நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம். ஆனால், நடைமுறையில் நாம் காண்பதோ நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது. சீரும், சிறப்போடும் நடத்தப்பட வேண்டிய பெண்கள் பல்வேறு வகையான வன்முறை களுக்கு இலக்காவது கொடுமையானது.

ஆணாதிக்க சமூக கட்டமைப்புகளில் சிக்கி, ஆண்களின் ஆதிக்க சூழ்ச்சிகளால் அடிமைகளாகவே நடத்தப் படுகிறார்கள்.

## நீங்காத நினைவுகளுடன் ஓராண்டு...

செல்வி
**தீபனா குணசிங்கம்**



தோற்றம் 03 . 03 . 1982
மறைவு 09 . 12 . 2013

பார்த்துப் பார்த்து நீருற்றி நீ வளர்த்த பூமரங்கள்
பூத்துச் சிரிக்குதம்மா!
அதில் உன் பூமுகமே தோன்றுதம்மா
பார்த்திருக்கும் பாவிகள் நாம் பரிதவித்து நிற்கின்றோம்.
பாசமெல்லாம் மறந்து விட்டு பறந்து நீ சென்றதெங்கே?
சாகிறேன் சாகிறேனென்று சகஜமாய்க் கூறிவந்தாய்
அன்றும் நீ கூறியதை என்றும் போல் நினைத்து விட்டோம்
இரக்கமற்ற அரக்கிகளின் கைப்பிடியில் சிக்கி விட்டாய்
அரை நொடியில் முடிந்ததம்மா அவகாசம் கிடைக்கவில்லை
எத்தனை துணையிருந்தும் எங்கள் மனம் உன்னைத் தேடுதம்மா
உன் உயிரைப் பிரித்தெடுத்து எங்களை ஏன் தவிக்கவிடடாய்
நீ போன பாதையினைப் படம் வரைந்து அனுப்பிவிடு
வழியறிந்து வந்து நாங்கள் உன் உயிரில் கலந்திடுவோம்.

உடுப்பிட்டி தெற்கு.
உடுப்பிட்டி.
**குடும்பத்தினர்.**
(41582)(4.6.3)

---

## இதயம் மறவா
## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **இராசரத்தினம் பாக்கியம்**
*திதி: பூர்வபட்ச அட்டமி (29.11.2014 சனிக்கிழமை)*



வருடங்கள் ஒன்பது சென்றது அம்மா!- ஆனாலும்
ஆறாது எம் துயரம் என்றென்றும்
அன்புடன் எமையணைத்து அறிவுரைகள் பல கூறி
பண்புடன் எம்மை வளர்த்து பாரினில் உயர வைத்தீர்!
ஆயிரமாயிரம் உறவுகள் இருந்தாலும் என்னம்மா
உங்கள் அன்பைப் போல் வருமா எமக்கு!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!


என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மலர்வு 07.08.1932
உதிர்வு 08.12.2005

"மலர்வாசம்", மகாஜனக்கல்லூரி வீதி,
தெல்லிப்பழை. (41583) (4.6.3)

---

## 2 ஆம் ஆண்டு நினைவில்



தோற்றம் 10 . 06 . 1929
மறைவு 20 . 11 . 2012

### அமரர் செல்லையா இராசதுரை

*திதி: 29.11.2014*

அப்பா!
எமைவிட்டு நீர் சென்று ஈராண்டுகள்தான் சென்றதுவோ
எண்ணியெண்ணிப் பார்க்கின்றோம் இருயுகம்போல் கனக்கிறதே - உமை
எண்ணிய நேரமெல்லாம் இருவிழி நீர் சொரிகிறதே
நெஞ்சமெல்லாம் வலிக்கிறதே அப்பா.... என்றழைத்து
ஆசையாய் முத்தமிட ஏங்குகிறோம் பிள்ளைகள் நாம்
என்செய்வோம் விதியதனை பிறப்பொன்று உண்டென்றால்
இறப்பதுவும் நியதியென்று ஆற்றுகிறோம் எம்மனதை
கார்த்திகை இருபதென்றால் கரைகிறதே எம்மனது
இரண்டென்ன இருநூறு ஆண்டுகள் சென்றாலும்
வாழையடி வாழையாய் எம் வம்சத்தில் உத்தமர் உம் புகழிருக்கும்.

கைதடி மேற்கு,
கைதடி. (41593)(4.5.3)
என்றும் நினைவில்
**மனைவி, பிள்ளைகள்.**

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கலைப்பிரிவுப் பகுதித்தலைவர்
**நாக.புவனேந்திரன்** ஆசிரியரின் அன்பு மாமி
திருமதி **பாலாம்பிகை கன்னலிங்கம்**
27.11.2014 வியாழக்கிழமை காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்,**
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
(41600)(4.6.3)

---

## ஓராண்டு நினைவலைகள்

மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர்
ஆதீனகர்த்தாவும், மனேச்சரும், பிரதமகுருவுமாகிய
**அமரர் சிவஸ்ரீ சுப்பிரமணிஐயா சிவசண்முகானந்தக்குருக்கள்**



எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே
அமைதியான புன்சிரிப்புடன்
ஆலயவாசலில் இருக்கும்
எங்கள் குருக்கள் ஐயாவே
ஆண்டுகள் எத்தனை போனாலும்
ஆலயவாசல் வந்ததும்
உங்கள் நினைவுகள் மாறாது

அபிஷேக ஆராதனையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**மனைவி கமலாதேவியும்,**
**திருப்பணிச் சபையினரும்**
**விநாயகர் அடியவர்களும்**

கொல்லங்கலட்டி,
பிள்ளையார்கோயில் தெல்லிப்பழை.

மண்ணில் 01.02.1951
விண்ணில் 10.12.2013
திதி: கார்த்திகைமாத பூர்வபட்ச அட்டமி (29.11.2014)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



"நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"
2தீமோத்தேயு 4:7

அமரர்
**சுப்பையா தேவவசீகரன்**

தோற்றம் 10.03.1957
மறைவு 28.10.2014

கடந்த 28.10.2014 கர்த்தருக்குள் நித்திரையடைந்த சுப்பையா தேவவசீகரன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மலர்வளையம் வைத்தோருக்கும், நல்லடக்க வழிபாட்டை நடத்தியும் கலந்தும் கொண்ட குருமார்களுக்கும் யாழ்ப்பாண கல்லூரியினருக்கும் இறுதி வரை மருத்துவசிகிச்சையளித்த Dr.P.றொபின்சன் அவர்களுக்கும் மற்றும் எல்லா விதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வாழ்வுக்கு கர்த்தருக்கு நன்றி நவிலும் வழிபாடு இன்று (29.11.2014) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

லைமன் ஒழுங்கை,
லோட்டன் வீதி,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய். (C/17912)(5.3)

**M.P.தேவவசீகரன்**
**(புனிதம் - மனைவி)**

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 18 - 04 - 1934
மறைவு 21 - 10 - 2014

கடந்த 21.10.2014 செவ்வாய்க்கிழமை அகாலமரணம் எய்திய குடும்பத்தலைவி
திருமதி **இராசேஸ்வரி இராசநாயகம்**
(முன்னாள் ஸ்கந்தவரோதயா கல்லூரி
கணித ஆசிரிய மேதை இராசநாயகத்தின் மனைவி)

அன்னாரது மரணச் சடங்கிற்கு வருகை தந்து ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அளித்தோருக்கும், அந்நிகழ்வில் கலந்து கொண்டு பலவகை உதவிகள் புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரது வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை(30.11.2014) பன்னாலையில் க.திருநாவுக்கரசு அவர்களின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்பாக அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு
வருகை தருமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பழை.
**திரு.திருமதி திருநாவுக்கரசு**
(M/18033)(5.6.3)

---

# செய்திகள்

## ஆண்டு நிறைவு விழா நிகழ்வு குறித்த கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.29
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளும் வகையிலான ஆரம்பக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் அக்கறையுடையவர்களை இதில் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குமாறு கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

## மணி விழா

யாழ்ப்பாணம், நவ.29
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் ஓய்வுநிலை பிரதி அதிபர் சிவபுண்ணியம் சிவலிங்கத்தின் மணிவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணமும், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் த.முத்துக்குமாரசாமியும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் இ.இராசசேகரமும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸும், புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரனும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும்கலந்துகொள்வார்கள். (ஹரி)

## தொழில் முயற்சியாளருக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ .29
இலங்கை வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'சிறிய நடுத்தர தொழில் முயற்சியின் தூர நோக்கினை முன்னோக்கி நகர்த்துதல்' என்ற தொனிப் பொருளிலான வருடாந்த கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு யாழ் கிறீன்கிராஸ் ஹோட்டலில் இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் டபிள்யு.பி.ரஸல் பொன்சேகாவும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் எச்.எஸ். ஜெயவர்த்தன, இளைப்பாறிய பேராசிரியர் எம். சின்னத்தம்பி ஆகியோரும் கலந்து கொள்வர். (க)

## இலவச மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், நவ 29
நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் தொற்றா நோய்கள் தொடர்பான இலவச மருத்துவ பரிசோதனையும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும்.
மருத்துவ நிபுணர்களின் உதவியுடன் நீரிழிவு, இரத்த அழுத்தம் சம்பந்தமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் இலவசமாக வழங்கப்படும் என்று லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது. (வ)

# செய்திகள்

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஆரம்பபிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் தெய்வேந்திரம் வினோதன் அவர்களின் அன்பு மாமனார்

**கந்தசாமி நடராசா**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேசசெயலகம்,
தென்மராட்சி.

பிரதேச செயலகஉத்தியோகத்தர்கள்
நலன்புரி சங்கம்.

## துயர் பகிர்கின்றோம்



அமரர் சிவகடாட்சம்பிள்ளை சிவகுமாரன்

அவர்கள் 28.11.2014ஆம் திகதி அன்று இறைபதம் எய்தியமையிட்டு துயருறும் குடும்பத்துடன் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உத்தியோகத்தர்களும் பாதுகாப்பு ஊழியர்களும்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி செல்லம்மா தளையசிங்கம்**

தோற்றம் 30.06.1936 மறைவு 02.12.2011

திதி: 29.11.2014



அன்பு வழி நின்று அறம் பேணி
அணையாத விளக்காக ஒளி வீசி
இன்பம் எய்திட இனிது உழைத்து
எம் உயர்வுக்காய்
அல்லும் பகலும் வாழ்ந்த
என் இனிய தெய்வமே!
ஆண்டுகள் மூன்றென்ன மூவாயிரம் சென்றாலும்
எம் நெஞ்சை விட்டு உம் நினைவு நீங்குமா?

அண்ணா சனசமூக நிலையத்தடி.
உடுவில் கிழக்கு, இணுவில்

உங்கள் நினைவில் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[54469][4.3.6]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**நவராஜசிங்கம் கமலானந்தன்**

தோற்றம் 02.08.1947

மறைவு 30.10.2014

கடந்த 30.10.2014 இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச்செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு ஆறுதல் கூறி உறுதுணையாக இருந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.04, ஈஸ்வரிவாசா
மானிப்பாய் இணுவில் வீதி,
மானிப்பாய். [54459][4.5.3.6]

ஸ்ரீ.நவராஜசிங்கம்
(பெறாமகன்)

# சுன்னாகம் எண்ணெய் கசிவு: புலிகள் மீதே விழுந்தது பழி

யாழ்ப்பாணம், நவ. 29

சுன்னாகத்தில் நிலத்தடி நீருடன் கழிவு ஒயில் கலந்தமைக்கு விடுதலைப் புலிகளின் மீது பழிபோடப்பட்டுள்ளது.

சுன்னாகத்தில் இருந்த மின்உற்பத்தி நிலைய எண்ணெய் தாங்கிகளை 2007 – 2009 காலப்பகுதியில் புலிகள் குண்டுவீசித் தாக்கினார்கள் என்றும் அதனால் வெளியேறிய எண்ணெய்யே தற்போது நீருடன் கலந்துள்ளது என்றும் நீதிமன்றில் தெரிவித்தார் சட்டத்தரணி. அந்த ஒயிலே நீருடன் கலந்துள்ளது என்றும் நிலத்தில் ஒயில் குளம் ஒன்று இருந்ததை கூகுள்படம் காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

சுன்னாகத்தில் மின் உற்பத்தி நிலையத்தின் எண்ணெய் எரிவு ஊடாகச் இயக்கப்படும் மின் பிறப்பாக்கிகளின் இயக்கத்தினை உடனடியாகத் தடைசெய்யுமாறுகோரி மல்லாகம் நீதிமன்றத்தில் 11 பேர் தாக்கல் செய்த வழக்கு வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த தவணை அது தொடர்பான வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்குத் தொடர்பில் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு நீதிமன்று எதிர்மனுதாரரான மின்உற்பத்தி நிறுவனத்தினருக்கு உத்தரவிட்டிருந்தது. நொதேர்ன் நிறுவனம் மற்றும் உதுறு ஜனனி ஆகிய நிறுவனங்களுக்கே அவ்வாறு உத்தரவிடப்பட்டிருந்தது.


நொதேர்ன் உற்பத்தி நிறுவனம் சார்பாக சட்டத்தரணி திருமதி சிவபாதத்தின் அனுசரணையுடன் கொழும்பிலிருந்து அழைத்து வரப்பட்ட சட்டத்தரணி ஜெந்தபெர்னாண்டோ ஆட்சேபனையை நீதிமன்றில் அணைத்தார்.

நொதேர்ன் நிறுவனம் இங்கு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், 2007 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்த ஒயில் தாங்கி மீதுபுலிகள் குண்டுவீசினர் என்றும் தாங்கி உடைந்து அதிலிருந்த ஒயில் நிலத்தில் குளம் போல் தேங்கியிருந்தது என்றும் அவர் கூறினார். அந்த ஒயிலே தற்போது நிலத்தடி நீருடன் கலந்து கிணறுகளில் கலந்துள்ளது எனவும் அவர் கூறினார். இந்தப் பிரச்சினைக்கும் அதன்பின்னர் அங்குவந்து தற்போதும்செயற்பட்டுவரும் நொதேர்ன் நிறுவனத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் குறிப்பிட்டார். அதனால் தாம் நிறுவனத்தை மூட வேண்டிய தேவை இல்லை என்ற வாதத்தை அவர் முன்வைத்தார். தமது நிறுவனம் சுற்றுச் சூழல் அதிகார சபையின் அனைத்து நியமனங்களையும் பின்பற்றியே செயற்படுவதாகவும் தெரிவித்தார். அது தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற ஒருவரை நியமித்து ஆய்வு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் கூறினார்.

தவிர உதுரு ஜனனி நிறுவனம் சார்பாகவும், இலங்கை மின்சார சபை சார்பாகவும் முன்னிலையான சட்டத்தரணி திருமதி கஜப்பிரியா, அந்த நிறுவனத்தினர் அடுத்த தவணையின் போது ஆட்சேபனை அறிக்கையைத் தாக்கல் செய்வார்கள் என்று கூறினார். அதனையடுத்து வழக்கு எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. வழக்காளிகள் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், சட்டத்தரணிகளான ஜெ.ஜெயரூபன், பா.பார்த்தீபன், க.சுகாஸ், வி.மணிவண்ணன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

(உ-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03.07.1946

மறைவு 10.12.2013


அமரர்
**ஆண்டி சுந்தரம்**
(ஆட்டோ சாரதி நெல்லியடி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வமாகிவிட்ட எங்கள் குடும்பத்தலைவரின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி இன்று (29.11.2014) சனிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் சமயக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து நமக்கு ஆறுதல் அளிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
முதலியார் கோயிலடி, கரவெட்டிமேற்கு, கரவெட்டி.
தொ.பே. 077 498 8964

(52026)(4.5.6.3)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 29.12.1944 மறைவு 09.11.2014

**அமரர் இரத்தினம் சிவலிங்கம்**
(அக்குறஸ)

கடந்த 09.11.2014 சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (29.11.2014) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## சுன்னாகம்

நிலத்தடி நீருடன் கழிவு எண்ணெய் கலந்துள்ளதனால் ஏற்பட்ட

சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் தலைமையில் சுன்னாகம் பிரதேச சபையில் நேற்றுக் கலந்துரையாடப்பட்டது. பாதிக்கப்பட்ட பொதுமக்களும் கலந்துகொண்டனர். வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன், த.சித்தார்த்தன் மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், சுகாதார வைத்திய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

கழிவு ஒயில் கலந்துவிட்ட நீரைத் தாம் தொடர்ந்தும் பயன்படுத்த முடியுமா? இல்லையா ? என்பது தொடர்பில் தமக்கு தீர்க்கமான முடிவு ஒன்று அறிவிக்கப்படவேண்டும் என்று கலந்துகொண்ட மக்கள் வலியுறுத்தினர். அத்துடன் பிரதேச சபையால் வழங்கப்படும் நீர் விநியோகம் போதுமானதாக இல்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். பிரதேச சபைத் தலைவர் அதன்ன ஏற்றுக்கொண்டார். விநியோகத்தை அதிகரிக்க மாகாணசபை உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். தேவையான உதவிகளை விவசாய அமைச்சு ஊடாக வழங்க அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இணங்கினார்.

எனினும் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான நிரந்தரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று பிரதேச சபைத் தவிசாளர் வலியுறுத்தினார். நீதிமன்றத்தின் பணிப்புரைக்கு அமைவாக மின்உற்பத்தி நிலையங்களை பரிசீலிப்பதற்கு ஏற்ற, நிபுணத்துவ அறிவு கொண்ட ஒருவரை வடக்கு மாகாண சபை நியமித்து இந்த விடயங்கள் தொடர்பில் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார் பிரகாஷ்.அவரது கோரிக்கையை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார். விரைவில் அதற்கான வேலை கள் செய்யப்படும் என்றும் உறுதியளித்தார்.

(உ-5)

செய்தி

# தூக்கு பெற்ற 3 மீனவர்களின் குடும்பங்களும் அலைக்கழிப்பு

## நடவடிக்கை இன்றி அமைச்சர் டக்ளஸ் காலங்கடத்துகிறார் என்று குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்.நவ.29

போதைப் பொருள் கடத்திய குற்றத்துக்காக சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட மூன்று மீனவர்களை ஜனாதிபதியுடன் பேசி விடுவித்துத் தருவேன் எனக் கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்த மீனவர்களின் குடும்பங்களையும் ஏனைய மீனவர்களையும் தீர்வு ஏதும் இன்றி அலைக் கழித்து வருகிறார் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்று வா, நாளை வா எனக்கூறி கிட்டத்தட்ட நான்கு தரம் மீனவர்களின் குடும்பங்களையும் உறவினர்களையும் அலைக் கழித்த அமைச்சர் டக்ளஸ், இப்போது 5ஆவது தடவையாக எதிர்வரும் 4ஆம் திகதி தனது அலுவலகத்துக்கு மீண்டும் வருமாறு கூறியுள்ளார் என்று தெரிவிக்கின்றனர் மீனவர்கள்.

2011 ஆம் ஆண்டில் போதைப் பொருள் கடத்திய குற்றத்துக்காக 8 மீனவர்களுக்கு உயர் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. இவர்களில் 5 பேர் இந்தியர்கள். அண்மையில் அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆனால் மீதமுள்ள 3 இலங்கை மீனவர்களின் தண்டனை குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூவரையும் கூட பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்க வேண்டும் என்று அவர்களது குடும்பத்தினரும் உறவினர்களும் வலியுறுத்துகின்றனர். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி மீனவர்களின் குடும்பத்தினரும் ஏனைய மீனவர்களும் கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியதுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மனுக்களையும் கையளித்திருந்தனர்.

மீனவர் சங்கத்தின் ஒரு பிரதிநிதியை மட்டுமே தம்மை வந்து சந்திக்குமாறு அவர்களை வழிப்படுத்தி வருகின்றார் என்று மீனவர்கள் கூறினர். தன்னைத்தவிர வேறு எவரிடமும் செல்லவேண்டாம் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்கூட முறையிடச் செல்லவேண்டாம் என்றும் அவர் தடுத்து வருகிறார் எனவும்அவர்கள் தெரிவித்தனர்.

ப 1 விரிவு

மீனவர்களின் விடுதலை தொடர்பாக அமைச்சரின் அலுவலகத்துக்கு, தண்டனைபெற்ற மீனவர்களின் உறவினர்கள் ஏற்கனவே 4 தடவைகள் அழைக்கப்பட்டபோதும் அவர்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. எனினும் 5ஆவது தடவையாக மீண்டும் டிசெம்பர் 4ஆம் திகதி வருமாறு அமைச்சரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் குறைப்படுகின்றனர்.

"அமைச்சரிடம் முதலில் சென்றபோது, ஆயிரம் பேருடைய கையெழுத்துடன் மீண்டும் தனக்கு ஒரு மனுவைத் தந்தால் ஜனாதிபதியுடன் தான் நேரடியாகப் பேசுவார் என்று கூறினார். அதனை நம்பி மீனவர்களின்வீடுவீடாகச்சென்றுகையெழுத்துக்கள் பெற்றனர். அந்த மனுவும் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. யாழ்.மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தின் முயற்சியால் 2 தடவைகள் அமைச்சரின் அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டங்கள் நடத்தப்பட்டதுடன் மனுக்களும் கொடுக்கப்பட்டன. எனினும் அமைச்சர் இன்னமும் உருப்படியான பதில் ஏதும் வழங்கவில்லை" என்று மீனவர்கள் தெரிவித்தனர்.


இதேவேளை, தமது கணவர்களின் சாவுத் தண்டனையை நீக்குமாறு கோரிக்கை விடுப்பதற்காக புதன்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சென்ற அந்த மீனவர்களது மனைவிமாரை, இடையில் தடுத்த மீனவர் சங்க பிரதிநிதி ஒருவர் "அமைச்சரிடம் முறையிட்டபின்னர் வேறு இடங்களுக்கு எல்லாம் ஏன் செல்கிறீர்கள். அமைச்சர் அலுவலகத்தில் இருக்கிறார். போய்ப் பாருங்கள்" என்று கூறித் திசை திருப்பிவிட்டார் என்றும் கூறப்படுகின்றது. அமைச்சரின் அலுவலகத்துக்குச் சென்றவர்கள் ஒரு மணிமுதல் 4 மணிவரை காக்க வைக்கப்பட்டபோதும் அமைச்சர் அவர்களைச் சந்திக்கவில்லை. டிசெம்பர் 4ஆம் திகதி மீண்டும் வருமாறு அங்கிருந்தவர்கள் அவர்களிடம் கூறியிருக்கின்றனர்.

இதேவேளை, மீனவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி புனித பாப்பரசருக்குக் கையளிப்பதற்கான மனுவொன்றையும் குடும்பத்தினர் யாழ்.ஆயர் இல்லத்திலும் கையளித்துள்ளனர்.

(ஐ - 14)

# மரண அறிவித்தல்

## கதிர்காமு இராமநாதி



வட்டுக்கோட்டை சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு இராமநாதி கடந்த 24.11.2014 திங்கட்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - வைரமுத்து தம்பதியரின் அன்பு மகனும், இராசையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புச் சகோதரனும், தவமணியின் அன்புக் கணவரும், மனோன்மணி (சுவிஸ்), இராகினி (டென்மார்க்), நந்தினி (டென்மார்க்), சியாமினி (லண்டன்), சுஜந்தினி (சுவிஸ்), தவராணி (பிரான்ஸ்), தவறஞ்சினி (லண்டன்), தவச்செல்வி (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஈஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (டென்மார்க்), விஜயகுமார் (டென்மார்க்), சுதேசபாஸ்கரன் (லண்டன்), சேகர் (சுவிஸ்), சிவசுதன் (பிரான்ஸ்), யூட்கிளெனி (லண்டன்), சிவதரன் (சமுர்த்தி உத்தியோத்தர், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமனும், மகாதேவன், அம்பலவாணர், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் நவமணி, புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சுஜந்தன், ஜோன் அத்தான், யஸ்மின் (சுவிஸ்), ஆகாஷ், அஸ்மிதா, ஆதிசியா (டென்மார்க்), சாருண்யா, கஜானன், நீருஜா (டென்மார்க்), தபிசன், திவ்வியா, சஜீவன், நிருஜா (லண்டன்), சகானா, ஜெயலக்சன், ஜெசினா (சுவிஸ்), அஸ்வின், அக்சயன், அனுஸ்கா (பிரான்ஸ்), லக்சனா, கஜித் (லண்டன்), லக்சிக்கா,தர்சிக்கா, தரணிக்கா (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருஞானசம்பந்தர் வீதி,
வட்டுதென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

(சி.18032) (45.6.3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 28.02.1935 | 24.11.2014 |

# செய்திகள்


## டிப்பர் சாரதிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய டிப்பர் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு புதன்கிழமை சாவகச்சேரி நீதி மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 10ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை– மதுபோதையில் வாகன வரி மற்றும் காப்புறுதிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய நபருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ–9)

## மரண அறிவித்தல்கள்

### இல்லங்குடி வண்ணமுத்து ஆச்சாரி



இந்தியா தூத்துக்குடியைப் பிறப்பிடமாகவும், 78/6, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இல்லங்குடி வண்ணமுத்து ஆச்சாரி 26.11.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(41574) (10.6.3) தகவல்: குணா 077 6797 520

### சுந்தரம் தேவராசா



சாரதா வீதி, சங்கதானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கெருடாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் தேவராசா நேற்று (28.11.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்-அம்பிகை அம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற அருணாசலம்-கைராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், பஞ்சவர்ணன், பாலகிருஷ்ணன் (பசுபதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற மனோகரன், பராசக்தி, இலங்காதேவி, தியாகராசா, கமலாம்பிகை, சிறிதரன், காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும், ஜெகதீசன், சந்குணம் ஆகியோரின் மைத்துனரும், தட்சணாவின் அன்பு மாமனும், பிரணவனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2014) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கெருடாவில், சாவகச்சேரி. (C/18045) (10.6) குடும்பத்தினர்.



### சிவகடாட்சம்பிள்ளை சிவகுமாரன்

(கண்ணன்-சாரதி, மாகாண பொது சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், லவ்லேன் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகடாட்சம்பிள்ளை சிவகுமாரன் நேற்று (28.11.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகடாட்சம்பிள்ளை-தேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், மலர்விழியின் அன்புக் கணவரும், அக்ஷனா, ஆர்த்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சத்தியகுமாரன் மற்றும் சிவாணி (சுவிஸ்), சியாமினி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கலாமோகன் (சுவிஸ்), ஜெயகௌரி (கொழும்பு), ஸ்ரீ (கனடா), மணிவண்ணன் (சுவிஸ்), சிவகுமார் (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்த மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோகுலபவனம், லவ்லேன், உடுவில். (54470) (10.6) தகவல்: குடும்பத்தினர். 021 22 55 724

# வல்வை நகரசபை மீதான இடைக்கால தடை நீடிப்பு

## வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், நவ.29

வல்வெட்டித்துறை நகரசபையை இடைநிறுத்தி வைத்திருக்கும் உத்தரவை டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரைக்கும் நீடித்திருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

இதுதொடர்பான விசேட வர்த்தமான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. உட்கட்சிப் பூசல் காரணமாக சபை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதன் காரணமாக, கடந்த ஜூலை மாதம் 28ஆம் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு சபை நடவடிக்கையை இடைநிறுத்தி வைக்க முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார். ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதியுடன் மூன்று மாதங்கள் முடிவடைந்தமையினால், அந்தத் தடைஉத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கட்டுப்பாட்டில் வல்வெட்டித்துறை நகரசபை உள்ளது. இதன் தலைவராக அனந்தராஜ் உள் ளார். அவரது கட்சியைச் சேர்ந்தவர்களே கூட அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை. கடந்த ஜூலை மாதக் கூட்டத்தில் சபை வழங்க வேண்டிய கொடுப் பனவுகளை அனுமதிப்பதற்கு சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் மறுத்துவிட்டனர். இதனால்சபைமுடங்கும்நிலைமை ஏற்பட்டது. இதனையடுத்து உடனடியாகத் தலையிட்ட வடக்கு மாகாண முதலமைச்சரும், உள்ளூராட்சி அமைச்சருமான க.வி. விக்னேஸ்வரன், சபையை இடைநிறுத்தி வைக்க உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன் சபையில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மோசடிகள் குறித்து விசாரணை நடத்த ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரையும் நியமித்திருந்தார். அந்த விசாரணை முடிந்து ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி அது தொடர்பான அறிக்கை வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

விசாரணை அறிக்கையின் அடிப்படையில் முதலமைச்சர், குறித்த சபையைக் கலைக்கவோ, தலைவரை நீக்கவோ, உறுப்பினர்களில் ஒரு தொகுதியினரை நீக்கவோ முடியும். ஆனால் கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி வரையில் எந்த நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் சபையின் நடவடிக்கைகளை மேலும் மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்கும் அறிவித்தலை நவம்பர் 19ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரித்துள்ளார் வட மாகாண முதலமைச் சர். விசாரணை உத்தியோகத்தரின் அறிக்கையை பரிசீலிப்ப தற்கு ஏதுவாக, சபையை டிசெம்பர் 31ஆம் திகதி வரை இடை நிறுத்துவதாக அந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ–5)

# இரு ஆலயங்களில் திருடர் கைவரிசை

தென்மராட்சி, நவ.29

சாவகச்சேரி, சரசாலைப் பகுதியில் உள்ள இரு ஆலயங் களில் நேற்றுமுன்தினம் கடந்த செவ்வாய்க்கிழமை திருட்டு இடம் பெற்றுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய உண்டியலை உடைத்து பணத்தைத் திருடிய நபர் ஆலய அர்த்த மண்டபத்தில் அம்பாளுக்கு அணியப் பட்டிருந்த நகைகளையும் அபகரித்துள்ளார். அத்துடன் மூலஸ் தான கதவின் பூட்டை உடைக்க முயற்சித்த போதிலும் முயற்சி கை கூடாததால் அலவாங்கை அந்த இடத்தி லேயே விட்டு சென் றுள்ளார்.

இதேவேளை ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த இரகசிய கமராவில் திருட்டுத் தொடர் பான சகல பதிவுகளும் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது. மேலும் சரசாலை வடக்கில் உள்ள முத்துமாரி அம்பாள் ஆலய உண்டியலை உடைத்து அங்கிருந்த பணத்தை அபகரித்ததுடன் மூலஸ்தான விக்கிரகத்தை அப்புறப் படுத்தி தங்கத் தகட்டை தேடியுள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பையாபிள்ளை துரைராஜா (சட்டநாதர்)

(நல்லூர் நல்லைநாத சுவாமி சட்டநாத கோயில் பரம்பரை வழி முகாமைத்துவ தர்மகர்த்தா, நல்லூர் சீனிவாசகம்பிள்ளை தம்பையாபிள்ளை சமாதி தர்மசாதன பரம்பரை வழி முகாமைத்துவ தர்மகர்த்தா, இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற உப முகாமையாளர்)

யாழ்ப்பாணம், தலையாழி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், 124 W.A. Silva Mawatta Colombo - 06ஐ வதிவிடமாகவும் கொண்ட துரைராஜா அவர்கள் 27.11.2014 வியாழக்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.சின்னத்தம்பையாபிள்ளை - ராஜமுத்து தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிறிபதியின் அன்புக் கணவரும், சக்திதரன் (முன்னாள் Standard Charted Bank), சுகந்தி (லண்டன்), யதூசன் (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி சிறானி, ஹிறிரங்கன், திருமதி பிரியதர்சினி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற Proctor துரைசிங்கம், திருமதி செல்வரத்தினம் பரஞ்சோதி, காலஞ்சென்ற தங்கரத்தினம் இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவேந்தன், நிவேதிகா, ஆரணி, பிருதிவி, மிதுனா ஆகியோரின் அன்புப் பாட்டனும், காலஞ்சென்ற லீலா, துரைசிங்கம், பரமபாதம், காலஞ்சென்ற பரஞ்சோதி Mastar, காலஞ்சென்ற இராமசந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

TP:2 365 729 தகவல்: குடும்பத்தினர்.

# மாணவர்கள் இல்லை சீருடைக்கு விண்ணப்பம்

தென்மராட்சி, நவ.29

மாணவர்கள் இல்லாத பாடசாலைக்கு இலவசச் சீருடைகளும் பாதணிகளும் வழங்குமாறு அதிபர் விண்ணப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தென்மராட்சி கல்விவலயத்தில் இடம் பெற்றது.

வலயத்தில் உள்ள சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தில் கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் மாண வர்கள் இல் லாத நிலை யில் 3 அதிபரும் 2 ஆசிரி யர்களும் கடமையாற்றி வருகின்றனர்.

இந்தநிலையில் மாணவர்களுக்கு அடுத்த வருடத் துக்கான இலவச சீருடைத் துணிகள் வலயத்தால் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட வேளையில் குறித்த பாடசாலையின் அதிபர் சீருடைத் துணிகள் பெறவும் பாடசாலையில் கற்கும் வறிய மாணவர்களுக்கு வழங்க இலவச பாதணிகளும் வழங்குமாறு விண்ணப்பத்துடன் கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு சென்ற வேளையில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (வ–9)

# 35,541 பேர் வடக்கில் மழையால் கடுமையாகப் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கில் கடந்த மூன்று தினங்களாக தொடர்ச்சியாக காற்றுடன் கூடிய மழை நீடித்து வருகின்றது. இதனால் 9 ஆயிரத்து 210 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 541 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 63 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன், 88% வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இந்த இடரினால் பாதிக்கப்பட்ட மக்கள், 25 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 832 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 103 இவ்வாறு நலன்புரி நிலையங்களில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பருவப்பெயர்ச்சி காலநிலை காரணமாக வடக்கில் தொடர்ச்சியாகக் காற்றுடன் கூடிய மழையுடனான காலநிலை நீடித்து வருகின்றது.

கடந்த மூன்று நாள்களாக வடபகுதியில் தொடர்ந்தும் மழை பொழிந்து வருகின்றது. இதனால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர்.

வடக்கின் பல்வேறு தாழ்ந்த பகுதிகளிலும் வெள்ளம் நிறைந்துள்ளது. இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் சமைக்க முடியாத அளவுக்கு அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் நேற்று மாலை 8 மணி வரையிலான இடர் முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையின் படி, 6 ஆயிரத்து 757 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 450 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்திலேயே கடும் காற்றுக் காரணமாக நெடுந்தீவுப் பிரதேசம் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு 941 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 653 பேர் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதுடன் 40 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் மின்னல் தாக்கம் என்பவற்றாலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. 375 வீடுகள் பகுதியளவிலும், முழுமையாக 46 வீடுகளும் சேதமடைந்துள்ளன. யாழ். மாவட்டத்தில் இடரினால் பாதிக்கப்பட்ட 290 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 129 பேர், 9 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் மாத்திரம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 174 குடும்பங்களைச் சேர்ந்த 549 பேர் மாத்திரம் இதுவரையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு வேறு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

ப 1 விரிவு

வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தினால், 813 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 855 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 76 குடும்பங்களைச் சேர்ந்த 277 பேர் 3 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 17 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன், 512 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளது. மன்னார் மாவட்டத்தில், வெள்ளத் தினாலேயே கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆயிரத்து 466 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயி ரத்து 697 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருமே 13 நலன்புரி நிலையங்க ளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 13 வீடுகள் முழுமையாகச் சேத மடைந்துள்ளன. நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் அனைவருக்கும் உலர் உணவுகள் வழங்கப்பட்டுள்ளன(த–5–106–109)





## சூடு நடத்தப் பயன்படுத்திய வாகனம் கண்டறியப்பட்டது

### ஐ.ம.சு.கூ. உறுப்பினர் ஒருவருடையது பொலிஸார் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், நவ. 29

களுத்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை, ஐ.தே.க ஆதரவாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் பயணித்த வாகனம் இனங்காணப்பட்டுள்ளது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவரது பெயரிலேயே குறித்த வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை எதிரணிக்குத் தாவியிருந்தார். அத்துடன் பொது எதிரணி வேட்பாளராகவும் அவர் அறிவிக்கப்பட்டிருந்தார். அதனை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் கொண்டாடினர்.

களுத்துறை மக்கொன பகுதியில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் மீது இனந்தெரியாதோரால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் காயமடைந்த அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இன்னமும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையில் இந்தச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அதில் துப்பாக்கிதாரி பயணித்த வாகனத்தை இனங்கண்டு கைப்பற்றியுள்ளனர். ஹைபிரிட் ரக வாகனம் ஒன்றே தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டது கண்டறியப்பட்டது.

குறித்த வாகனம், களுத்துறைப் பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரது பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் கண்டறிந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ந–5)

## சரத் என்.சில்வா யார் பக்கம் ?

### சந்தேகம் கிளப்பும் யாழ். பயணம்

யாழ்ப்பாணம், நவ. 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் மாத்திரம் தங்குவதற்கு அனுமதிக்கப்படும், காங்கேசன்துறையிலுள்ள கடற்படை இல்லத்தில், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அவரது நண்பருடன் தங்கியிருந்தமை சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், போதைப்பொருள் எதிர்ப்பு முகவரகத்தின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன் டி சில்வாவுடன், வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள காங்கேசன்துறை கடற்படை இல்லத்தில், சரத் என்.சில்வா நேற்று முன்தினம் இரவு தங்கியுள்ளார்.

பேராசிரியர் அர்ஜுன் டி சில்வாவின் பெயரிலேயே கடற்படை இல்லம் பதிவு செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. இருப்பினும் குஷ்த்த கடற்படை இல்லத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஆளுங்கட்சியின் உயர் அரசியல் தலைவர்கள் மாத்திரமே தங்க வைக்கப்படுவது வழமை. ஆனாலும் சரத் என். சில்வா தங்கியுள்ளமை, தற்போதைய சூழலில் பரபரப்பை தோற்றுவித்துள்ளது. (த–5)

## வீதித் தடையுடன் மோதிய ஓட்டோ



மன்னார், நவ. 29

மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள வீதித் தடையில் மோதிய ஓட்டோ பலத்த சேதத்துக்கு உள்ளாகியது. இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

வேகமாக வந்த ஓட்டோ மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தினுள் நுழைய முயன்ற போதே நுழைவாயிலில் அமைந்துள்ள வீதித் தடையில் மோதி விபத்துக்குள்ளானது.

ஓட்டோவைச் செலுத்தி வந்த நபர் வீதித் தடையை அவதானிக்காமல் வேகமாக உள் நுழைய முயன்றபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது ஓட்டோ பலத்த சேதத்துக்கு உள்ளாகியதோடு வீதித் தடையும் சேதமடைந்தது. ஓட்டோ எந்தவித காயமும் இன்றி உயிர் தப்பினார். மன்னார் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டுள் ளனர். (த–56)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தடை விதிக்கப்படுமா?

### மஹிந்தவை பதவி நீக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு

யாழ்ப்பாணம், நவ. 29

பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தாமல் 18 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனூடாக ஜனாதிபதி மஹிந்த அரசமைப்பை மீறியுள்ளார். எனவே அவர் மூன்றாவது தடவை ஜனாதிபதியாக போட்டியிட முடியாது. ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் தகுதியையும் அவர் இழந்துள்ளார். எனவே அவரைப் பதவி நீக்கம் செய்து அறிவிக்கவேண்டும் – என்று மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு நேற்று முன்தினம் வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேசிய சிங்கள பௌத்த மக்கள் கட்சியின் தலைவரான ரத்ன பண்டாரவால், இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் அரசமைப்பை வேண்டுமென்று மீறியுள்ளார் என்று நீதிமன்றம் பிரகடனம் செய்ய வேண்டும். அத்துடன் இந்த மனு மீதான தீர்ப்பு வரும் வரையில் ஜனவரியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பான எந்தவொரு நடவடிக்கை மீதும் தடையுத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் அந்த ரிட் மனுவில் கோரப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி, 18 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனூடாக ஒருவர் எத்தனை தடவை வேண்டுமானாலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்திருத்தம் தொடர்பில் பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 4 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலேயே, தற்போது அதனைக் குறிப்பிட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ற–5)

# தடை செய்யப்பட்டுள்ளது அரச சொத்துப் பயன்பாடு

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.29

அரச ஊழியர்களுக்கான இடமாற்றம், அரச சொத்துப் பயன்படுத்தல், அரச ஊழியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து, தேர்தல் முடிவுகள் வெளியாகிய பின்னரான இரு வாரங்களுக்கு இந்த நடைமுறை பின்பற்றப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சகல திணைக்களத் தலைவர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோருக்கு தேர்தல்கள் ஆணையாளரால் விசேட சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போது எந்தவொரு வேட்பாளரையாவது ஊக்குவிக்கும் வகையில் அல்லது ஒரு வேட்பாளரையாவது வீழ்த்தும் வகையில் அரச ஊழியர்கள் செயற்படக் கூடாது. இந்தக் காலப் பகுதியில், ஜனாதிபதித் தேர்தலை நோக்காகக் கொண்டு எந்தவொரு அரச நியமனமும் வழங்கப்படக் கூடாது. ஏற்கனவே வழங்கத் திட்டமிடப்பட்டிருந்த நியமனங்கள் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்திடம் அனுமதி பெற்று வழங்க வேண்டும். - என்று அதில் கூறப்பட்டுள்ளது.

அரச ஊழியருக்கு இடமாற்றம், பதவி உயர்வு என்பன மேற்கொள்ளக் கூடாது. அத்துடன் அரச வாகனங்கள், அலுவலகங்கள், கட்டடங்கள் போன்றவற்றை தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார். (ற-5)

### சர்வதேச

தேர்தலில் வெற்றி பெற்ற பின்னரும் மஹிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, நாட்டை மீட்ட முப்படையினர் உட்பட அனைவரையும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்ட புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பாதுகாப்பேன் என்று உறுதியளிக்கின்றேன்.

எனது கையில் ஆட்சி ஒப்படைக்கப்பட்டால், நிச்சயமாக பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவேன். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொறுப்புக்கூறலை வெளிப்படுத்த முடியும்.

**கட்டவுட்கள் இல்லை**

நாம் எமது தேர்தல் பிரசாரத்தில் பொலித்தீன், கட்டவுட், போஸ்டர்கள் போன்றவற்றை பயன்படுத்தப் போவதில்லை.

நீங்கள் கட்டவுட்டுக்கள், போஸ்டர்களின் எண்ணிக்கையைப் பார்த்து வாக்களிக்க வேண்டாம். கொள்கையைப் பார்த்து வாக்களியுங்கள். எங்களின் கொள்கையுடன் உடன்பட்டால் நீங்கள் எங்களுக்கு வாக்களியுங்கள்.

எதிர்வரும் சில நாள்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாக வுள்ளதால் பரீட்சை நிலையங்கள் நடைபெறும் இடங்களை அண்மித்த பகுதிகளில் எந்தவொரு பரப்புரை நடவடிக்கையும் முன்னெடுக்க வேண்டாம் என்று எனது ஆதரவாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன் - என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய, ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர், ராஜித சேனாரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-5)

### மருத்துவமனை முன்பாக சைக்கிள் திருட்டு

யாழ். போதனா மருத்துவமனை முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மணியங்குளம் பகுதியைச் சேர்ந்தவரது சைக்கிளே திருடப்பட்டுள்ளது (வ-4)


## அறிவித்தல்



**சுவாமியே! சரணம் ஐயப்பா!**

வேலணை கந்தன் கடவை பெரும்படை ஸ்ரீஹரிகரபுத்திர ஐயனார் ஆலயத்தில் சபரிமலை ஐயப்ப சுவாமிமார்களுக்கும், அடியார்களுக்கும் 60 நாள்களும் அன்னதான பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இப் பணியை பக்தர்கள், வேலணை மக்கள், மலாயன் கபே நிறுவனமும் இணைந்து சிறப்பாக நடைபெறுகின்றது.

அனைவரும் வருக ஐயனின் அருளைப் பெறுக!

வாழ்க வளமுடன்

(54465) (10.6)

நிர்வாகத்தினர்.


## பருத்தித்துறை நகராட்சி மன்றம் வரவு செலவுத்திட்டம்-2015

நகரசபை கட்டளைச்சட்டம் 255 ஆம் அதிகாரம் பிரிவு 178 (3) இற்கமைவாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் **01.12.2014 ஆம் திகதியிலிருந்து 05.12.2014 ஆம் திகதி வரை** பொதுமக்கள் பார்வைக்காக நகராட்சி மன்ற அலுவலகத்தில் வைக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**நகராட்சி மன்றம், பருத்தித்துறை.**

சபா.ரவீந்திரன் (J.P.U.M)
நகரபிதா
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.
(சி18036)(4.6.3)

## அறிவித்தல்



இதுவரை காலமும் எமது நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதியாக கடமையாற்றிய **விஸ்வலிங்கம் சண்முகநாதன்** (தே.அ.அ.இல. 550402360 V) என்பவர் நேற்று (28.11.2014) வெள்ளிக்கிழமையிலிருந்து பணிவிலக்கப்பட்டுள்ளார் என்பதை அறியத்தருவதோடு, இனிவரும் காலங்களில் மேற்படி நபருடன் மேற்கொள்ளப்படும். கொடுக்கல் வாங்கல் அனைத்துக்கும் நாங்கள் பொறுப்பல்ல என்பதையும் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

**Jaffna Electricals**
**No.94 (06) Stanley Rd, Jaffna.**
**T.P: 021 222 2353**

(C/18040) (10.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**மு/சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை - புதுக்குடியிருப்பு**

**2014 - தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மேலும் சித்தியடைந்தவர்கள்**



நிற்பவர்கள் இ.வலமாக:
**க.விதுர்ஜன் - 150**
**சி.துவாரகன் - 150**
**த.ஆகீசன் - 152**
**இ.திருக்குழலி - 152**

Congratulations

இருப்பவர்கள் இ.வலமாக:
**திருமதி சி.சந்திரமோகன் (ஆசிரியர்), ந.அமலசேகர் (ஆசிரியர்), இ.செல்வநாயகம் (அதிபர்), இ.சிவகுமார் (பிரதி அதிபர்), சி.சிவநாதன்(ஆசிரியர்)**

எமது பாடசாலையில் மேலும் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன், இவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்: மு/சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை**


## INVITATION FOR BID MUNICIPAL COUNCIL JAFFNA

1. The Commissioner, Department Procurement Committee on behalf of the Jaffna Municipal Council, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).
5. Interested bidders may obtain further information from **Works Engineer's Office, Jaffna Municipal Council ( T.No: 021-2222019 , FAX - 021-2222334)** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 16.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Works Engineer's Office, Jaffna Municipal Council from 02.12.2014 until 09.12.2014 from 9.00 hrs to 14.00 hrs upon payment of a non-refundable fees of Rs.2,000.00**. The method of payment should be by cash.
7. Bids shall be delivered or sent by registered post to the **Commissioner, Jaffna Municipal Council on or before 14.30 hrs on 10.12.2014** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Bid No | Description of Work | Estimated Cost / (Rs in million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period |
| JMC/WD/GF/ 2014/6 | Construction of Basket Ball Court at Old Park, Jaffna | 2.46 | 45 days | C8 or above (High way construction) | 25,000.00 | 91 days (till 11.03.2015) |

*Commissioner,*
*Municipal Council,*
*Jaffna.*

(C/18038)(10.6)

# நிலைகுலைந்தது பாகிஸ்தான் அணி



பாகிஸ்தான்–நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்றயதினம் சார்ஜாவில் ஆரம்பமானது. ஏற்கனவே 1:0 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி தொடரில் முன்னிலை வகிக்கிறது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கியவர்களில் மசூட் 12, யுனிஸ்கான் 5 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தாலும் மறுமுனையில் ஹபீஸ் தனித்து நின்று போராடி சதத்தை நிறைவு செய்தார். ஹபீஸ், மிஸ்பா நிதான ஆட்டத்தை வெளிப் படுத்தி தமக்குள் 121 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து பாகிஸ்தானை சரிவில் இருந்து மீட்க பாகிஸ்தான் ஒரு கட்டத்தில் 3 இலக்கு இழப்பிற்கு 283 ஓட்டங்களை பெற்றிருந்தது. திடீரென கிறைக்கின் வேகம் எழுச்சியடைய பாகிஸ்தானின் இலக்குகள் அடுத்தடுத்து பறிபோக ஆரம்பித்தது. ஷபிக் 11, அஹ்மட் 15, சாஜ் 25, ரில்கா 0, அலி 0, என அடுத்தடுத்து கிறைக்கின் பந்தில் வெளியேற சில நிமிடங்களில் ஆட்டத்தின் போக்கே மாறியது. பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக் கையும் இழந்து 351 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிகபட்சமாக ஹபீஸ் 197, அலி 39, மிஷ்பா 38 ஓட்டங்களைப் பெற்றனர்.
பந்து வீச்சில் நியூஸிலாந்து சார்பாக கிறைக் 7 இலக்கையும் விக் டோரி, சௌத்தி, சொட்ஹி ஆகியோர் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு முதல் இன்னிங்சை ஆரம்பித்த நியூஸிலாந்து அணிக்கு அதன் ஆரம்ப வீரரான லாதம் 13 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றினாலும் தொடர்ந்து வந்த வில்லியம்சனுடன் மக்கலம் ஜோடி சேர்ந்து அதிரடியாக ஆடி 198 ஓட்டங்களைப் பகிர இரண்டாம் நாள் ஆட்ட நேர நிறைவில் நியுஸிலாந்து அணி 1 இலக்கு இழப்பிற்கு 249 ஓட்டங்களை பெற்றுள்ளது. மக்கலம் 153 ஓட்டங்களையும் வில்லியம்சன் 76 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.
(த–ரி)

# வங்கப் புலிகளிடம் பணிந்தது சிம்பாப்வே

பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் நான்காவது போட்டி மிர்பூரில் நேற்றையதினம் இடம்பெற்றது. இந்த இரு அணிகளுக்கிடையிலான முதல் மூன்று போட்டிகளையும் பங்களாதேஷ் அணி வெற்றிகொண்டு தொடரைக் கைப்பற்றியுள்ள நிலையில் தொடரை வெள்ளையடித்துக் கைப்பற்றவேண்டுமாயின் இந்தப் போட்டியிலும் வெற்றி பெறும் நோக்கில் பங்களாதேஷும் இதிலிருந்து தப்பிக்கப் போட்டியை வென்றாகவேண்டும் என்ற கட்டாயத்தில் சிம்பாப்வேயும் களமிறங்கின.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி ஆரம்பவீரர்களாக களமிறங்கியவர்கள் உட்பட முன்னிலை வீரர்கள் எவருமே நிலைக்கத் தவறி ரமீம் 16(34), ஹக்கியூ 5(12), ஹயீஸ் 5(18), சஹிப் அல் ஹசைன் 1(4) என சொற்ப ஓட்டங்களுடன் அடுத்தடுத்து வெளியேற ஒரு கட்டத்தில் பங்களாதேஷ் அணி 12.2 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்பிற்கு 32 ஓட்டங்களைமட்டுமே பெற்றிருந்தது. மத்திய வரிசை வீரர்களான முகமதுல்லா மற்றும் றஹீம் நிலைமையை உணர்ந்து சற்று நிதானத்தை கையிலெடுத்து தமக்குள் இணைப்பாட்டமாக 134 ஓட்டங்களைப் பகிர அணி சற்று கௌரவமான நிலைக்குச் சென்றது. 37.3 ஓவர்களில் அணியின் ஓட்டம் 166 ஆக இருந்த போது றஹீம் 77(78) ஓட்டங்களுடன் வெளியேறினார். 9ம் இலக்க வீரரான மோர் ரசாவும் தன்னால் இயன்ற பங்களிப்பை அணிக்கு வளங்க பங்களாதேஷ் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது. இறுதி வரைஆட்டமிழக்காதமுகமதுல்லா 82 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் சிம்பாவே சார்பாக மட்சிபா மற்றும் மிறி ஆகியோர் தலா 3 இலக்கையும் கமுன்கோசி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
257ஓட்டங்களைப்பெற்றால்வெற்றி எனும்இலக்கைநோக்கிபதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணியின் முன்னணி வீரர்களான மசகட்ஷஜ 28(40), சிபென்டா 17(27), மறுமா 06(19) என குறைந்த ஓட்டங்களுடன் வெளியேறி சற்று ஏமாற்றம் கொடுத்தனர். முதல் மூன்று இலக்கையும் சிம்பாவே 60 ஓட்டங்களிலேயே பறிகொடுத்தது. வெள்ளையடிப்பை தடுக்கும் நோக்குடன் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய மத்திய வரிசை வீரர்களான ரெய்லர் மற்றும் மிறி தமக்குள் இணைப்பாட்டமாக 106 ஓட்டங்களைப்பகிர அணியின் நான்காவது இலக்குக்காக மிறியின் இலக்கு 166 ஓட்டங்களிலேவீழ்த்தப்பட்டது. இணைப்பாட்டம் பிரிக்கப்பட்ட அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே ரெய்லரும் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த வீரர்களும் நிலைக்கத் தவறி மூர் 13(25), மடசிபா 3(4) என அடுத்தடுத்து வெளியேற சிம்பாவேஅணி 50 பந்துப்பரிமாற்றங்கள்நிறைவில் 8 இலக்கு இழப்பிற்கு 235 ஓட்டங்களை மட்டுமே பெற்றுதோல்வியடைந்தது.
பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக சகிப் அல் ஹசைன், றாபல் கொசைன், யுபைர் கொசைன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் மோர்ரசா 1 இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக முகமதுல்லா தெரிவானார்.
5 போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்களாதேஷ் அணி 4:0 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.
இவ்விரு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் டாக்காவில் இடம்பெறுகின்றது. (த–ரி)




## ஹியூக்ஸின் நிறைவேறாத ஆசை

பிலிப் ஹியூக்ஸ், ஆஸ்திரேலிய தந்தை கிரேக்– இத்தாலி தாயார் விர்ஜினியா தம்பதியின் மகன் ஆவார். 1988 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் மாக்ஸ்வில்லே என்ற சிறிய நகரத்தில் பிறந்தார்.
உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடி திறமையை வளர்த்த பிலிப் ஹியூக்ஸ் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஆஸ்திரேலிய அணியில் இடம் பிடித்தார். 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஜோகனன்ஸ்பர்க்கில் நடந்த டெஸ்டின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அடியெடுத்து வைத்தார். அவர் ஆஸ்திரேலிய அணிக்காக பங்கேற்ற 408ஆவது டெஸ்ட் வீரர் ஆவார். அந்த டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் 4ஆவது பந்தில் டக்–அவுட் ஆன ஹியூக்ஸ் 2ஆவது இன்னிங்ஸில் 75 ஓட்டங்கள் எடுத்தார்.
இதைத் தொடர்ந்து டர்பனில் நடந்த 2ஆவது டெஸ்டில் இரண்டு இன்னிங்ஸிலும் (115 , 160) சதம் விளாசி எல்லோரது கவனத்தையும் ஈர்த்தார். அப்போது அவரது வயது 20 ஆண்டு 96 நாள்கள். டெஸ்டில் இரண்டு இன்னிங்ஸிலும் சதம் அடித்த இளம் வீரர் என்ற புதிய உலக சாதனைக்கும் சொந்தக்காரர் ஆனார்.
ஆனாலும் அவரால் அணியில் நிலையான இடத்தை பிடிக்க முடியவில்லை. அணியில் இடம் பிடிப்பதும், வெளியேற்றப் படுவதுமாக இருந்தார். கடந்த மாதம் 12ஆம் திகதி டுபாயில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட்டில் பங்கேற்றதே அவர் விளையாடிய கடைசி சர்வதேச போட்டி. அதில் அவர் 5 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.
பிலிப் ஹியூக்ஸ் இதுவரை 26 டெஸ்டில் விளையாடி 3 சதம், 7 அரைசதம் உள்பட 1,535 ஓட்டங்களும் (சராசரி 32.65), 25 ஒரு நாள் போட்டிகளில் 2 சதம், 4 அரைசதத்துடன் 826 ஓட்டங்களும் (சராசரி 35.91), 20 பந்துப் பரிமாற்ற போட்டியில் ஒன்றில் விளையாடி 6 ஓட்டங்களும் எடுத்துள்ளார். இதே போல் முதல்தர கிரிக்கெட் போட்டியில் 114 ஆட்டங்களில் 26 சதத்துடன் 9,023 ஓட்டங்கள் குவித்துள்ளார்.
பிலிப் ஹியூக்ஸின் தந்தை கிரேக் ஆஸ்திரேலியாவில் வாழை தோட்டம் வைத்து உற்பத்தி செய்து வருகிறார். தனது தந்தையின் வாழைப் பண்ணைக்கு ஹியூக்ஸ் அடிக்கடி செல்வார். அப்போதெல்லாம் அவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு தந்தையின் வாழைத்தோட்டத்துடன், பெரிய மாட்டுப்பண்ணையும் வைக்க ஆசைப்படுவதாகவும், அதுவே தனது கனவு என்றும் கூறுவார். ஆனால் விதி அவரது வாழ்க்கையில் வேறு விதமாக விளையாடிவிட்டது. ஹியூக்ஸ் எப்போதும் பவுன்சர்' எனப்படும் ஆள் உயரத்திற்கு எகிறி வரும் பந்துகளைச் சமாளிப்பதில் தடுமாறுவது உண்டு. தொடர்ந்து பவுன்சர் பந்து வீச்சுக்குத் திணறியதால் ஒரு முறை ஆஷஸ் தொடரில் இருந்தும் கழற்றி விடப்பட்டார். கடைசியில் அப்படிப்பட்ட ஒரு பவுன்சர்' பந்தே அவரது உயிரைக் குடித்து விட்டது.
(த)



## ஹியூக்ஸிக்கு அஞ்சலி

அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்றையதினம் இடம்பெற்ற ஐ.சி.சி யின் மூன்று போட்டிகளிலும் பங்கெடுத்த வீரர்கள் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் கறுப்புப் பட்டிகளை அணிந்துகொண்டு பங்கெடுத்தனர்.
நேற்றையதினம் இடம்பெற்ற ஐ.சி.சி யின் உத்தியோகபூர்வமான போட்டிகளான பாகிஸ்தான் மற்றும் நியூஸிலாந்து, பங்களாதேஷ் மற்றும் சிம்பாவே, ஐக்கிய அரபு ராட்சியம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையிலான போட்டிகளில் பங்கெடுத்த வீரர்கள் அனைவரும் போட்டிகள் ஆரம்பமாக முதல் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் கைகளில் கறுப்புப் பட்டிகளை அணிந்தவாறு பங்கெடுத்ததுடன் மைதானத்தில் ஹியூக்ஸிற்கு அனுதாப பதாகைகளும் வைக்கப் பட்டிருந்தன.
ஹியூக்ஸின் இறப்பிற்கு உலகெங்கிலும் உள்ள துடுப்பாட்ட வீரர்கள் தமது அனுதாபங்களைத் தெரிவித்து வருகின்றனர். (த–ரி)

# சாதனைகளில் புரளும் மெஸ்ஸி




சம்பியன்ஸ் லீக் உதைபந்துப் போட்டியில் அதிக கோலடித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் ஆர்ஜென்ரீனாவின் லயோனல் மெஸ்ஸி.
சைப்பிரஸின் நிகோஸியா நகரில் நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் ஆட்டத்தில் மெஸ்ஸி தலைமையிலான பார்சிலோனா அணியும், ஏபோல் நிகோஸியா அணியும் மோதின.
இந்த ஆட்டத்தின் 37ஆவது நிமிடத்தில் கோலடித்த மெஸ்ஸி 72 கோல்களுடன் சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் அதிக கோலடித்தவர் என்ற சாதனையைப் படைத்தார்.
முன்னதாக ஸ்பெயினின் ராவ்ல் 71 கோல்கள் (142 ஆட்டங்கள்) அடித்ததே சாதனையாக இருந்தது.
கடந்த சில தினங்களுக்கு முன்பு ஸ்பெயின் லீக்கில் அதிக கோலடித்தவர் என்ற சாதனையைப் படைத்த மெஸ்ஸி, இப்போது அடுத்த சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். (த)



# சீன் அபாட்டுக்கு குவியும் ஆறுதல்

பிலிப் ஹியூக்ஸுக்கு பவுன்சர் வீசிய நியூசவுத் வேல்ஸ் பவுலர் சீன் அபாட் துயரார்ந்த மனநிலையில் இருப்பதால் அவருக்கும் ஆறுதல்கள் குவிகின்றன.
ஒரு புறம் பிலிப் ஹியூக்ஸ் மரணம் ஏற்படுத்திய சோகம், அதிர்ச்சியினால் அவரது குடும்பத்தினருக்கு அனுதாப மழை பொழிய, பவுன்சர் வீசிய சீன் அபாட்டுக்கும் ஆறுதல்கள் பெருகியுள்ளன.
சமூக வலைத்தளங்களில் 'முற்றிலும் உடைந்து போன' சீன் அபோட்டுக்கு கிரிக்கெட் வட்டாரத்திலிருந்து ஆறுதல்கள் குவிந்து வருகின்றன. சீன் அபாட் வீசிய பவுன்சரை ஆடிய போது பிலிப் ஹியூக்ஸின் பின் மண்டையை பந்து தாக்கியதால் குருதிப் போக்கு ஏற்பட்டு அவர் சாவடைந்தார்.
அன்றைய தினத்தில் பிலிப் ஹியூக்ஸ் நிலைகுலைந்து விழுந்த போது அவர் அருகில் மிகுந்த வேதனையோடு அவருக்கு உதவ வந்தவர் சீன் அபாட்.
சீன் அபாட் செயிண்ட் வின்செண்ட் மருத்துவமனைக்குச் சென்று பிலிப் ஹியூக்ஸ் குடும்பத்தினரைச் சந்தித்தார். அவர் மருத்துவமனைக்கு வந்தபோது அணித் தலைவர் மைக்கல் கிளார்க் அவருடன் நீண்ட நேரம் பேசி ஆறுதல் கூறினார். பிலிப் ஹியூக்ஸின் சகோதரி மீகனும் சீன் அபாட்டுக்கு மன ஆறுதல் அளித்தார்.
நிச்சயம் சீன் அபாட்டுக்கு ஹியூக்ஸின் சாவு பெரிய துர்கனவாகவே அமைந்திருக்கும். அவருக்கும் ஆறுதல் அளிக்க கிரிக்கெட் உலகம் கடமைப்பட்டுள்ளது என்று கிரிக்கெட் ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.
இதனிடையே முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பிலிப் ஹியூக்ஸ் சாவுக்கு அஞ்சலி குறிப்பு வெளியிட்டதோடு, பவுன்சர் வீசிய சீன் அபாட்டுக்கும் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர்.
சீன் அபாட்டை அவர் இப்போது இருக்கும் துயரார்ந்த மனநிலையில் விட்டுவிடக்கூடாது என்று பல கிரிக்கெட் வீரர்களும் ஆறுதலாகக் கருத்து தெரிவித்துள்ளனர். (த)



## ஒன்பது ஆண்டு கால தோழியை கரம் பிடிக்கிறார்

# அண்டி முர்ரே

பிரிட்டன் ரென்னிஸ் வீரரான அண்டி முர்ரே தனது 9 ஆண்டு காலத் தோழியான கிம் சியர்லச திருமணம் செய்து கொள்ள போவதாக அறிவித்துள்ளார்.
ஸ்கொட்லாந்தில் உள்ள டன்பிளேனில் முர்ரேயின் இல்லத்தில் வசிக்கும் குடும்பத்தினரிடம் அவர் இந்தச் செய்தியை தெரிவித்துள்ளார்.
அவரது 83 வயது பாட்டியான ஷிர்லி எஸ்கைய்னிடம் இந்த விடயத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முர்ரே கூறியபோது, திருமணத்துக்கான நேரம் வந்து விட்டது என்று அவர் நகைச் சுவையுடன் கூறியுள்ளார்.
இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஷிர்லி, நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்துள்ளோம். கிம் மிகவும் அன்பான பெண் என்று கூறியுள்ளார்.
அவரது தாத்தா ராய் கூறுகையில்; அண்டி தொலைபேசியில் எங்களை அழைத்து கிம்மிடம் தனது விருப்பத்தைக் கூறியதாகத் தெரிவித்தார் என்று கூறியுள்ளார்.
கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியிலும், 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற யு.எஸ். ஓபன் ரென்னிஸ் போட்டியிலும் முர்ரே கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது. (த)


# பீலேயின் உடல் நிலை மோசம்



உதைபந்து ஜாம்பவான் பீலேயின் உடல்நிலை திடீரென மோசம் அடைந்துள்ளது.
பிரேஸில் உதைபந்து அணியின் முன்னாள் தலைவர் பீலே–74.
மூன்று முறை உலகக் கிண்ணம் வென்ற அணியில் இடம்பெற்ற பெருமைமிக்க இவர், ஒட்டு மொத்தமாக 1,363 போட்டிகளில் 1,281 கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ளார்.
சமீபத்தில் சிறுநீரகத்தில் கற்களை அகற்ற சத்திர சிகிச்சை மேற்கொண்டார். பின் சிறுநீரக பாதையில் கிருமித் தொற்று ஏற்பட, பிரேசிலின் சாவ் பாலோவில் உள்ள ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவரது உடல்நிலை நேற்றுத் திடீரென மோசமடைந்தது. இதையடுத்து சிறப்பு பிரிவுக்கு மாற்றப்பட்டார்.
இது குறித்து மருத்துவமனையின் செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்; பீலே அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்படவில்லை. அவரைத் தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டுச் சிறப்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்– என்றார். (த)

# செய்திகள்


55 ஆவது ஆண்டு
நிறைவு நன்றி செலுத்தும் ஆராதனை



எபெனேசர் - இதுவரைக்கும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். I சாமுவேல் 7 : 12

சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்.

ஆண்டவருடைய கிருபைகளுக்காக நன்றி செலுத்துகின்றோம்.

நன்றி செலுத்தும் ஆராதனை 29.11.2014 (சனிக்கிழமை) காலை 10மணிக்கு தலைமை ஆலயத்தில் நடைபெறும்.

1959 - 2014

மூப்பர்கள், போதகர்கள், ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள்,
இல 24, இராமையார் செட்டியார்
ஒழுங்கை, யாழ்ப்பாணம்


## சென்னை ரசிகர்கள் கொதிப்பு

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியதையடுத்து ரசிகர்கள் புலம்பி வருகின்றனர்.

சென்னை அணியை ஐ.பி.எல்லில் இருந்து நீக்குவது குறித்து பரிசீலிக்குமாறு உச்ச நீதிமன்றம் தடாலடியாக கூறியுள்ளது. இது ரசிகர்களுக்கு அதிர்ச்சியாக அமைந்துள்ளது.

ஐ.பி.எல்லில் சென்னை இல்லையா சென்னை இல்லையென்றால் ஐ.பி. எல்லே இல்லையே என ரசிகர்கள் இணையத்தில் தங்கள் கருத்துகளையும் தெரிவித்து வருகின்றனர். (த)


காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம், கீரிமலை வீதியில் இரண்டு பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 561 6110 (41569) (45.3.5)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

சிங்கப்பூர் வேலைவாய்ப்பு

இலங்கை வரலாற்றில் முதன் முதலாக சிங்கப்பூரில் 18வருடங்கள் வேலை செய்து உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஜெயலத் நிறுவனத்திடமிருந்து ஓர் அரிய வாய்ப்பு. சிங்கப்பூர் அரசின் (BCA) கட்டட நிர்மாணத்துறை ஜெயலத் ஷூதென்ங் லங்கா நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் 100% சிங்கப்பூர் வேலைவாய்ப்பு உத்தரவாதம் தரும் ஓர் பயிற்சிநெறி. ஏற்கனவே எங்கள் மூலம் யாழ்.இளைஞர்கள் பயனடைந்து சிங்கப்பூரில் பணிபுரிந்து வருவதை நிரூபித்துள்ளோம்.

தொடர்பு: 94, 4ஆம் குறுக்குத்தெரு, அடைக்கலமாதா ஆலயவீதி, யாழ்ப்பாணம். (சி18034) (12.3.6)
021 750 3503, 077 726 3181
தலைமைக்காரியாலயம், 011 750 3503

உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனை ஜெயலத்

கட்டார் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் Cleaners 20 பேர் உடன் தேவை. Salary 900 +OT
உணவு, தங்குமிடம் என்பன முற்றிலும் இலவசம்

முதல் முறையாக கட்டார் செல்லும் சாரதிகளுக்கு (1st time Drivers) Campo International School இல் வேலைவாய்ப்பு. Salary 1200+
தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.

| | | | |
|---|---|---|---|
| Electrician | - 1400+OT | Meson | - 1400+OT |
| Plumper | - 1400+OT | Carpenter | - 1400+OT |

மேற்குறிப்பிட்ட வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன. தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம். எதிர்வரும் முதலாம், 2ஆம் திகதிகளில் கொழும்பு கிராண்ட்பாஸில் உள்ள எமது நிறுவனத்தில் நேர்முகத் தேர்வு இடம்பெறும். (C17913)(10.6.3)

உடன் தொடர்பு கொள்ள
Lanka Voice, 26/2, Station Road, Vavuniya.
T.P: 0777 929475, E-mail: lankavoicenafees@gmail.com
Capital Recruitment International (Pvt) Ltd
No: 130 3/1, 3rd Floor, Grandpass, Colombo-14.
LL No.2248

நீங்களும் வானொலி அறிவிப்பாளராக, ஊடகவியலாளராக

சர்வதேசத்தில் உங்கள் குரல் ஒலிக்க வேண்டுமா? இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இணைய வானொலிக்கு அறிவிப்பாளர்கள், பிராந்திய செய்தியாளர்கள் உடன் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர். தங்களின் விண்ணப்பங்களை E-mail மூலம் அனுப்பி வையுங்கள்.
northmassmediacollege@gmail.com

உடன் தொடர்புகொள்ள
North Mass Media College
077 792 9475 (சி/17914) (4.6.3)
Now Listen: www.ezhuchchi.com/lk

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள். ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஒரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். பதிவுசெய்க 29,30.11

குறிப்பு: வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்.

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி ➔ புகையிரதகடவை ➔ AF or ஆரியகுளத்திலிருந்து ஸ்ரான்லிறோட் ➔ AF

முன் மாதிரியான யாழ் மண்ணோடு வேரோடிப்போன பல்வேறு சமூக நலக் கைங்கரியங்களில் தன் கைதோய்ந்த விசா ஆலோசனை நிறுவனமான

திசைகாட்டியின் முழுமையான ஆதரவில்



திசைகாட்டி குழுமத்தலைவர்
எஸ். சுபசீலன்

முத்த முச்சான வீச்சான துணிச்சலான ஊடகவியலாளர்

N.வித்தியாதரன்

அவர்களின்

"என் எழுத்தாயுதம்" நூல் அறிமுகவிழா




தலைமை-ம.வ.கானமயில்நாதன்
(பிரதம ஆசிரியர் உதயன்)

இடம்: இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நீராவியடி யாழ்ப்பாணம்

காலம்: நாளை 30.11.2014 பி.ப. 4.30

வரவேற்புரை: சி.சுபசீலன் (தலைவர் திசைகாட்டி குழுமம்)

வாழ்த்துரைகள்:
- கௌரவ மாவை சேனாதிராஜா (நா.உ) (தலைவர்- இலங்கைத் தமிழரசுக்கட்சி)
- கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் (நா.உ) (தலைவர்-E.P.R.L.F)
- கௌரவ செல்வம் அடைக்கலநாதன் (நா.உ) (தலைவர்-ரெலோ)
- கௌரவ த.சித்தார்த்தன் (நா.உ) (தலைவர்-புளொட்)
- கௌரவ மு.சந்திரகுமார் (நா.உ) (ஈ.பி.டி.பி)

சி.பாஸ்கரா (கொழும்பு மாநகரசபை)

மதிப்புரை : கவிஞர் சோ.பத்மநாதன்

நயவுரைகள்: சூ.யதீந்திரா (அரசியல் பத்தி எழுத்தாளர்)
எ.நிக்ஸன் (மூத்த ஊடகவியலாளர்)

நெறியாள்கை: வை.யோகேஸ்வரன்

சிறப்புப்பிரதி: Prof. R.சிவசந்திரன்
R.குமரன் (சயன்ஸ் வேர்ல்ட்)
ப.சிவபாஸ்கரன் (சாரங்கா)
வீ.ஸ்ரீதரன் (கொனிக்கா கலர்லாப்)
M.S.சந்திரபோஸ் (பொஸ்கோ)
E.S.P.நாகரட்ணம்

(சி/18030)(4.3.6)

திசைகாட்டிக்குழுமமும் வெளியீட்டுக்குழுவும்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.